தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண்: 207

# சோமயாகப் பெருங்காவியம்

(முத்தாண்டியா பிள்ளைக் கவிராயர் இயற்றியது)

★



★

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதிமகால் நூல் நிலையம்,
தஞ்சாவூர்.

1985 ★ விலை ரூ. 8/-

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண். 207

# சோமயாகப் பெருங்காவியம்

(முத்தாண்டியா பிள்ளைக் கவிராயர் இயற்றியது)

பதிப்பாசிரியர் :

**புலவர் வி. சொக்கலிங்கம்,**

தமிழ்த்துறை,

சரசுவதி மகால் நூல்நிலையம், தஞ்சாவூர்.



**தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்**

**சரசுவதி மகால் நூல் நிலையம்,**

**தஞ்சாவூர்.**

1985 விலை ரூ. 8/-

முதற் பதிப்பு 1985

★

வெளியீடு :

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம்,
தஞ்சாவூர்.

★

பதிப்பகம் :

திருவள்ளுவர் அச்சகம், தஞ்சாவூர்.

# வெளியிடுவோர் உரை

" விலையுயர்ந்த முத்துக்களும் மணிகளும் கடலின் ஆழத்தில் இருக்கின்றன" என்பான் ஆங்கிலக் கவிஞன். அதுபோல, அரிய பெரிய நூல்களெல்லாம் அரிய மூலபண்டாரமாகிய, தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் தொடர்ந்து சேகரித்து வைக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஒன்றுதான் ' சோமயாகப் பெருங்காவியம் '.

" அபுத்ரஸ்ய கதிர் நாஸ்தி அதாவது" பிள்ளைப் பேறில்லா தார்க்கு வீடுபேறில்லை என்பதாம். அதனால் வருந்துவோர் பலர். அவ்வாறு வருந்தியவன், இந்நாலுடைத் தலைவன் ' காமாட்சி என்பான்.

அவன், சோமயாகம் செய்து மகப்பேறடைந்த வரலாற்றைக் கூறும் இந்நூலை, மிக்க ஆர்வத்துடன், பல நூல்களையும் ஆய்ந்து ஒப்புமை கண்டு சிறந்த ஆய்வு முன்னுரையுடன் பதிப்பித்துள்ள, எமது மகால் தமிழ்த்துறைத் தலைவர், திருவாளர், புலவர் வீ. சொக்கலிங்கம் அவர்கட்கு எமது பாராட்டுக்களும், நன்றியும் உரித்தாகின்றன.

இந்நூலை, எமது நூலகத்திற்கு அன்பளிப்பாகத் தந்துதவிய திருவாளர் திரு. குருநாதன் அவர்கட்கு, எமது நன்றி உரித்தாகிறது. இதனை நன்கு அச்சிட்டுத்தந்த, தஞ்சை திருவள்ளுவர் அச்சகத்தாருக்கும் ஏனையோருக்கும் எமது நன்றி உரித்தாகிறது.

இதுபோன்ற அரிய நூல்களைப் பதிப்பிக்க ஆண்டுதோறும் பொருளுதவி செய்து, ஊக்குவிக்கும் மைய அரசுக்கும் எமது நன்றி உரித்தாகிறது.

இதுபோன்ற சுவடிகளைத் தம்மிடம் பெற்றுள்ளவர்கள்; அவற்றை எம்மிடம் அன்பளித்துதவினால், இதுபோன்ற நூல் வடிவில் வெளியிட்டு, மக்கள் பயனடையச் செய்து, அதன்மூலம் சிறப்படைவார்கள். எனவே தம்மிடமுள்ள சுவடிகளை எம்முடைய சரசுவதி மகாலுக்குக் கொடுத்துதவ வேண்டுகிறேன்.

இங்ஙனம்

தஞ்சாவூர்
24—2—85

**டி. ஆர். இராமசாமி**, இ. ஆ. ப.
மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம்

# பொருளடக்கம்


| | பக்கம் |
| --- | --- |
| முன்னுரை | i—xviii |
| சோமயாகப் பெருங்காவியம் | 1—126 |
| பாட்டு முதற்குறிப்பு அகரமுதலி | 127—136 |
| பிழை திருத்தம் | 137 |
| வேண்டுகோள் | 138 |

# முன்னுரை

"மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழல் உருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே!"

என்பார் திருஞானசம்பந்தப் பெருந்தகையார். "இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களையும், அதன் பொருள்களையும் அருளிச் செய்து, அங்கயற்கண்ணம்மை யாம் மீனாட்சியுடன் சோமசுந்தரக் கடவுள் எழுந்தருளி யுள்ள மதுரை" என்கிறார்.

"வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே!"

என்பதும்,

"வேதமொடு வேள்விபல வாயினமி
குத்துவிதி யாறு சமயம்"

என்பதும் திருஞானசம்பந்தர் வாக்கு

"வேதத்தான் என்பர் வேள்வியுளான் என்பர்"

என்றும்,

"வேதங்கள் வேள்வி பயந்தார் போலும்" என்றும் திருநாவுக்கரசர் கூறுவதால், இறைவன் வேள்வியால் வழிபடப் பெறுகிறான் என்பது பெறப்படுகிறது.

"तस्मात् सर्वगतं ब्रह्म नित्यं यज्ञे प्रतिष्ठितम्"

அதாவது, எங்கும் நிறைந்த பரம்பொருள் இடையறாது யாகத்தில் நிலைத்திருக்கிறது, என்பது பெற்றும். "யாகம்

என்னும் தேவாராதனையானது, முடிவில் பரமேஸ்வரனைக் குறித்துச் செய்யும் வைதிக வழிபாடேயாகும். பரமசிவனை வேள்வியில் அளிக்கும அவியாகிய உணவை ஏற்றுக் கொண்டு, அதற்குரிய பயனையும் அருளுகிறான்.''

எனவே, இதன் விளக்கம் காணும்போது, வேள்வியால் மழையுண்டாகிறது. மழையினால் பயிர்கள் வளர்கின்றன. பயிர்களால் உயிர்கள் வாழ்கின்றன. எனவே உயிர் வாழ்க்கைக்கு 'யாகம்' இன்றியமையாதது. இது பற்றியே வள்ளுவரும், கடவுள் வாழ்த்தில், 'வான் சிறப்பை' வைத்து,

''சிறப்பொடு பூசனை செல்லாது, வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு''

என்றும் கூறினார்.

'அவனருளாலே அவன் தாள் வணங்கி, என்பதுபோல விண்ணவர்க்குப் பூசனை செய்ய வேண்டுமானால் பரமசிவனைக் குறித்து வேள்வி செய்யப்படல் வேண்டும்.

யாகத்தில் 21 வகைகள் உண்டு. 1. அக்கினியாதானம். இதுவே 'அக்கினி ஹோத்திரம்' எனப்படுவது. 2. தரிசபூரண மாசங்கள். 3. பிண்டப் பித்ரு யக்ஞம். 4. ஆக்ரயணம். 5. சாதுர்மாசியம். 6. நிரூட பசு பந்தம். 7. சௌத்திராமணி என, 'அவிர்யக்ஞம்' 7-ம், 1. ஔபாசனம். 2. வைசுவதேவம. 3. ஸ்தாலீ பாகம். 4. ஆக்ரயணம். 5 சர்ப்ப பலி. 6. ஈசான பலி. 7. அஷ்டகான் வஷ்டகா என 'பாக யக்ஞம்' 7-ம், 1. அக்கினிஷ்டோமம். 2. அத்யக்னிஷ்டோமம். 3. உக்த்யம். 4. ஷோடசீ. 5. வாசபேயம். 6. குரு அதிராசம். 7. அப்தோர் யாமம் எனச் 'சோமயாகங்கள்' 7-ம் ஆக 21 ஆம்.

மேலும், உருத்திரயாகம், நறுமணயாகம், க்ஷாமமுடைய யாகம், அழகு விரும்பிச் செய்யும் யாகம்,

நற்குண யாகம், உணவுப்பொருள் குறித்த யாகம் கண்களை விரும்பிய யாகங்கள் என்பனவும் யாகங்களாம்.

மற்றும், புத்திரகாமேஷ்டி யாகம், அஸ்வமேத யாகம். முதலியனவும் நூல்களில் காணப்படுகின்றன. மேலும் பல பிரிவுகள் உள்ளன.

"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்
தான் என்று ஆங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"

என்றாற்போல, வேள்வியில் தேவவேள்வி, தென்புலத்தார் வேள்வி, பூத வேள்வி, மானுட வேள்வி என நான்கு வகை வேள்வியும் உண்டு. இவையேயன்றி செப வேள்வியும் உண்டென்பதை,

'யக்ஞானும் ஜபயக்ஞோ அஸ்மி" என்று கண்ணன் பகவத்கீதையில்", "வேள்விகளுள் நான் செப வேள்வியாய் இருக்கிறேன்" என்கிறார்.

எண்ணிறந்த தமிழ்நூல்களும், புராணங்களும் யாகத்தைப்பறறிக் கூறுதலால், அது ஒருசாரார்க்கே உரித்தன்று. யாவருக்கும், வேதமும் யாகமும் பொதுவே. யாகம்வேட்ட பெருநற்கிள்ளி முதலான மன்னர்களும், பிறரும் யாகம் செய்திருக்கின்றனர். பசுவைக் கொன்று வேள்விசெய்த வரலாறுகளும் உண்டு.

"பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட்டு எரியோம்பும்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம்பலம்"

என்பது திருஞானசம்பந்தரின் திருக்கடைக்காப்பு. பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற் புராணத்து, மாணிக்கம் விற்ற படலத்து,

"மணித்தலை மலையின் பக்கமாய்த்தவன் வயிர வேலாற்
பிணித்துயிர் செகுத்த வள்ளற் பெருந்தகை
யாவாய் வேதம்

பணித்திடும் வபையை வாங்கிப் படமெரி
சுவைமுன் பார்க்கக்
குணித்தவா றுடர்க் கூட்டிக் கோசிலா
வேள்வி செய்தான்''. 34

என்று காணப்படுகின்றது.

யாகத்தாற் போற்றப்படுகிறவன் பரமேசுவரனே யாயினும் ''யக்ஞோ வை விஷ்ணு:'' என்பதனல் வேள்வி விஷ்ணுமயமாகிறது.

யசுர்வேதம்: 'சுக்கில யசுர்வேதம்' என்றும் 'கிருஷ்ண யசுர்வேதம்' என்றும் இரு வகைப்படும். கிருஷ்ண யசுர் வேதத்தில் தைத்திரீய சங்கிதையில் சோமயாகப் பிராமணம் கூறப்படுகின்றது. அதில், ஆறு பிரபாகடங்கள் உள்ளன. அவற்றில் மூன்ருவதில், மேடைகள் அமைத்தல், அக்கினி சோமங்களின் பிரணயனம், கட்டுத்தறி (யூபம்) வெட்டுதல், கட்டுத்தறி நடுதல், தீக்கடைதல், உபாகரணம், சாமிதேனி மந்திரம் கூறுதல், பசுவைக் கொல்வதைக் கூறுதல், வபாஹோமம், அங்கஹோமம், அநூயாஜைகள் ஆகியவைகளைக் கூறும் ''பிராமணங்கள்'' கூறப்பட்டிருத்தல் குறிப்பிடத்தக்கன.

சோமக்கொடியைக் கொண்டுவந்து, அதன் சாறு பிழிந்து வேள்வி செய்தல் 'சோமயாகம்'. ஆனால் பசு, ஆடு முதலானவற்றைக் கொன்று, அதன் வபையை எடுத்து வேள்விசெய்தலும் 'சோமயாகம்' எனப்படுகிறது.

''சமிதா (கொல்கிறவன்) என்று மந்திரத்தில் பொதுவாக இருத்தலின் மிருதியைத் தழுவி, கலியுகத்தில் குயவர்களையே, கடாவைக் கொல்கிறவர்களாகக் கொள்கிருர்கள். இக்காலத்தும் வடதேசத்தில் அந்தணர்களே கொல்கிருர்கள். குயவர்களைக் கொண்டது என்ன ஒத்துமையால் என்பது தெரியவில்லை. பாண்டவர்கள் குயவர் வீட்டில் தங்கியதால் என்பர் சிலர்'' இவ்வாறு, கிருஷ்ண யசுர்வேத தைத்திரீய சங்கிதை த. ப. இராமசாமிப்பிள்ளை பதிப்பு பக்கம் 267-ல் காணப்படுகிறது.

மேலும், அந்நூல் கூறுவதாவது: (11-ம் விநியோகம்) துன்பமின்மையின், அறுத்தும் அறுக்காதது போன்ற இந்த 'வபை' வேள்வித் தலைவனுக்கு, நல்ல வீரர்களான மக்களையும், பேரன்மார்களையும் அளிப்பதுடன் தனத்தையும் அளிக்குக" என்பதாகும.

இதனால் போலும் இந்நூலுடைத் தலைவன், நல்ல வீரர்களான மக்களை வேண்டி, இச்சோமயாகத்தினைப் புரிந்துளான்.

திருவாளர் நா. மகாலிங்கம் அவர்களைக் கௌரவ ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'சக்தி' எனும் (செப்டெம்பர் 84) இதழில் 'சோமயாகம்' பற்றி, திருவாளர் எம். ரவீந்திரன் அவர்கள் ஒரு சிறப்புக் கட்டுரை வெளியிட்டுள்ளார். அதன் சுருக்கம் :

"வேத காலத்திலிருந்த முக்கிய சடங்கு வேள்வி. அதிலிருந்து எழும் புகை, வானவெளியைச் சார்ந்து சுத்திகரித்தது.

தற்போது, திருவனந்தபுரத்தில் ஒரு பெரிய யாகம் நடந்தது. யாகம் முடிந்ததும் பலத்த மழை பெய்தது. யாகம் முடிந்தால் மழை பெய்யும் என்பது பலித்தது. இந்த சோமயாகததிற்குத் தேவையான 'சோமக்கொடி' கொல்லங்கோடு மகாராஜாவால் தரப்பட்டது. எறக்குறைய முல்லைக்கொடி போன்றது. இக்கொடியில் அமாவாசை தினத்தில் மட்டும் இலை இருக்காது. அமாவாசை கழிந்த முதல்நாள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இலையாகத் துளிர்க்கும். பௌர்ணமி அன்று பதினைந்து இலைகள் காணப்படும். பௌர்ணமி முடிந்த மறுநாள் முதல், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இலையாக உதிர்ந்து மறுபடியும் முன்போலத் துளிர்க்கும்.

இவ்வளவு சிறப்பான சோமக்கொடியை இடித்துச் சாறு எடுத்து, அதை ஹோமத்தீயில், சூரியோதயத்திற்கு

முன் 5 நாட்கள் ஊற்றுவர். 6-ம் நாள் விடியற்காலையில் ஆகுதி செய்வார்கள். சோமயாகத்தை நடத்தும் வைதிகரும், அவரது மனைவியும், யாகம் தொடங்குமுன் 'சாவித்திரி விரதமிருந்து, எசமானனும் பத்தினியுமாக ஆகிறார்கள். யாகப் பாத்திரங்கள் மண்ணாலும் மரத்தாலும் ஆனவை. எசமான் அமரும் ஆசனம், கலைமான் தோலால் செய்யப்பட்டது. இந்த யாகமூர்த்தி தட்சணாமூர்த்தி.

முதல் நாள் யாகத்திற்கு வேண்டிய தீயை, இரண்டு மரக்கட்டைகளைக் கொண்டு, கடைந்து, உண்டாக்கி, அத்தீயைக் கொண்டு, ஹோமம் செய்தார்கள். 2-ம் நாள் ஹோம குண்டத்தைக் குதிரையை விட்டுத் தாண்டச் செய்தார்கள். 3-ம் நாள் 'சோமப் பிரயாம்', 'சோமப் பிரவாகம்' முதலிய கிரியைகள் நடந்தன. 4-ம் நாள் 'ஸ்ரீபம்', 'வேதிகரணம்' நடந்தன. 5-ம்நாள் வபாஹோமம் நடந்தது. 6-ம் நாள் சோமாகுதி நடந்தது. 7-ம் நாள் ஏதாவது தவறு நடந்திருந்தால், அதை மன்னிக்கும்படி 'கல்ப பிராயச்சித்த ஹோமம், செய்தார்கள். கடைசியில் சக்தி ஹோமத்தோடு யாகம் நடந்தது. அதற்குப் பின் எல்லாப் பொருள்களையும், யாகசாலையையும் பூரண அக்கினி சமாப்பணம் செய்தனர். இந்த யாகத்தைக் கண்டு களித்த 'பெர்லி' என்ற அமெரிக்கர், வேறு எதுவும் இல்லாவிட்டாலும், இந்த யாகம் என் உடலில், ஒரு புது உணர்சியையும், மனதில் ஒரு அதீதமான அமைதியையும் அளித்தது' என்றார்."

இவ்வாறு அந்த இதழ் கூறுகின்றது.

சோமயாகத்தில் பசுக்கொலை சொல்லப்படுகிறது. இதுபற்றி ஆராயும்போது. "ஈண்டு யாகமென்பது தேவாராதனை. யாகத்தில் பாவமாகியபசுக் விலங்கின் கொலைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. 'அக்கினிசோமப் பசுவைக் கொல்லுக' என்பது முதலிய விதிகள் வெளிப் படை. அற்றேல் கொலைத்தொழில் வேதத்தால் விலக்கப் படினன்றே பாவமாகும். ஆம், விலக்கப்பட்டிருக்

கின்றது. அதையும், 'ஓருயிரையும் கொல்லற்க' என்பது முதலிய விலக்கு விதிகளில் காண்க. இப்பொருளையே,

> “நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
> கொன்றாகும் ஆக்கம் கடை” எனப் பொதுவாகவும்,

> “அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
> உயிர்செகுத்து உண்ணாமை நன்று” என்று

சிறப்பாகவும், தெய்வநற்றமிழ்த் திருவருண்மறையுந் தெரிவிக்கின்றது. மற்றும், இவ்வாறே,

> “கொலையாதி அகன்றொழுகும் தவங்கள் தாமே
> குற்றமிலா நற்றவமென்று உரைக்க நூலும்
> கொலையாதி அகற்றிய நல்லறங்கள் தாமே
> குவலயத்தில ஒப்பரிய அறங்கள் ஆகும்”

என்று சிவஞானதீபமும் கூறுகின்றது. இன்னோரன்னவைகள் எண்ணிறந்தன. மேலும், இதுவே, சைனம், பௌத்தம் முதலான சமயங்களின் தலைசிறந்த கொள்கையுமாம். இதனை :

> “செங்கனகத் தாதுறைத் திருநாதர் குன்றில்வாழ்
> தேவனே முனீசு வரனே!
> செய்யவளி னழகுமிகு செங்கமல வதிபுகழுஞ்
> செம்மல்சுப மித்திர புதல்வா!
> திங்களணி கதிர்புரையு முன்வசன மொன்றுந்
> திருவிளக்க மாறில் லாதது.
> சிவகதி பொருந்தசது வேதமு மாண்டுநெற்
> கசமெனா நவிலுமா றதறியார்
> தங்குபுக ழுலகிலதைத் தயவிலா வந்தணர்
> [1]தகரெனா மொழிந்த துணிவென் ?
> சாலவு மாறுசெய லுண்டா லப்பிணிக்
> காலதோ டத்தின் வலியே.
> புங்கவர்க் கிறைவனே பொன்னெயிற் றலைவனே
> புகலரிய முச்சோதி (சுடரே;)
> புத்தனே பத்தனற் சித்தனே மற்றவர்சொல்
> பற்றாத கால மருளே!” 20

1 ஆடு (அஜ: = ஆடு)

என்று; "பவரோக மந்திரம்"[1] என்றும் சைன நூல் கூறுகின்றது மூன்று ஆண்டுகள் வைத்திருந்த நெல், முளைப்புத்திறன் அற்றது. அதனையே 'அசம்' என்று கூறினர் முன்னோர்.

அதனை, அஜ:' என்றும் ஆடு எனக்கொண்டு வேள்வியில் ஆட்டினைப் பலிகொடுத்தனர் போலும், என்பது பெறப்படுகிறது. மூன்றாண்டுகள் இருந்த நெல்லில் உயிர்த்தன்மை, தானே நீங்கி விடுகின்றது. வேளாண்மை வல்லுநர்களும் இக்கருத்தினை மேற்கொண்டு, மூன்றாண்டுகள் கழிந்த நெல்லை, விதைப்பதில்லை. இதனால் சைன, பௌத்த சமயக்கொள்கை புலப்படுகின்றது. விரிக்கிற் பெருகும். இவ்வாற்றால் யாகத்திற் செய்யும் பசுக்கொலை பாவமே என்பது பெறப்பட்டது.

இனி "ஓருயிரையுங் கொல்லற்க" என்பது பொது விதியாம். 'அக்கினி சோமங்களின் பசுவைக்கொல்க' என்பது சிறப்பு விதியாம். இவற்றுள் பொதுவிதியானது சிறப்பு விதியைக் கெடுக்காது. யாகத்திற்செய்யும் பசுக்கொலை, கொலையே ஆகாது; பாதுகாப்பே ஆகும். யாகத்தில் உயிர்துறந்த உயிர்கள், சுவர்க்கத்தில் இன்புற்று வாழும் அதாவது, 'பொன்னுடம்பை எடுத்துக் கொண்டு, மேலாகிய சுவர்க்க லோகத்தை அடைகின்றது' என்றும், 'அவ்வுயிர் இறக்கின்றதில்லை' என்றும் வேத மந்திரங்கள் கூறுகின்றன. கொல்லும் விதியைக் கூறும்போது, 'அப் பசுவின் பிராணன், வாயுவுடன் ஒன்றுகிறது' என்று, அவ்வுயிரின் மரணமின்மையைப் போதிக்கின்றது. இவ்வாறே. எண்ணிறந்த பிரமாணங்கள் இருக்கின்றன இப்பொருளையே, இராமானுசரும், தேசிகாசாரியரும் மிக விரித்துக் கூறியுள்ளார்கள், அதை ஆண்டு காண்க பாரதம் அநுசாசன பருவத்திலும,

---

1 அச்சில் வராத நூல்

"யஸ்மாத் பசுத்வமிச்சந்தி பசவஸ்வர்க்க லிப்ஸயா ||
தஸ்மாத் பசுவதே ஹிம்ஸா நாஸ்தி யக்ஞேஷு
பாண்டவ ||

என்று கூறப்பட்டிருக்கிறது. இக்கருத்தையே,

"பூசுராக்கிழிவு இலை யாகத்து உயிர்கொன்று
அருந்தலின் விண்புகுதா நிற்பர்
கோசமெடுத்து உறைநவிற்று ஆசிரியர் சிருர்க்கு
இதமதுபின் கொடுப்பான் முன்னர்
ஆசுமிகு துயர்விளைத்தும் இதம் அதுவாப்
பொருள்பெறலின் அரிய வேத
ஓசைமிகும் அமருலகை அவர் வதைத்த
சீவனும்பெற்று உய்த லாலே!"

என்று உண்மைச் சைவசமய உபதேசகராகிய சாந்த லிங்க சுவாமிகளும், தமது 'கொலைமறுத்தல்' என்னும் நூலில் இனிது அறிவுறுத்தியுள்ளார். மற்றும் இவ்வாறே வருவனவற்றை ஊகித்துக்கொள்க என்று ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகள் கூறியுள்ளார்கள்.

பெரியபுராணத்து, சோமாசிமாற நாயனுர்' புராணம் காணப்படுகின்றது. ஆனுல், அதில் அவர் சோமயாகம் செய்தது கூறப்பெறவில்லை.

"அம்பருக்கும் அம்பர்மாகாள (கோயில் மாகாள)த் திற்கும் இடையில் சோமாசி மாற நாயனுர் யாகம் செய்த மண்டபம் இருக்கிறது. யாக உற்சவம், வைகாசி ஆயில் யத்தில் நடக்கிறது. வெகு நன்ருக இருக்கும்" என்கிறது சிவஸ்தல மஞ்சரி.

இந்த (ரக்தாட்சி) ஆண்டு, வைகாசித் திங்கள், ஆயிலிய விண்மீனன்று, இந்த வேள்வி காணச் சென் றேன். யாகமண்டபம் அலங்கரிக்கபட்டிருந்தது. மிக மிகச் சிறப்புடைய 'நீசரூபக்காட்சி', அதாவது: இறைவன் பறையறைவான் வேடத்தில், இறந்த கன்று தோளில்

ஊசலாட, பறையடித்து வர, நாற்புறமும் நான்கு வேதங்களும் நாயாக நின்று குரைக்கவும், மிக்க அலங்காரத்தோடும், இறைவி, அவன் மனைவியாக, 'கள்' குடத்தினைத் தலையில் சுமந்த வண்ணம், அலங்காரத்தோடும் வந்த காட்சி, இன்னும் என் மனக்கண்ணைவிட்டு அகலவில்லை.

வேள்வி நடக்கும்போது இக்காட்சி எதிர்ப்பட்டது. யாக சாலையினின்றும் தீபாராதனை செய்யப்பட்டது. உடன், பின்வந்த 'இடபாரூடக் காட்சி'யும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

இவ்விழாவிற்குத் திருவாவடுதுறை ஆதீன முதல்வர் அவர்களும் வந்திருந்தார்கள். யாகத்தில் சோமக் கொடியோ பசுவோ காணப்படவில்லை.

இதுபற்றி, திருவாளர் பாணீதரன் அவர்கள் தனது "திருத்தலப் பெருமை" எண் 118, 119-ல் மிக அழகாக இந்தயாகக் காட்சியினைப் படங்களுடன் விளக்கி, "உண்மையான பக்தி-சாதிசமய ஆசார அனுஷ்டானங்கள் அனைத்தையும் கடந்து, ஒளிர்விடும் உன்னத நிலையாகும் என்பதை விளக்கும் பெருவிழா உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற சிறுமைகளில் சிக்கி உழலும் அஞ்ஞானிகளின் மனக்கண்களைத் திறக்கும் ஞானப் பெருவிழா" என்று கூறுகின்றார்.

மேலும், "அஞ்ஞானத்தால் யாகசாலையினின்றும் ஓடிய அந்தணர்களுக்கு, ஆலயத்தில் பெருமான் காட்சியளித்து, ஞான அருள் வழங்குகிறார். அவர்களது வமிசத்தினர் இன்றும் அக்காட்சி பெற்று மகிழ்கின்றனர். அவர்களுடன் உதங்க மதங்க மகரிஷிகளும், மகுடவர்த்தன மன்னனும் அருட்காட்சிபெற்று உய்கின்றனர்" என்றும் கூறியுள்ளார்.

கலைக் களஞ்சியத்தில், 'சோமாசி' என்பது, சைவாகமங்களில் குறிப்பிட்டவாறு சைவ வேள்விகளை நடத்தும் அந்தணர்கட்கு வழங்கும் பட்டப்பெயர். சோமாசிமாறர்

செய்த வேள்வியொன்றில், சிவபெருமான் தீண்டத் தகாதார் வடிவுடன் வந்து அவிபெற்றார் என்று திருவம்பர்த் தலமான்மியம் கூறுகின்றது." என்று காணப்படுகின்றது

இனி, கோயில் திருமாகாளத் தலவரலாறு (வித்துவான் திரு ச. தண்டபாணி தேசிகர் எழுதியது, பக்கம் 26—28) காண்போம். இதில் சோமாசிமாறர் வரலாறு: என்னும் தலைப்பில் காணப்படுவதாவது :

அம்பர் என்னும் ஊரிலே, அந்தணர் குலத்திலே அவதரித்தவர் சோமாசிமாறர். அவர் மனைவியார் சுசீலா தேவியார். இவர், அந்தண குல நலத்திற்கு ஏற்ப நித்தியாக்கினி வழிபாடு முதலியன இயற்றி வந்தார். இவருக்குச் சோமயாகம் செய்ய வேண்டும் என்ற விருப்பம் திருவருள் வசமாக உண்டாயிற்று. சோமயாகம் என்பது, சோமலதையைப்[1] பிழிந்து செய்யும் யாகம். அந்த யாகத்தில், இறைவனே, அக்கினி முகமாக அன்றி, நேரே வந்து அவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணினார். இந்த எண்ணத்தை இறைவனுக்குத் தெரிவித்து, முடித்து வைக்கும் வன்மையுடையவர் யார் என்று ஆராய்ந்து, நம்பியாரூரராகிய சுந்தரர் திருவுள்ளத்தைப் பெற அவருக்கு விருப்பமான தூதுளங்கீரையைத் தினந்தோறும் பறித்துக் கொண்டுபோய்ப் பரவையார் திருமாளிகையில் அளித்து வந்தார். திருவருள் துணைசெய்ய, 'இத்தொண்டினைத் தவறாது செய்வார் யார்?' என்று பரவையார் வாயிலாக அறிந்த சுந்தரர் பெருமான், நிறை செல்வத் தியாகப் பெருமான் திருமுன் சென்று விண்ணப்பித்தனர். அன்பர் மனமறிந்து உதவும் தியாகப்பெருமான், சுந்தரரிடம், 'அவன் அறிந்து அளிக்கவல்லனாயின், அவன் விரும்பிய வண்ணம் நேரே வந்து அவி பெறுவோம்' என்று ஆணை தந்தனர்.

---

1. சோமக்கொடி

சோமாசிமாறனார், அம்பருக்கும், கோயில் திருமாகாளத்திற்கும் இடையில் உள்ள சிறந்த இடத்திற் சோமயாகத்தைத் தொடங்கினார். வைகாசி மாதத்து ஆயில்ய நன்னாள் வந்தது. பூர்ணாகுதி செய்து, அவி வழங்க வேண்டிய சமயம், சொல்மாறாப் பெருமானாகிய தியாகேசன் நீசத் திருக்கோலத்துடன், மழுவேந்திய கையில் மறித்த கன்றைத்தாங்கி, அபய வரத கரங்களிரண்டும் உடல் என்னும் பறையை முழக்க, வெள்ளக் கருணை விண்ணவர் பெருமான் பள்ளப் பெருமானாக, யாகசாலைக்கு எழுந்தருளினார். அவரைத்தொடர்ந்து நான்கு வேதங்களும் நான்கு நாய்களாக வந்தன. கந்தனும் கணபதியும், பள்ளச் சிறுவராக, அம்மை கரத்தைப் பற்றி வந்தனர். இதனைக் கண்ட சோமாசிமாறர், 'இதுவோ பூர்ணாகுதி வேளை. இப்போது, சொல் தவறாத தியாகப்பெருமான் எழுந்தருள வேண்டிய நேரம். நீசன் வருகின்றான். இந்தக்கோலத்து இறைவன வருகின்றாரோ என்னவோ. நாம் என்ன கண்டோம்.' என்று ஐயம் உற்று நின்றனர். யாகசாலையிலிருந்த அந்தணர்கள், 'யாகம் பழுதாயிற்று' என்று ஓட்டம் பிடித்தனர். சோமாசி மாறனார் அஞ்சி, விக்கினந் தவிர்க்கும் விநாயகனைப் பணிந்து நின்றனர். அச்சந் தவிர்த்த ஐங்கரத்தானைமுகக் கடவுள், தம் சுட்டு விரலால் குறிப்பாக 'இவரே தியாகன்; இவரே அவி வாங்க வந்திருக்கிறார்' என்று அறிவித்தனர். சோமாசிமாறர் மனந்தெளிந்து, வணங்கி, வரவேற்று அவியை அளித்தனர்.

அவிபெற்ற தியாகப்பெருமான் காட்சிகொடுத்த நாயகராக இடபாரூடராக எழுந்தருளினார். நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் மழை பெய்வது போல, சோமாசி மாறனார் செய்த தூய தவத்தால் எல்லோரும் பெருமானைக் கண்டனர். ஞானக்கண்ணால் காணவேண்டிய நாயகனை, ஊனக்கண்ணாலும் கண்டு, உடம்பெடுத்த பயனைப் பெற்றனர். 'தீண்டாதவன் வந்து விட்டான்' என்று அஞ்சியோடிய அந்தணர்களும்

வந்து வணங்கினர். இறைவன், 'நீங்கள் என்ன ஓதியும் உண்மை உணரும் ஆற்றல் இன்மையால் 'மத்தியான காலத்து மட்டும் நீங்கள் சண்டாளர்களாக ஆகுக' என்று பணித்தருளினர். இறைவனைத் தரிசித்த அவர்களும் இன்பமுற்றனர். சோமாசிமாறனர் சுசீலையாருடன் ஈறிலாப் பெரும்பதம் எய்தினர்.

இப்படி வரலாறு இருக்கிறது. இதில் சோமக் கொடியைப் பிழிந்தது காணப்படாவிடினும், பசுவதை சொல்லப்படவில்லை.

இனி, இச் சோமயாகம் புரிந்த இந்நூல் பற்றிக் காண்போம்.

திருமுதுகுடி நாட்டிலே, எட்டமா நகரத்திலே சந்திர குலத்திலே, வீரகுமார் எட்டேந்திரன் என்னும் அரசன் இருந்து ஆண்டுவந்தான். அப்போது வீரபாண்டிய நகரத்திலே, அயோத்தியர் காவலனாக 'சிவகாமு' என்னும் மன்னன் இருந்தான். அவனுக்கு அழகு, காமாட்சி, பெருமாள் ஆகிய மூவரும் மைந்தர்களாகப் பிறந்தனர். மூவருக்கும் திருமணம் நிறைவுற்றது.



மகிழ்ந்திருக்கும் நாள் 2-வது மகனை காமாட்சி என்பான் சிவகாமுவையும், சுப்பராசனையும் பெற்றான். பெருமாள் என்பவன் சிவகாமுவையும், பெருமாளையும் பெற்றான். முதல் மகனை அழகு, பலநாட்கள் மகப்பேறு இன்றி மாதவம் புரிந்து 1003-ஆம் ஆண்டு பங்குனி 27-ஆம் நாள் திங்கட்கிழமை உத்திராட விண்மீன் கூடிய நன்னாளில் காமாட்சியைப் பெற்றான். பின்னர் அழகரப்பனைப் பெற்றான்.

இருவரையும் அருமையாய் வளர்த்து, திருவம்பல தேசிகர்பால் கல்வி, கலைகள் யாவும் கற்க அனுப்பிவைத்தான். அவர்கள் கற்றுத் தேர்ந்தனர். பதினாறு வயதடைந்ததும் மல்லபேந்திரன் மகள் லெக்குவைக் காமாட்சிக்கு மணம் முடித்தனர் பெற்றோர். சில நாட்களில் பெற்றோர்கள் இறக்கவே, காமாட்சி அவர்கட்கு இறுதிக்கடன் முடித்து யாவரும் வியக்க வாழ்ந்திருந்தான்.

தனது சிறிய தகப்பனார் பிள்ளைகட்கும், தம்பிக்கும் திருமணம் செய்யக் கருதினான். மல்லபேந்திரன் மகள்கள் வள்ளியம்மாள், லெக்கு ஆகிய இருவரையும் சிவகாமுவுக்கும் பெருமாளுக்கும் திருமணம் புரிவித்தான். சிவஞான நகர் குப்பண்ண ராசேந்திரன் மகளை சுப்பராசனெனும் சுப்பிரமணியவேலுக்கு மணமுடித்தான். மற்றொரு சிவகாமுவுக்கு இராமலிங்க மகிபதியின் மகள் லெக்குவை மணஞ் செய்தான். தனதன் என்னும் பெயருடையாரின் மகளாகிய லெக்குவைத் தன் தம்பி அழகரப்பனுக்கு மணம்புரிவித்தான்.

காமாட்சி என்னும் மன்னவன் இவ்வாறு தமையன் தம்பிமார்களுக்குத் திருமணம் செய்து, முறையோடு பல தான தருமங்களைச் செய்து விளங்கும் நாள் மகப்பேறு இன்றிக் கவலைகொண்டிருந்தான்.

பசுவந்தனை என்னும் ஊரில் உள்ள மெய்த்தவர். சங்கு தேசிகர், காமாட்சியின் திருமனைக்கு வந்தார். மகப் பேறின்மையை உணர்ந்து, "உனக்கு மகன் உண்டு. மகம் செய்து, இராமனைத் தயரதன் பெற்றதுபோல, நீயும் 'சோமயாகம்' செய். மகன் பிறப்பான்" என்று கூறினார். காமாட்சி மகிழ்ச்சியடைந்தான்.

மேலும்: "காசியிற் சிறந்தது கயிற்ருறு. அதன் மன்னன் பசுக்களைப் போற்றி வந்தான். பசுக்கூட்டங்கள் ஊர் வெளியில் புல்மேயும்போது, ஒரு பசு, சற்று தூரம் சென்று, ஒரு சிவலிங்கத்தைக் கண்டு, அதன்மீது பாலைச் சொரிந்து, பின்பு வந்து பசுக்கூட்டத்தில் சேர்ந்தது. தினமும் இவ்வாறு நிகழ்வதால் பால் குறையவே, உழை யரால் உண்மையறிந்த அரசன், அங்கு சென்று சிவ லிங்கத்தினைக் கண்டு, பணிந்து வணங்கி நிற்ப, இரவு வந்தது. பக்கலில் தங்கியிருந்தான்.

இரவில், வானவர்கள் வந்து, அந்த சிவலிங்கத்தினை அருச்சித்து வழிபாடு செய்தது கண்டு, பொழுது விடிந் ததும் அதனை வழிபட்டு, அவ்விடத்தினை நகரமாக்கி ஆலயம் எடுப்பித்தான். சுவாமி பெயர் கயிலாய நாதர். அம்மை பெயர் ஆனந்தவல்லி. ஊர், பசுவந்தனை. வாவி, சிவதீர்த்தம் எனும் கோசிருங்க வாவி. அப்படிப்பட்ட தலத்தில் நீ, யாகம் செய்" என்றார்.

மன்னன் பணிந்து, மகத்தியல்பு கேட்டான். மகம் செய்யவேண்டிய முறைகளைக் கூறி, இளசைப்பதி சேஷய்யன் என்பவரைக்கொண்டு செய்யச் சொன்னார். அவ்வாறே, அண்ணன் தம்பியர்கள் மந்திரி முதலாயி னரை அழைத்து மந்திராலோசனை செய்து, எல்லோரும் பசுவந்தனைக்குப் புறப்பட்டார்கள். யாகத்திற்கு வேண் டுவன செய்தார்கள். அழகு என்பான் இளசை மன்ன னிடம் ஆசிபெற்று வந்தான்.

காமாட்சி தன் மனைவியோடு கோசிருங்க வாவியில் மூழ்கி, சிவனை வணங்கி, பின், சங்கு சுவாமியை வணங்கி மகஞ்செய்யத் தொடங்கினன்.

முறைப்படி வேள்விகளைச் செய்து முடித்து, அந்தணர்கள், சுற்றத்தார் வறியவர்கள் யாவருக்கும் வேண்டுவன நல்கி மகிழ்ந்தான். வேள்வியின் பயனாய், நல்லதோர் நாளில், இப்பி வயிற்றில் முத்து தோன்றியது போல் மனைவயிறு வாய்க்கப்பெற்று, ஆண் மகவை அடைந்தான்.

"இஃது, மீனாட்சிபுரம், உபாத்தியாயர் முத்தாண்டியா பிள்ளை கவி இயற்றியது. வீரபாண்டிய விநாயகன் துணை, இதை, யாராவது பார்க்க வேண்டுமென்றால், பார்த்து விட்டு, ஏட்டுக்காரரிடத்தில் ஒப்புவிக்க வேண்டியது" என்று மேலேட்டில் உள்ளதுகொண்டு, இதனை இயற்றிய ஆசிரியர், முத்தாண்டியா பிள்ளைக் கவிராயர் என்பது தெரிகின்றது. ஆசிரியர் நல்ல தமிழ்ப் புலமையும், சோதிடத்தில் புலமையும், அடக்கமும், வடமொழித் தேர்ச்சியும் உடையவர் என்று தெரிகின்றது.

இவர் வசமிருந்த மற்றொரு, காந்தியம்மைபிள்ளைத் தமிழ் என்ற சுவடியின் மேலேட்டில் காணப்படுவதாவது: 'இஃது, செக்காரக்குடி ஜமீன், மீனாட்சிபுரம், உபாத்தியாயர் முத்தாண்டியா பிள்ளையவர்கள் வரபுத்திரன் 'மந்திரம்' வாசித்து வருகிற காந்திமதியம்மாள் பிள்ளைத் தமிழ்" என்பது. எனவே, உபாத்தியாயர் முத்தாண்டியா பிள்ளை, செக்காரக்குடி ஜமீன் சமஸ்தானத்தில், சமஸ்தானப் புலவராக இருந்து, இந்த சோமயாகப் பெருங்காவியத்தைப் பாடியிருத்தல் வேண்டும். ஷை ஜமீன்தார்கள் சிவகாமுவும், அவர்கள் வழித்தோன்றல்களும் இக்காவியத்தில் இடம்பெற்றுள்ளனர் எனத் தோன்றுகிறது. 'கவி' அல்லது 'கவிராயர்' என்ற பட்டமும் இவருக்கு, இச்சமஸ்தானத்தில் கிடைத்திருக்கலாம், எனத்

தெரிகிறது. சொக்காரக்குடி — மீனாட்சிபுரம் என்பது, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது.

இந்நூலின் காலம் காணும்போது, (7-ம் பாடல்; பக்கம் 33) '1003-ம் ஆண்டு பங்குனித் திங்கள் 27-ம் நாள் உத்திராடத்தில் காமாட்சியைப் பெற்றான்' என்றுளது. எதன் 1003 என்பது விளங்கவில்லை. முயன்றபோது கொல்லம் 1003 என்று கொண்டால் கி. பி. 1728 ஏப்ரல் 8-ம் தேதி பங்குனி 27 உத்திராட நட்சத்திரம் வருகிறது. ஆனால், கிழமை செவ்வாய் ஆனதில் பொருந்தவில்லை. மாதம், தேதி, கிழமை, நட்சத்திரம் நான்கும் பொருந்த இருப்பது, கி.பி. 1923 ஏப்ரல் 9-ம் தேதியாகும். ஆண்டு குறிப்பிட்டது கலியுகமோ, சகமோ எதிலுமே பொருந்த வில்லை. எனவே காலக் கணிப்பு கணக்கிட இயலவில்லை.

இடம் நோக்க, எட்டமாநகரம், கயற்றாறு என்றெல் லாம் வரும்பொது, நெல்லை மாவட்டம் என்பது மேலும் புலனாகின்றது.

நூல், பல இடங்களில் நயம்பட உள்ளது. கோசிருங்க வாவியை வாயால் ஒரு தரம் சொன்னால் திருநிறையும்; கண்ணாற் கண்டால் செல்வமுண்டாகும். ஒரு வேளை நீராடினால் பாவமெலாம் திடுக்கிட்டோடும். மற்றும் நாடு மலிய நல்ல மழை பொழியும் (பா. 20-22, 23). மகச் சோலை அமைத்தலின் சிறப்பினை 21-5, 6 பாடல்களில் கூறுகின்றார். அழல் வளர்த்தல், இடும் சமித்துக்கள் ஆகியவற்றை 21—7, 8-ம் பாடல்களில் கூறுகின்றார். மகம் புரிய வேண்டியது (4+2+3+1) 10 நாட்கள் போலும் (21—9-ம் பாட்டில்). இது வைகல் ஈரைந்து என்று 13-ம் பாட்டில் கூறப்படுகிறது. பசுவின் வபையை எடுத்து மகம் புரிதல் 21—14, 15-ம் பாடல்களில் கூறப் படுகின்றது.

இவரது பாடல்கள் சந்தம் மிகுந்தவை. மிகச் சிறப் பாக உள்ளவை 26—7, 8, 9, 10 முதலியன. தாஷ்டீகன் (27-11) என்பன போன்ற சொற்கள் காணப்படுகின்றன. மேலும் பல சிறப்பியல்புகளைக் கொண்டது இந்நூல்.

இந்நூலை, அன்பளிப்பாக, நமது சரசுவதி மகால் நூலகத்திற்குத் தந்தவர்: திருநெல்வேலி, சைவ

வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த திருமிகு. குருநாதன் அவர்கள், செக்காரக்குடி ஜமீன் சமஸ்தானத்தில் புலவராக இருந்த, முத்தாண்டியா பிள்ளைக் கவியின் வழித் தோன்றலாவார். அவர்களது சமஸ்தானத்தில் பாடிய இச் "சோமயாகப் பெருங்காவியம்" எனும் இச்சுவடியை நூலகத்திற்கு, எமது நூலக, வேதியியல் முறைப் பாது காவலர், திரு. ப. பெருமாள், எம்.ஏ., பி.லிப்., எஸ்.ஸி., அவர்கள் மூலம் அளித்துள்ளார். தற்போது சென்னை, அகரம், பெரியார் நகர், கார்த்திகேயன் சாலையில் வசித்து வரும் திரு. குருநாதன் அவர்கட்கு, எமது மகால் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவரப் பொருளுதவி செய்த, நமது நடுவண் அரசுக்கும், இதனைப் பதிப்பிக்க அனுமதியளித்த எங்கள் நூலக முன்னாள் இயக்குநரும், மாவட்ட ஆட்சியருமான திருமதி ஓ. பி. சோசம்மாள், இ.ஆ.ப., அவர்கட்கும், இந்நூலுக்கு அணிந்துரை தந்து சிறப்பித்த, தற்போதைய இயக்குநரும், மாவட்ட ஆட்சியருமான உயர்திரு து. இரா. இராமசாமி, இ. ஆ. ப., அவர்கட்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது சரசுவதி மகால் நூலக நிருவாக அதிகாரி (பொறுப்பு) திருவாளர் A. பஞ்சநாதன், எம்.ஏ., பி லிப்., எஸ்.ஸி., அவர்கட்கும், விரைவில் அச்சிட்டுதவிய தஞ்சை, திருவள்ளுவர் அச்சகத்தாருக்கும் எனது நன்றி உரித்தாகிறது.

இந்நூலில் எதிர்பாராத காரணங்களினால் ஏற்பட்ட பிழைகளை, அதன் திருத்தங்கொண்டு வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன். இந்நூலைப் பெற்றுப் படித்துப் பேறுபெற எல்லாம்வல்ல இறையருள் முன்னிற்கட்டும்.

இங்ஙனம்

தஞ்சாவூர்,
17—12—84.

புலவர். வீ. சொக்கலிங்கம்,
தமிழ்த்துறை,
சரசுவதி மகால் நூலகம்.

# சோமயாகப் பெருங்காவியம்

## காப்பு

சீர்சிறந்த திருமுகத்தா னயோத்தியர்தங் குலமரபு
செழிக்கத் தோன்றிப்
பேர்சிறந்த காமாட்சி[1] புரிசோம யாகப்பிர
பலத்தைக் கூற
ஏர்சிறந்த வண்டமுத லனைத்துநீ யெனவலங்கொண்டு
இறைவன் செங்கை
ஆர்சிறந்த கனிவாங்கும் வீரபாண்டிய விநாயகனே
காப்ப தாமே !

## கடவுள் வணக்கம்

சதுமறை பெருக வேள்வித்
தவப்பயன் தழைக்கத் தாவில்
பதுமமே லவனு லாய
படியரு டழைத்து வாழ்கக்
கதிதரு ஞான நீடக்
கனமழை பிலிற்ற வெண்ணுன்கு
அதிகநல் லறனு மற்றை
அனைத்துநீ டூழி வாழ்க. 1

கனங்குழை யயில்வேல் வாட்கண்
கனிமொழித் துவர்வாய்க் காமர்
அனங்கிழை நடைமென் சாயல்
அரிவைய ரலகில் கற்பும்

1. காமாசசி என்றுளது.

இனப்பெறு செங்கோல் வேந்தர்
இயனெறி வளனும் வாழ்க
மனந்திகழ் பெரியோர் சத்திய
வாய்மையும் புவிமேல் வாழ்க. 2

**வேறு**

ஆதி யந்தமா யனைத்துல கனைத்துயிர் களுமாய்
வேத மந்திரப் பொருளதாய் மெய்ப்பரஞ் சுடராய்
ஓது மைப்பொறியா யைந்து பூதமா யுறையுஞ்
சோதி மன்றினில் நடம்புரி துணைப்பதந் தொழுவாம். 3

பொங்கு தண்கடற் கிறைமகன் தனையையாய்ப் புனித
கங்கை மேவிய சடையினன் தனமணங் கலந்த
மங்கை தாதவிழ் ந் துழுதுதேன் தேறுண மலர்ந்த
பங்க யப்பத நான்மலர் முடியுறப் பணிவாம். 4

**வேறு**

கதிர்மணிப் பணிகள் தாங்கிக்
கதித்துருத் தெழுந்து சீறிப்
புதியபட் டிகையைப் பூசல்
புரிதரும் புளகக் கொங்கை
மதர்விழி வள்ளி மேவும்
மரகத மயிலி னானை
விதிதொழும் வடிவே லானை
மெய்ப்பதம் பணிதல் செய்வாம். 5

**வேறு**

சையத் தாயிடைத் தோன்றிப் பினிம்பநாட் டாரான
வையத் தாடிமா மலர்மகன் ருலுவின் வதிந்து
தெய்வத் தாமரை வெண்மல ரிலத்திடைச் சிறந்த
தொய்யிற் பூத்தவெம் முலையினு டுணைப்பதந்
தொழுவாம். 6

வேறு

அந்தரத் தமர ரஞ்ச உருத்தெழு மால காலங்
கந்தரத் தமைத்துக் காத்த கடவுடன் னிடத்தின் மேய
கொந்தலர் குழலார் பாரக் கொங்கையின் னமுத மாந்திச்
செந்தமிழ் மாரி பெய்தோன் திருவடி முடிமேல்
வைப்பாம். 7

வேறு

நஞ்சு பில்கிய துளைபெயிற் றராக்குல நடுக்கிக்
குஞ்ச ராசலக் குழுக்கள்வெண் மருப்பினைக் குறைத்து
வஞ்ச ரார்த்தகன் மதலையால் வாரியும் வருபிர
பஞ்ச வாரியுங் கடந்தவ னிணைப்பதம் பணிவாம். 8

கோதி லாப்பெருந் தமிழிறு னொஞ்சகங் குழைப்பித்
தாதி பாற்பெறு மரும்பொரு ணதிப்படுத் தகன்று
சீத வான்புனற் குளத்திடைக் கிடைத்தவன் சிவந்த
தாது லாமலர்ப் பதம்பணிந் தேத்துவன் தமியேன். 9

பஞ்ச வன்கன நிதியறை திறந்துவாம் பருமம்
விஞ்சு கொய்யுளைக் கடும்பரித் திரட்கொள் வெறுக்கை
செஞ்ச வேகவர்ந் தரனடி யவரிடைச் செலுத்தி
அஞ்சும் வென்றருள் வாத வூரனைத் தொழுவாம். 10

வெண்ணனி றத்தவெண் மணலினு லாலயம் விளக்கி
வண்ண வான்பொழி யமுதினை மஞ்சன மாட்டி
நண்ணு தாதைதன் கழறுணித் தான்பத நணுகும்
அண்ணல் தாளிணை முடிமிசைக் கொண்டனன் அடியேன்.

வேறு

மான்பி டித்த கரத்து மறைமுதல்
தேடிபி லிற்றுக் கேகைகயர் சீரடி
தான்பி டித்த தவத்தினர் தாளினை
நான்சி ரத்தினின் வைத்தனன் நாளுமே. 12

கடவுள் வணக்கம் முற்றிற்று.

---

காப்பு 1. ஆகத் திருவிருத்தம் 13

# 2-வது அவையடக்கம்

கற்ற கேள்வி கவிவல ராயிடைச்
சொற்ற விக்கவி தூய்தில வாயினுங்
குற்ற முற்ற கொடிகன கா சல
வெற்பை யுற்றது மேம்படல் போலவாம். 1

மையில் கேள்வி வண்டமிழ் தேர்கிலா
வைய முற்ற மனத்தினன் யானுரை
செய்த புன்றமிழ் கொள்வர் சிறுமகார்
வைத சொல்லை மகிழ்ந்திடு மாறெனு. 2

தாது கொண்ட மலரொடு சார்தரு
கோது கொண்டிடு நாரினைக் கொள்வபோ
னீத மன்னு காமாட்சி நெடும்புக
ழோத லாலிஃ துட்கொள்வ ருத்தமர்[1]. 3

எண்ணு மிக்கதை சொற்றன னேனெனிற்
புண்ணி யக்கதை யாதலிற் பூமிசை
வண்மை மிக்க கவிவலர் மாசறுத்
துண்மை யிக்கதை யென்றென் றுவப்பரால். 4

**அவையடக்கம் முற்றுப்பெற்றது.**

**ஆகப் படலம் 2க்குத் திருவிருத்தம் 17**

1. முடிவு சரியில்லை.

# 3-வது ஆற்றுப் படலம்

அழகுறு தருமத் தட்டின்
மனுமுறை யணிநூல் கட்டி
வழுவறு துலைநா வைத்து
மனத்திறைற் றூக்கி யார்க்கும்
பழுதற நன்குந் தீதும்
பகுத்துரை குமரரெட் டேந்திரன்
தழுவிய திருநாட் டாற்றுத்
தனிவளம் பகர லுற்றும். 1

முசலிமா நிறத்த கொண்மூ
நெறிக்கொடு முடுகிப் போந்து
அசையுநீ டிரைக்கார் வேலை
அதனிடைப் படிந்து வாயாற்
பசையுறப் பருகிப் பின்னோன்
அழகினைப் பறித்துச் சால
விசைகொடு முழங்கி வான
மீமிசை யெழுந்த தன்றே. 2

பொன்னிறச் சிலைகை வாங்கிப்
புகலறுந் தடித்து வாட்கொண்
டின்னிலத் தசனி யென்னு
மிரும்பனை முழக்கிப் பைவாய்ப்
பன்னிறப் பணிக டுள்ளிப்
பதைபதைத் தொடுங்கக் கோடை
வென்னிடப் பொருவான் சீறி
யெதிர்ந்தன மேக சாலம். 3

மையென நிறத்த கொண்மூ
மலையமீ மருவித் தண்ணஞ்
செய்யவெண் டுளிகள் நீங்கா
தொருங்குறச் செறிக்குந் தோற்ற

மையறு மிமையா முக்கண்
அமலனை யைந்து நான்கு
கையனைத் தொறற்கி ராமன்
மலர்கடோங் கருணை மானும். 4

அஞ்சன நிறக்கா ரென்று
மணமக னலைந்து சிந்தும்
விஞ்சுதண் டுளிய தாமித்
தியத்திறல் வேய்த்தோள் மென்கை
மஞ்சுசேர் காந்தண் மானும்
வரிவிழி சிகரக் கொங்கை
புஞ்சமாஞ் சைலப் பாவை
பொருளைமா மகட்பெற் றுளால். 5

அத்தனிப் பொருளைக் கன்னி
அனைமுலைத் தீம்பா லான
கொத்துடை யிருற்றேன் றேக்கிக்
குறையற வளர்ந்து மீநின்று
இத்தரை நோக்கிக் கல்லென்று
இணையறத் தவழ்ந்து மேவு
மெய்த்தடங் குளங்கா லோடை
(பனை) தொறும் விளையாட் டெய்தி. 6

சைவலங் குழலாய் மீனந்
தடங்கணாய் முகங்கை பாதஞ்
செய்யபங் கயமாய்க் கண்ட
திரள்வளை பணைமென் றோளாய்
மெய்நிறந் தளிராய்க் கொங்கை
குரும்பையாய் விடத்தின் மேய
பையர வல்குற் பாவை
பௌவநா யகனைச் சேர்ந்தாள். 7

தூங்கல்வெண் மருப்புத் தூய
சுரிவளை மணியின் குப்பை
ஓங்குகாழ் நறுமென் வாசத்து
அகிற்றுணி யும்பர் மீநாட்டு
ஆங்கணங் கனையார் தங்கள்
புலவியி னகற்றும் பூண்கள்
வாங்கிவந் துறலா னீத்தம்
வணிகமா மாக்கண் மானும். 8

அனங்கன லங்கம் வன்னி
செறித்தலா லரவப் பூணாற்
கனங்குழை யமலை சேர்ந்த
காட்சியாற் கனலி கண்ணால்
மனங்கிளர் கங்கை மானம்
புலிக்கன்று மருவ லாலிப்
புனங்கிளர் பொருளை முக்கட்
புண்ணியக் கடவுள் போலும். 9

பொருதிசை வயமாத் தண்ணம்
புனற்கராம் வழுவை பொச்சை
வருபொறி யிரதம் வாளை
வயங்கிளர் வடிவாள் மாசில்
பெருமரத் துணிநீ டண்ட
மெனக்கொடு பொருளைப் பெண்பார்த்
திருமக டுகின்மேற் சீறித்
திறற்சமர்க் கெழுந்த போலும். 10

தண்ணறுக் கடிமென் றுருதுத்
தனிமலர் புனைந்து சாந்தம்
வண்ணமான் மதந்தோய்ந் தாட
வரைப்பொருள் கவர்ந்து நீலக்

கண்ணுறுங் குவளை காட்டிக்
கனமுலைக் குரும்பை காட்டி
அண்ணலம் பொருனை சூளை
அணங்கனுர் தம்மை மானும். 11

**வேறு**

இனைய தீம்புன லீசன் முதலென
நினைய நூல்க ணிகழ்த்தியுந் தேர்கில
ரனைய தாகக் கலங்கி யரனடி
புனைந லோரம் புலத்திற் றெளிந்தவே. 12

நன்றி தங்கு (மு)துகுடி நாட்டினுட்
சென்ற தெல்லை யளப்பத் திருந்தி
யொன்ற னந்தம் பதத்துட னேடியே
இன்று காறுந் திரிந்தன வென்பவே. 13

தனிப்பரம் பொருள தானயன் மால்மறை
அனைத்து மாகி யுலகுக் கருள்வ
போனினைக் கும்பல பெயர்பெற்றிந் நெடுநதி
வனப்பி னேங்குபைங் கூழை வளர்க்குமே. 14

**ஆற்றுப் படல முற்றுப் பெற்றது.**

**ஆகப்படலம் 3-க்குத் திருவிருத்தம் 31.**

# 4-வது திருமுதுகுடி நாட்டுப் படலம்

இனைய நன்னதி யிற்புன லீண்டிட
வனைய மள்ள ரறிந்தொருங் கண்மியே
நினைய லாவுவ கைக்க ணெருங்கிநீள்
புனித வான்செய் புதுக்கத் தொடங்கினர். 1

கொட்டு வாங்கிக் கழனியிற் கோதற
வெட்டு வார்சில ரன்னது வேரறக்
கட்டு கூடைக்க ணிட்டுக் கணிப்பிலார்
தட்டு வார்சுமப் பார்கரை சாரவே. 2

கார்கொண் மேனிக் கடுங்கதிக் கூர்மருப்
பேர்கொ ணீள்கவைக் காற்குழம் பெண்ணிலாச்
சீர்கொள் செங்கட் பகட்டினஞ் சேர்த்தியே
நீர்கொள் செய்க்க ணுழுவர் நிறம்பியே. 3

கொழுஞ்செ லுந்தடஞ் சாலிற் குலவிய
வழுக்கில் வித்துறு மக்கதிர் மாசிலா
மழுக்க லால்மண் மடந்தை வெரின்பிளந்
தொழுக்கு செம்புன லொத்தன வெங்குமே. 4

அலம்பி ளப்ப வரற்றுங் குடவளை
சலஞ்ச லத்திர ளீனுந் தரளத்தின்
குலம்ப கட்டுக் குழம்பி னுறுத்தலா
னலஞ்செ யிற்பதம் வைத்தலை நாணுமே. 5

கள்ள மேதிக் கடாவைக் கரும்பினன்
மள்ளர் சாடக் கணுக்களின் மன்னிய
கொள்ளை நன்மணிக் குப்பை தெறித்தல்வான்
வெள்ளி துள்ளி விழுவன[1] போன்றதே. 6

---

1 – ?

வள்ள வாய்வன சத்தின் வதிந்திடு
கள்ளுண் காமர் களிமட வண்டுகள்
தெள்ளு கீத மிசைப்பது திண்பகட்
டுள்ளந் தேற வுழுநர்சொல் லொக்குமே. 7

செய்யெ லாம்பணி லத்திர டிண்கடா
மெய்யெ லாங்கரும் பின்சுவை வீங்குதோட்
டொய்யன் மள்ளர் துணைச்சர ணங்களுங்
கையுஞ் செய்ய கமலக் கடிகளே. 8

இன்ன தன்மைய செய்யிட மெங்கணுந்
துன்னு கின்ற தொழுமர் கிணையொடுந்
தன்ன தெய்வந் தொழுதுசந் தோடமாச்
சென்னெல் வித்தினர் நீடு சிறக்கவே. 9

வித்து வித்திந ரும்விளை நாறுகள்
வைத்தெ டுத்து நடுநரும் வார்புன
லுய்த்த டைக்குந ரும்மென வோய்விலா
வித்தி ரத்தின ராயின ரெங்குமே. 10

செய்யி னுய்த்த செந்நெற் பயிரைச்செறி[1]
மையுண வாட்கண் மழததியா மக்களுக்
கெய்து குற்றந் தவிர்த்தளை யீட்டல்போல்
வெய்ய புற்களைக் கட்டலை மேயினர். 11

கஞ்ச மானனங் கையித ழாம்பல்கண்
மிஞ்சு நீல மெனவிரும் பார்தமை
யஞ்ச லென்பவ னுணையி னுறுசெல்
வஞ்ச மில்லவர் நட்பை மதிப்பரோ ! 12

கள்ள ருந்திக் களமர் கடைசியர்
பள்ள நீள்கழ னிக்குட் பறித்தெறி
வள்ள வாய்மரை வீயையம் மங்கையர்
தெள்ளு மாமுகத் துக்கிணை சேர்ப்பரால். 13

1 = ?

காண்ட மீது குதித்தெழுங் கார்நிற
மாண்ட கெண்டையை மள்ளர்கைப் பற்றி
பூண்ட யங்கு குயத்ததம் பூவையர்
நீண்ட கண்ணிணை நிகரென் றுவப்பரால். 14

பங்க யத்தனப் பிள்ளை பணைத்ததாட்
செங்கண் மேதி கன்றுள்ளச் செருத்தலிற்
பொங்கு பாலுண் டுறங்கவப் பூம்பணை
தங்கு தேரைதா லாட்டல் தழைக்குமே. 15

பொங்கர் வாயுந் தொழுமர்கள் புன்னகை
தங்கு வாயுந் தழைக்குங் கவிகளே
சங்க லப்பு தடங்கரை வாயினும்
அங்கு தாமரை வாயு மறைகளே. 16

குதலைத் தீஞ்சொற் குழவியர் கோதிலாத்
திதலைப் பூண்முலைத் தாயர் திறத்தினுன்
மதியிற் சால வளர்ந்தென மள்ளராற்
புதுமைத் தாநெற் புலம்பொலி வெய்திற்றால். 17

முற்று ணர்ந்தோர் தவத்தின் முளைத்துயா
சற்ற மேலோ ரறத்தின் வளர்ந்துசீ
ருற்ற நூலி னுரையின் விளைந்துநீள்
கற்பின் மாதர் களததிற் கவியுமே. 18

எள்ளு மேன விறுங்கு முதிரையுங்
கொள்ளுங் கோதில யாவுங் குலவ்மற்
றுள்ள புன்னில மொக்க விளைந்தது
கள்ளுண் கோதையர் மெய்விளை காமத்தே. 19

காரை யுண்ட களன்முடிச் சோமனைப்
பாரில் வேதன் படைத்தன னுமெனக்
கூரை யுண்ட குயத்தினிற் கொய்துபோர்
மேரு வென்ன வியற்றினர் விஞ்சவே. 20

மற்பு யத்துக் களமர்வன் போரினை
நற்க ளத்துய்த் திளங்கய வாய்மெய்நள்
ளற்ப கட்டிற் றுவைத்துவை யாற்றியே
பொற்கு வட்டிற் பொலிகுவித் தாரரோ. 21

ஆர்ந்த நெற்குவை கண்டளந் தாறிலொன்
றோர்ந்து மன்னர்க் குதவிமற் றுள்ளன
தேர்ந்து தெய்வந் திகழறச் சாலைகள்
சார்ந்த யாவர் தமக்கும் வழங்கியே. 22

நின்ற சேட மனைத்தையு நீள்நிறக்
குன்று போலக் கொடும்பக டுய்த்திடு
வென்றி சாலுருண் மேவிய பண்டியின்
நன்று வாரி நகர்க்கட் டொகுப்பரால். 23

புன்னி லத்திற் பொலிந்தபல் போசமு
மன்ன தொத்துய்த் தருடலி ஞறணி
மன்ன கத்து மகிழ்தரு நண்பினுள்
றன்னை யொத்துத் தழைத்தனர் சாலவே 24

பொய்யி லாமறை யாகம் பூசுரர்
சைவ மாதவர் தங்கிளை நண்பினர்
உய்ய நாளும் உவந்து வழங்கியே
துய்ய நெஞ்சின் விருந்தொடு துய்ப்பரால். 25

அத்தி தந்த படாத்தின் அடிதொழு
மெய்த்த வத்தர் நெறிப்படின் மேவியே
இத்த லத்தில் எழுந்திட யாமுனம்
எத்த வத்தினம் என்றென் றிறைஞ்சியே. 26

எம்மிற் கெம்மிற் கெமதகத் தீண்டுமென்
தம்மிற் கொண்டுய்த்(து) அறுசுவைத் தாகிய
பொம்மற் போனக முட்டிப் புலனெறி
செம்மைத் தாகச் செலுத்துவர் சித்தமே. 27

### வேறு

காலையா தவற்குச் செய்யுங்
கடன்கழித் தரவப் பூணார்
ஆலமா மிடற்றார் அன்பர்க்கு
அடியவர்க் கடிமை செய்து
சாலமா மறையோர் வேண்டுந்
தருமமற் றினிதி னாற்றிப்
பாலளாய் விருந்தோ டுண்டு
பகற்பொழு தினிது நீங்கும். 28

வெண்டள வருப்பு மூரல்
வேல்விழி வளைதோள் பாலகற்
கண்டுசொல் மடவார் காமக்
கடலினிற் படிந்துங் காதல்
கொண்டவா புலவி தீர்த்து
கூடியுங் குமரர் யாரு
முண்டக முகிழ்க்குங் கங்குல்
முரணற முயலு வாரால். 29

வானவாம பணைத்தண் டேமா
வனந்தொறு மகவான் றேவ
வானவாந் தடக்கை நாளு
மரபின ரகமு மன்னந்
தேனவாம் பழனஞ் செங்கட்
டிரள்புயத் துழுநர் செய்ய
ஊனவாங் கடைவாய் தோறுஞ்
சாலிவார்ந் துலவு மாதோ. 30

காலெலா மலர்ந்த முல்லை
கடிகமழ் மயிலை சாதி
பூவெலா நறுந்தேன் றேனப்
புறத்தெலாஞ் சிறைமா வந்த
மாவெலாம் பயிற்றல் வேத
வரம்பிசை வளத்தை யோர்ந்து

கோவெலா முருக மஞ்ஞை
நடஞ்செயக் குவளை காணும். 31

கோட்டினச் சைல வாழ்க்கை
குறவர்கள் கொடுங்கா லெல்லாந்
தோட்டகழ்ந் தேனா லோடை
வனமது தூவித் தோலாச்
சேட்டிளங் கரட நால்வாய்
மருப்பினிற் சீர்த்த வேலி
யீட்டிட விருற்றேன் றேக்கி
யிணையற வளரு மன்றே! 32

கொண்டலி னிடத்தோ நள்ளிற்
குலவிருட் குலத்தோ பண்டை
முண்டக னமைத்தா னென்ன
முயல்குழற் கொடிச்சி மாதர்
தண்டழைப் புனத்தூ டுண்ணும்
புட்களைச் சலித்துத் தாழா
தெண்டிசைப் புரத்து முத்தங்
கவணினுய்த் திரட்டு வார்கள். 33

கானத்தீன் றருளுந் தானக்
கருணைநீத் தகலக் கன்றி
யூனைத்தாம பசித்தீ யாறெந்
துறுதுய ருழப்பக் கண்டு
வானைத்தாங் கதிய சீய
மடிநெறித் தமுத மூட்டத்
தானத்தான் மகிழ்ந்து நட்பிற்
கயந்தலை தழுவு மாதோ. 34

அண்டர்வான் மனைக ளெங்கு
மணங்கவு ரவைக டோறு
முண்டக முகம்வேர் சோர
முரல்வளைக் கரங்கள் சோரத்

தண்டயிர் கடையு மோதை
தழைக்குமை வனத்தைக் காப்ப
மண்டிய கொடிச்சி (மார்கள்)
வளர்துயி லெழுப்பு மன்றே. 35

துன்றிருங் கரிய நீலச்
சுரிகுழற் றுவர்வாய்த் தோகை
குன்றிய வனப்பின் மேய
கொடுவலைக் குலத்து மாதர்
கன்றிய மன்னிற் றங்கள்
கணவரோ டூடி நீத்த
மின்றிகழ் கலனை வானின்
மின்னென முழங்கு மேகம். 36

புன்புலால் கமழு நீலப்
புணரியுட் படுத்துப் போந்த
வெய்புவாய்ச் சுழல மற்றை
மீனினம் புலர்த்த வேண்டி
அம்புலாம் விழியி னன்னார்
பெருக்கியிட் டகற்றுங் குப்பை
செம்பொனார் கலனுந் தூய
செழுமணித் திரளு மாதோ. 37

பொன்மகள் விளங்கு ஞானப்
புரிகுழல் மலரோன் றுலு
மன்மக ளறத்தின் மாது
மருவிய வளஞ்சேர் நாட்டை
என்னுணர் வதனற் கூறற்(கு)
எளியவோ வெழில்சே ரிந்த
நன்னிலஞ் சுமப்போ னுலும்
நவிற்றிட நடவா தன்றே. 38

**திருமுதுகுடி நாட்டுப்படலம் முற்றுப்பெற்றது.**

**ஆகப் படலம் 4-க்குத் திருவிருத்தம் - 69.**

## 5-வது எட்டமா நகரப் படலம்

ஓல மிக்கன பாற்கட லொற்றைமார்ச்
சாலம் வற்றக் குடித்திடச் சார்வபோற்
சீல நற்றமி ழைத்தெளி யேன்கர்க்
கோல மெற்குத் தெரிந்தமை கூறுகேன். 1

சொற்க வியபுல வோர்க டுகளறு
நற்க ருத்தின் முடிவில் நானிலப்
பொற்கொ டிக்கொரு பொன்முடி தானென
முற்ச மைத்தகொ லோவென மொழிவதே. 2

மதிமு கங்கண் டிலதமின் மங்கலப்
புதிய நாண்கலப் பேழை புனிமகட்
கிதம தாமிவை தம்மி லெதுகொலோ
சிதைவி லாதவி லோதெளி கிற்றிலேன். 3

வட்ட வாண்முக மாதுமை பாகனோ(டு)
இட்ட மூவரி தனிக ரேழ்தரை
மட்டு மில்மக வானக ரத்தினும்
எட்ட மாநக ரென்பதி னைமமே. 4

விலங்கல் வில்லன விளங்கிடு தாரைகள்
வலங்கொள் வான்வழி வைலும் வாவுக
பொலங்கொ ளின்னகர்ப் பொற்பைப் புரையற
நலங்கொ ளத்தெரி தற்கு நயந்தரோ. 5

வச்சி ரத்தன வளங்கெழு மாநகர்
முற்ச மைத்த மயனிம் முதுநகர்
மெச்சு சிற்ப விதியை வியந்துதன்
கைச்ச மர்த்து மறந்து கலங்கினன். 6

குத்தி ரத்துக் குடையினன் கோமரு
மத்த லத்து வதிபவள் மாசிலா
இத்த லத்தின் இனிதுறை வாளெனின்
எத்தி றத்தின் இதன்புகழ் கூறுகேன். 7

தெங்கு புன்னை செழுந்தழை மாநிரை
கொங்கு தங்கு நூடவை குலவிய
தெ(ங்)கும் வெண்(க)யத் திந்திர ரைட்டுள
பொங்க ரிங்கு புகுந்தன போலுமால். 8

தடியி னின்றிளஞ் சாலித ழீஇமிகுங்
கடிகொ(ள்) வல்(லி மி)டைந்த கமுகின்
வடிவில் ஈசன் விழவின் வனைந்தபூங்
கொடிக டுன்னுங் கொடிமரம் போலுமால். 9

கோங்க லர்ந்தன செம்மலர்க் கொம்பர்நின்(று)
ஆங்கண் வீழ்ந்தும் அளிக்குன வீவன
தாங்கள் குன்றினுந் தஞ்சமென் றோருயிர்
பாங்கி னீந்தும் புரப்பவா பான்மையே. 10

சூத முற்று சுவைக்கனி தரங்கிலா
வாத முற்று வளைந்தெழும் வார்திரை
யோத மைக்கட லாடை யொருத்திதன்
பாத முற்றுப் பணிந்தெழும் பான்மையே. 11

**வேறு**

அன்ன சோலையு ளமுதநீர்த் தடத்திடை யழகாய்
மன்னு தாமரை யடைமிசைப் புனற்றுளி மருவல்
கன்னி யன்னந் தம்மருங் கினின்மணஞ்
செய்தரத்தாற்
பொன்னி லாவுமுத் தாஞ்சன மெடுத்தெனப்
பொலிந்தே. 12

கொந்தலர்ந்தன குவளை விமணி யலைகொழிக்கும்
அந்தண் வாவியுட் குவிவ வித்துருமக் காலனங்கள்
சிந்தையாதரம் பெருகத்தம் பெடைகளைத் திருவில்
வந்தணைந்திடத் தடங்கணை முகிழ்த்தலை மானும். 13

வேறு

இன்னணம் வளமை துன்றி
யிமையவர் நக்கு மிந்த
நன்னக ரொவ்வா தென்ன
நவிறரு சிறப்பு வாய்ந்து
மன்னிய வதனின் வேத
வரப்புகண் டுள்ளந் தேர்ந்த
பொன்னணி நூலி னோர்தம்
பொலன்மறு கனந்த முண்டால். 14

பன்னிற மணியைச் செம்பொற்
பணியையப் பணியைக் கொள்வான்
உன்னிய மனத்தை மேலிங்(கு)
உறுமவ்வூ தியத்தை யென்றுந்
துன்னுநெஞ் சகம தென்னுந்
துலையிடைப் புகுத்தித் தூக்கி
மன்னிய வணிகர் பேரா
வணமறு கனந்த முண்டால். 15

பழுதறு குணத்தி னானும்
பலவிதக் கேள்வி யானும்
வழுவில செங்கோல் மன்னர்க்
கமைச்சியன் மரபி னாலு
மொழுகுதண் புனற்றீங் கங்கை
மரபினு முயர்ந்த வாய்மை
தழுவிய மேழிச் செல்வர்
தனிமறு கனந்த முண்டால். 16

வேறு

வடிவாள் கொழுகோ வினுமா மணிவா
ரிடைசீ றிடுபூண் முனையா னையிறு
நடையா னுமியா ரையுநா டிவெலு
படவா ரணிவீ திவரம் பிலவால். 17

வேறு

இனையதோர் சிறப்பா லிமையவர் நகரு
மளகையு மிதற்கிணை யிலவென்(று)
அனைவரும் புகழு மிந்நகர் நாப்பண்
அவிர்சு(டர் மதிக்குடை) நிழலிற்
கனிவுற மகர வாரிதி யறுவைக்
கனங்குழ லாடனைப் புரக்கும்
பனிமதி மரபிற் பார்த்திபர் செல்(வப்)
பகுதியை யறிந்தவா பகர்வாம். 18

விதிமுறை நான்கு சதுரமா யமைந்த
விளம்பிடிற் பல்கலை யுணர்ந்தோர்
மதியினால் விளைந்த தமிழிடை விரிக்கும்
பொருளென வளர்ந்தன வல்தேற்
கதிர்கள்சூழ் சிலம்பை நிகரெனச் சிறிது
கருதினுங் கருதுவர் புலவோர்
இதுவலா திதுவே இனையவா றுயர்ந்த
தெழின்மதி னிலைமையா ரிசைப்பார். 19

மனத்தினா லறிய வொண்கிலா மையினான்
மறைகளைப் பொருவும்வான் புகலாற்
சினைத்தரு நிழல்வாழ் தேவராம் பொறிக
ளடக்கலான் முனிவரிற் றிகழுங்
கனக்கதி ரயிலான் முருகனைச் சிவனுஞ்
சூலத்தாற் காளியை நிகர்க்கு
மனற்சுடர் மழுவா லைமுகற் கடுக்கும்
யாரத நிலையுணர்ந் தறைவார். 20

நாணமே முதல நான்கினுஞ் சிறந்த
நன்னுத றன்னொடு மொழுக்கம்
பூணெனப் புரக்குந் தன்மைபோ லாமிப்
பொன்மதி னிலையின் புணரி
சேணுற நிவந்த திகிரியைச் சூழ்ந்த
செயலின் தெளிவிலார் மனத்துக்
காணலா நிறத்த விலாக ளுளத்துங்
கீழன கணிப்புரு வகழி. 21

ஏடலர்ந் தினவண் டுழுதுமட் டிருந்த
வெழின்மிகு மம்மதிற் புறத்த
பாடெலாம் மலர்ந்த பங்கயக் கானம்
பணைமுலைத் துவரிதழ் மடவார்
சேடுலாம் வதன வனப்பினுக் குடைந்த
பண்டையச் சிறுமை யைத்தீர்
மாடெலா நெருங்கி வனசமாக் கொழுந்து
வளைந்துநின் றுலெனல் மானும். 22

ஆசிலா தனசெங் கதிர்க்குழாம் விரிக்கு
மத்தமே பணிகளா யமைத்துத்
தேசுலா மிரச தத்தினை யுருக்கிச்
செப்பமாய்ச் சந்துவாய் திருத்தி
மாசிலாய்ப் பவளத் தூணமப் பொருவின்
வளர்சுவ ரடியினு ணிருவிப்
பேசிய வதின்மேல் மரகதக் குலத்தாற்
பேரெழிற் போதிகை யமைத்து. 23

வீசொளி வயிரத் தியற்றுரு நெடிய
வியல்புறு முத்திரம் பரப்பி
யேசில பதும விராகநீண் மரங்க
ளிடையிடை யிணைத்திணை யிலெனப்
பேசுதண் கலையோற் காணினின் றுருகும்
பேரெழிற் கடமைத் தியற்றித்
தேசிகத் தசும்பு மீதுற விளங்குந்
திருக்கிளர் கோமனை பலவே. 24

ஏதமி லனந்த நிறைகலை மதியி
        னிடத்திவை யெடுத்தியற் றியவென்(று)
ஓதலாந் தகைய வெண்ணிறச் சுதையா
        லுஞற்றிய தும்பரின் மதியாற்
காதலா லுருகு மதிக்கலி னுமிழ்நீர்
        தரைமிசை யருவியிற் கான
வேதமா மெனநீண் டுயர்ந்தன மாடம்
        வெண்மலை நிகர்த்தன பலவே. 25

ஒற்றைய சகட(த்) தெழுபரி யிரத
        முடையவ னறிவிலான் கொடிய
கற்றைய கிரணக் கணைதொடுத் தனனென்(று)
        இந்நகர்க் குலமகள் கருத்தின்
உற்றவெஞ் சினத்தா லுடற்கணின் றெழுந்த
        புகையென வும்பருந் திசையு
முற்றிடப் பரவும் வாசமென் புகைசூழ்
        முழுமணி மாளிகை பலவே. 26

பதத்திடு ஞெகிழ்ந்து கட்படுத் துவண
        பணவராப் பஃறலை பதைப்ப
மிதிப்பன நிழலைப் பகையெனச் சிறிய
        விழித்தழல் பொழிதர வெள்ளுவ
துதிக்கை யிற்கன முகிற்குழாம் பிழிந்துண்
        டொழிவின சுரரெலா நடுங்க
வதிர்ப்பன திரைப்பே ரருவியின் மதத்த
        வடுகரி யாலய மனந்தம். 27

பாய்கதிர்க் கிரணத் தருணனைத் தனியே
        பரித்திடக் கதியிலா தெழுவ
ராய்மிகத் திரண்டு சுமந்திளைக் குறுநீ
        ரவனியை யொருபுயத் தெடுத்துத்
தூய்மையாற் புரக்கு மன்னனைத் தனியே
        சுமப்பனுந் துணிவெனு மெனவே
வாய்மிகத் திறந்து சிரித்தென வெண்பல்
        வயங்குமா மந்திர மனந்தம். 28

கரியவன் கொடிய காளமீய்த் தோய்ந்து
கடுங்கொலை திசைதொறுங் கமழும்
பெரியவெங் குலிசத் தினுக்குடைந் தெழுந்து
பிழைக்குறு மியாமெனச் சுடர்வேற்
றரியலர் வணங்குங் குமரர் எட்டேந்திரன்
சரண்புகுந் தடவரைக் குலம்போற்
பெருமுகி லகடு கிழிக்குநீள் கொடியின்
புறந்தின விரதங்கள் பலவே. 29

வேறு

செய்க ளினுந் திரண்மணிச் சாலிகள்
மைக ளினு மடந்தையர் வாள்விழி
மெய்க ளினுநல் வேந்தர்த நாவவர்
கைக ளினுந் தினமுங் கனகமே. 30

சொல்லெ லாமெண் சுருதிக டோய்கதி
ரில்லெ லாமனு ராகவி யாழிசை
கல்லெ லாந்தண் மணிகள் கருநிறச்
செல்லெலா மிஞ்சி மீது திளைக்குமே. 31

தூய விந்நகர் செல்வந் தொகுத்தெனு
லாய வாறுரை செய்தன னூழிசூழ்
மேய ஞால மனைத்தும் விரும்பிய
தாய னன்றன் மனுமுறை சாற்றுவாம். 32

எட்டமாநகரப் படலம் முற்றுப்பெற்றது.

ஆகப்படலம் 5-க்குத் திருவிருத்தம் 101.

# 6-வது அரசாட்சிப் படலம்

தண்மையுந் தவமும் தருமமும் பொறையுந்
தணப்பிலா வொழுக்கமுந் தழைக்கும்
உண்மையும் பகைஞர் முடித்தலை துணிக்கும்
ஊக்கமும் வழுவிலா வுணர்வும்
வண்மையுந் துகடீர் மனுமுறை வளனும்
வகுத்தவை யனைத்தும்வீற் றிருப்ப
எண்மறைக் கிழவோ னழகுறச் சமைத்த
எழின்மனை யனையபே ரிசையோன். 1

சந்திர கிரியிற் புக்கிருந் துயர்த்த
தவம்பொறை தருமமுந் தழைத்த
மந்திர மனுநூ லென்றிவை நான்கு
பதங்களாஅன் மறிகட லுடுத்த
கந்தலில் புவிமே னணுகிநே ரலரை
நகுகதிர் வாளெனு நகத்தாற்
சிந்துற வளைந்து சினப்பசி தணிக்குங்
கொடுத்திறற் சிங்கவே றனையான். 2

எண்டிசை வரைப்பி னுள்ளமன் னவரு
மியாவரு மிடுதிறை முறையே
கொண்டுவந் தளந்து தொழப்பெரு நெருக்கிற்
குலமணி முடியொடு முடிதாக்
குண்டிட வொருவர்க் கொருவர்முன் முகவம்
போருகத் தோங்கெழிற் சரண
முண்டகம் விளக்குந் தன்மையாற் கிரணந்
தழைத்திடு முழுமணிக் கழலான். 3

பைத்தலைத் துளைமுள் ளெயிற்றுவெம் பஃவாய்ப்
பன்னகம் பரித்தபா ருடுத்த
முத்தலை கொழிக்குங் கடல்வயிற் றேன்று
மருந்தினை நிகர்மொழி மடவார்.

பொய்த்தலைக் கிடந்த கொடியிடை வருத்தும்
புளகித முலைச்சுவ டழுத்தி
மெய்த்தழும் பிருந்த மார்பினு னென்னுர்
வென்னிடப் பொருதுவேற் காத்தான். 4

அ(றம்பொ)ருண் முதல நான்கினுஞ் சிறந்தோ
ரறிவினுந் தூயவா யவர்கள்
திறம் பெருங் கேள்விநீண் டன்னுர்
குணத்தினில் மின்னிவாட் செறுநர்
கறங்கெனச் சுழலப் பொருதுவார் புலவு
கமழ்ந்திடக் கண்மலர் வேய்ந்து
மறம்பழுத் தடையா ரின்மையா னும்
வளர்ந்திடும் வைரவாட் படையான். 5

எற்றுதெண் டிரையார்ப் பரவையுட் புவிமே
லிவனலாற் சிறந்தவ ரிலைநீ
ருற்றிவ னருள்பெற் றுய்திரேல் வருதி
ருழுதவ[1] ரொழிதிரென் றுலகின்
மற்றைய வியார்க்குந் தெருட்டல்போ லுவண
வான்கொடி மாடமென் றுரைக்கப்
பெற்றிடு மலைமேல் யார்த்தெலா வுலகுங்
காத்திடும் பெருமைசால் தவத்தான். 6

அஞ்சிறைக் களிவண் டுழுதுழாய்க் கொண்டல்
அறிதுயில் வளர்த்திடு மமலை
துஞ்சிடாப் புணரித் திரையெனத் துவளத்
துடியிடைத் தொண்டையந் துவர்வாய்
மஞ்சுதுஞ் சளகத் திளம்பிறை நுதல
வாட்டடங் கண்முழு மதிசெங்
கச்சமென் முகத்தா ரிருமருங் கிரட்டுங்
கற்றையங் கவரியை யுடையான். 7

---

[1] ருளுதவ என்னுளது

கண்ணகன் வானத் தரவினுக் குடைந்தான்
கனன்மகத் தினிலுதை யுண்டான்
விண்ணிடை யலைந்தான் வளர்ந்துதேய்ந் துற்றான்
மெய்யினின் மருவுளான் விளங்க
வெண்ணரிடி வினைய மதியினை நிகரென்
றிசைப்பன தகாதிவை யெல்லா
நண்ணிடா தென்றுந் துலங்கிடு மதிய
மாமெனு நளிர்மணிக் குடையான்.

பையவா ளரவம் பஃறலைத் திரளைப்
படைந்தன வென்னினும் பதைத்து
மெய்யெலா நடுங்கிப் பொறைபொரு தெருத்தங்
கோட்டுவ விரிகட லுடுத்த
வையக மனைத்தும் வரம்பிலா நாளு
மருவிலா வளர்மதிக் குடையுள்
எய்திய நிழற்கட் சுமந்துநின் றோங்கும்
இமயமா மெனுமணிப் புயத்தான். 9

தண்டமிழ்த் துறைகை வந்தநாற் புலமைத்
தலைவரிற் றழைச்சிறை யறுகான்
வண்டுபாண் மிழற்ற வரைவிலா தென்று
மதுவெனு நன்னிதி வழங்கித்
தெண்டிரைக் கடல்சூழ் புவிமிசைக் கமழ்ந்து
திகழ்ந்துமெல் லென்றித ழலர்ந்து
அண்டரும் விருப்புந் தரத்தன வாகும்
அழகிய தவளமா லிகையான். 10

**வேறு**

கூர ருத கொடுங்கொலை வேலினன்
வார ருமுலை மங்கையர் மாரனு
தார வேள்முத்துச் சாமித் துரைச்செக
வீர ராமக் குமரரெட்ட வேந்தனே ! 11

மன்ன ரியாரும் வணங்கிட வைகலுந்
தன்ன தானைத் தனிக்கதி ராழியாற்
றுன்னு வாரிதி சூழ்புவி யாவையும்
வின்ன மின்றிப் புரந்து விளங்குநாள். 12

அரசாட்சிப் படலம் முற்றுப்பெற்றது.

ஆகப்படலம் 6-க்குத் திருவிருத்தம் 113.

# 7-வது வீரபாண்டிய நகர்வளமுரைத்த படலம்.

பொன்கு யிற்றிப் பொருவில் மாடங்கள்
நன்கி யற்றி விளங்குவ நாண்மலர்
மின்புகப் புக்கு வேதன் விதித்தெனத்
தென்கி ழக்குத் திசையிற் சிறந்தன! 1

சுனைக டோறுந் திருமலர் தூய்பொழிற்
சினைக டோறுஞ் செழிப்பன தேமழை
நனைக ணுண்மல ரெங்கணு நல்லறம்
மனைக டோறும் விளங்குவ தாளுமே! 2

கார்நி றத்த கருங்குயில் காவிடைச்
சீர்நி றைத்த செழுஞ்சொலிற் கூவல்கேட்(டு)
ஏர்மி குத்த வுறுப்பசி யேனைமின்
ஞர்க டத்தமி ழணி யொதுங்குவார்! 3

கொஞ்சிப் பேசுங் குதலைச் சிறுமகார்க்
கஞ்சொ லாளர் தெருட்டிடு மாறுபோல்
இஞ்சொல் வண்டுவந் தேகியெழில் கொள்வான்
வஞ்சி யர்க்கு வகுக்குங் கியானமே! 4

வேறு

சீதநீ ரகத்துட் டோய்ந்த
திருவனூர் மணிமா டத்து
மீதுபோய்ப் புலர்த்துங் கூந்தல்
விரிபொழி லிடத்துத் தோன்றுங்
கோதிலா மயில்க ளேக்கிக்
குலமழை முகிலீ தென்னக்
காதலா லெவருங் காணக்
களிநடஞ் செய்யு மன்றே! 5

வேனில்வே ளனைய செம்பொன்
　　வீதிவாய் நடத்தும் பாய்மாக்
கூனலார் பதத்து வாய்ந்த
　　குழம்பிலு லெழுந்த பூழி
வானவாம் படைத்தண் டேமா
　　வனந்தொறும் பரவித் தேவர்
கானமா மெனப்பேர் பெற்ற
　　கற்பகங் காட்டு மன்றே. 6

**வேறு**

அன்ன மன்னவர் நூன்மருங் கல்லது
பின்ன ரோர்துறை யின்றிப் பிறங்குவ
பன்னு பைம்பொற் பதச்சிலம் பல்லது
துன்னு கின்றது துளக்கமற் றில்லையால். 7

வடுவின் மாநில வைப்பினின் மன்னிய
மிடிய ரேமுதல் யாவரு மேவியிங்
கடைதிர் வல்சி யருந்தற் கெனுவனக்
கொடிக ணீள்கையிற் கூவுத லொக்குமே. 8

முகிலின் மீது முரணமர் வேட்டெழுந்
திகலி நிற்ப வெனுமருங் கெங்கணு
மகலு மாசினி யாம்பிரஞ் சூள்வன
புகலு மாறு புலவர்க் கரிதரோ! 9

பாரின் வாய்ந்திடு பல்வள னுந்தருஞ்
சீரின் வாய்ந்து சிறந்தன திங்களின்
மாரி மூன்று வழங்க வளந்திகழ்
வீர பாண்டிய மெய்ப்பதி யென்பவே. 10

**வீரபாண்டிய நகர்வள முரைத்த படலம் முற்றுப்பெற்றது.**

ஆகப்படலம் 7-க்குத் திருவிருத்தம் 123.

---

# 8-வது சிவகாமு சரித்திர முரைத்த படலம்

அவ்வ ளம்பதி தன்னி னருண்மிகுஞ்
செவ்வி நெஞ்சினன் சேர்குநர்ச் சேர்ந்துறை
தௌவை யங்கட னீந்தக் கருணைசேர்
தெய்வ வள்ள மெனத்திகழ் சீர்மையான்! 1

பொருள்ம ணித்திரள் புக்கிப் புகாறத்
தெருளு முத்தமிழ்த் தெண்டிரைப் பௌவத்தைப்
பெருகு நெஞ்சிற் புகுத்துப் பெறுகுநர்
மருளகெ டத்திரு வாயின் வழங்குவார். 2

உன்னு பேரறமி யாவும்வந் தொன்றியே
தன்ன தாலய மென்னத் தழைத்திட
மன்னு மாக்கையன் மாத்ர மியாவையுந்
துன்னி நாளுந் துலங்குறுஞ் சீர்த்தியான். 3

தென்னு முத்தமிழ்த் தீம்புன லுண்டிட
வெள்ளை மாமுகில் வேண்டுநர்க் கீந்திடத்
துள்ளுஞ் சூன்மழை தூயமு தூட்டிட
வள்ளற் பாற்கட லொத்திடு மாண்பினன். 4

நேமி முற்றுஞ் சுமப்ப நினைந்தயன்
தூம னததுத் தொகுத்த மலையனன்
பூமி னுற்ற புயத்த னெனுஞ்சிவ
காமு மிக்க அயோத்தியர் காவலன். 5

அந்த மன்னவர் மன்ன னருந்தவம்
முந்து செய்த முறைமையி னனும்வான்
இந்த வையக மியாவையு மெண்ணினள்
தந்த நற்றவ முற்றிய சால்பினும். 6

பொய்கை வாயினம் போருகஞ் சங்கினுண்
மையில் சோதி மணிநெடு வையமேற்
றுய்ய தேவ சுரபிச் செருத்தவாம்
பையுளின் சுவைப்பா லும்பிறத் தல்போல். 7

ஞால மெய்க்கட லும்பரின் மீதிளங்
கோல மெய்த்தி னகரன் குலவிய
போலு தித்துப் பொலிந்தனன் பூமிசை
பாலன் மிக்க வழகெனும் பண்பினன். 8

பின்னு மானிலஞ் செய்தவப் பெற்றியால்
மன்னும் வானின் மதிநிக ரென்னவும்
பன்னு தேவரி பான்மக னென்னவும்
உன்னு கின்றகா மாட்சி யுதித்தனன். 9

நற்ற வப்பய னுளுடி விளங்கிடக்
கற்ற வர்க்கருள் கற்பக மாமெனச்
சொற்ற மெய்த்தவந் தோன்றற் கிளவலா
யுற்றனள் பெருமா ளென்னு முத்தமன். 10

ஆய மைந்தர்கள் மூவரு மன்பினல்
தூய பேருரு மூன்றுள் துலங்கிய
நேய நல்லுயி ரொன்றென நீளயிற்
சேயை யொத்த தனையர் சிறந்தனர். 11

வளர்ந்த வந்த மகாரொரு மூவர்க்கு
முளம்பொ ருந்த வுலகம் புகழ்ந்திட
விளைந்த மன்றல் விதியா னியற்றினன்
தளர்ந்தி டாதவர் தந்தரு டாதையே. 12

கன்னி போகமக் காளையர் மூவரும்
வன்ன ராமனுஞ் சீதையு மாலுமப்
பொன்னும் வானிற் புரந்தர னுஞ்சசி
மின்னு மென்ன மணந்து விளங்குநாள். 13

மன்னர் மூவரின் வண்டமிழ்க் கொண்டலை
கான மென்னக் கவின்பெறுங் காளையைப்
பொன்னின் மெய்ச்சிவ காமுவைப் பூமிசைப்
பன்னு கின்றகா மாட்சி பயந்தனன். 14

காரிற் றேன்றுங் கதிர்மணி போலவு
நீரின் வேலை யமுதை நிகர்ப்பவு,
மார மார்ப னருளினன் பின்னர்வின்
மார ஞைஞ்சுப்ப ராச மகிபனை. 15

மற்ற டம்புய வள்ளலை மாசிலாக்
கொற்ற வேந்தர் புகழுங் குருசிலை
நற்ற வச்சிவ காமுவை நல்கினன்
கற்ற நூற்பெரு மாளெனுங் காளையே. 16

வேத வேள்வி விளங்கிட மேதினி
நீத மல்க மனுநெறி நீடிடக்
கோதி லாப்பெரு மாளெனுங் கோவினைப்
பேத மின்றி யுயிர்த்தனன் பின்னரும். 17

இந்த மன்னரு மைந்தரு மிவ்வகை
கந்த நாண்மல ருங்கமழ் வாசமு
முந்து பாகுஞ் சுவையு முழுமணி
தந்த சோதியு மொன்றித் தழைத்தல்போல். 18

தாய்நி கர்த்த தசரத ராமனும்
சேய்நி கர்த்த விளைஞருஞ் சேர்ந்தென
நேய நற்றரு மம்பொறை நீடவந்
தூயமற் றுந்து வன்றித் துலங்கிட. 19

வனப்பின் மிக்க மயின்முறை யாமெனத்
தனிப்பில பற்பல செல்வந் தழைத்திட
வினைத்தெ ஞுவகை வாழ்ந்தன ரினன்று
ணினைத்து ரைப்ப னழகு நிலைமையே. 20

*சிவகாமு சரித்திர முரைத்த படல முற்றுப்பெற்றது.*

ஆகப்படலம் 8-க்குத் திருவிருத்தம் 143

---

# 9-வது அழகு பிரபலமுரைத்த படலம்

எல்லெ லாம்வந் திரப்பவர்க் கேநனி
வல்ல வாறு வழங்கி மதிவலோர்!
சொல்லு நூலின் சுருதிப் பொருடெரிந்
தல்லெலா மெந்தை கண்ட வறிவினன். 1

தந்தை மூப்பிற் றளர்ந்தன னயெனு
விந்த வைப்பிற் கிவன்றனை நாடியே
வந்து காத்தற் கியற்றினன் மன்றலங்
கொந்து யிர்த்ததண் கோகன கத்தினன். 2

விண்ணும் மண்ணும் வியக்கும் விளங்கெழி
லண்ண லெம்மிள வைக்கதி பற்கிரு
கண்ணுங் கண்ணின் மணியுங் கலந்துடன்
நண்ணு கின்ற வுயிரெனு தண்பினன். 3

தண்பு னற்றுறை மூழ்கிச் சதுமறைப்
பண்பி னர்க்குப் பணிந்து பசும்பொனே
டெண்பு னற்பெய் தெனைத்துள நாடொறு
முண்ப வர்க்குட னுண்ணு முணவினன். 4

முட்டி லாதன மூரல் கருணைமற்
றட்டு நாளு மயில்பவர் நேடியே
கொட்டு பேரிக் குரலி னழைத்தவர்க்
கிட்டு வாழு மழகெனு மேந்தலே. 5

வேறு

அனைய மிக்கநா ளரும்பெறன் மகவிலா மையினன்
பனையி னேடுயர் மாதவம் பலபல வாற்றிக்
கனைக டற்புவி மகிழ்ந்திடக் கலியிரு ளகலப்
புனைக திர்த்தின கரனெனப் புகழ்க்கதிர் தழைப்ப.

நல்ல வாயிரத் துடனொரு மூன்றென நவிற்றும்
வல்ல வாண்டுமீன் மதிதெய்தி மூவொன்பான்
மறையோர்
சொல்லு திங்களுத் திராடமு மகரமுந் துலங்க
மல்லன் மாநிலத் தீன்றனன் மைந்தனை
மணிபோல். 7

ஈன்ற பாலகற் கிணையிலா மறைப்பொருண்
முடிவை
ஆன்ற பைம்பொனூ லவர்களால் ஆசறப்
பகுத்துத்
தோன்று சாதகத் தொழில்முத லாற்றிடச்
சுதன்வாள்
கான்ற வான்மதி வளர்ந்தென வளர்ந்தனன்
களித்து. 8

இன்ன வாறவன் வளருநா ளெழிலுறத் தோன்று
மன்ன நாள்களுங் கோள்களு மழகுற விளங்கித்
துன்னலா லிவன்றவம் பொறைதரு மத்தின்
றுணைவன்
என்ன லாமென நூல்வலோ ரிசைத்தன
ரிசைந்தே. 9

குன்ற ரிந்தவைக் குலிசன்வாழ் நகரிடைக்
குலவும்
பொன்ற யங்குழைந் தளிருடைப் படர்சினைப்
பொழிலை
வென்ற வண்மைய னுமிவன் விளங்கிடு நாமம்
என்றும் யாருங் காமாட்சியென் றிசைமின்க
ளென்றார். 10

அனைய வாறவர்க் கப்பெயர் புனைந்துபே
ரழகாய்ப்
புனைய வேண்டுபல் கலன்களும் வகைவகை பூட்டிக்
கனியுந் தாதையுந் தாயரும் பிறவியங் கடலை
நனிக டப்பநற் றவமென வளர்ந்தனர்
நயந்தே. 11

பின்னு மன்னவ னிணையிலாப் பேரெழில் பிறங்கி
மன்னு கின்றவோர் மைந்தனைப் பயந்தனன்
மணிபோல்
அன்ன வனெழில் கண்டவர் அழக ரப்பனிவன்[1]
என்ன வோதினர்[2] மதியென வளர்ந்தனன்
இளவல். 12

குலவும் வெண்மணிக் குவையினை முகந்தலை
கொழிக்கும்
ஒலிநெ டுங்கடற் புவியின ரும்மையி னுஞற்று
நலிவி னல்லறம் பயனென நவின்மறை யென்னச்
சிலைகொண் மாரவே ளென்னவும் வளர்ந்தனர்
சிறுவர். 13

கன்னல் முப்பதிற் றிரட்டிநாண் முப்பது
கலையோர்
பன்னு மாமதி யிரண்டிரு[3] தைந்தொன்று பருவம்
அன்ன வாறுசென் றைந்தெனும் பருவம்வந்
தணுகத்
தன்னை நேரின்முற் றனையனை நோக்கிய
தாதை. 14

இளமை யிற்கலென் றுரையுணர் முதுமொழி
யியல்பான்
வளமை மிக்கநன் மைந்தனை மாசிலா மணியை
உளம லர்ந்துசெந் தேனென வுதித்தவுத் தமனைத்
தெளிய நற்றமிழ் தெருட்டிடச் சிந்தனை
செய்தான். 15

துங்க ஞந்திரு வம்பல தேசிகற் றொழுது
அங்க ழைத்தக னிலம்பல நிதியமு மருளி
இங்கி வர்க்குமுத் தமிழறி வுறுத்துமி னென்னுச்
செங்கை யாற்பிடித் தவன்கையிற் கொடுத்தனன்
சேயை. 16

---

1. ஓசை குறைகின்றது 2. வோதினன என்றுள்ளது
3. யிரண்டிருப எனல்பொருந்தும்.

அன்ன வாறிளங் குமரனை யருவியை நிகர்த்த
கன்ன மாமத வைங்கரக் கயமுகக் கடவுள்
பொன்னின் வார்கழல் புனைவித்துப் புந்தியாற்
பரவிச்
சொன்ன நூலினை யுணர்ந்துளத்
தெளிந்தனன் ஞேன்றல். 17

இனைய வன்னவா றுயினை னிவன்றனக் கிளைய
பினவன் றன்னுடன் பிளையர்க ளுயிர்த்தபா
லகரு
மனைய வாறெனத் தெருண்டன ரழகுபெற்
றெடுத்த
முனவன் றன்றிற மறிந்தவா றெடுத்தினி
மொழிவாம். 18

அழகு பிரபலமுரைத்த படலம் முற்றுப்பெற்றது.

ஆகப்படலம் 9-க்குத் திருவிருத்தம் 161.

---

# 10-வது காமாட்சி பிரபல முரைத்த படலம்

வல்ல பல்கலை மாட்சியால் வழுவிலா வழியிற்
செல்ல நாடொறுஞ் சிந்தைசெய்
தொழுகுறுஞ் செயலான்
மல்லன் மாநில வரைப்பெலாம் வைகலு மிவனை
நல்ல னாமென வுவந்திட வளம்பெறு நாளில். 1

மனக்க வின்செயி லிருசெவிக் காலெனும்
வழியாற்
கனக்க வின்றமிழ்த் தெய்வக் கங்கையங் கடனீர்
அனைத்தும் பாய்தலி னறிவெனும் பயிர்தழைத்
ததனுள்
தனக்கு நேரிலாத் தருமமும் விளைந்தது சால. 2

வேறு

கண்ம லர்க்கட் கடவுள் கடற்புவிக்
குண்மை மிக்க வறத்தை யுஞற்றியே
தண்மை யுந்றுத் தழைத்திடு தற்கிவன்
வண்மை மிக்க மனத்தை யியற்றினன். 3

வைய மென்னு மறுவில தாயவோர்
செய்யின் மீது சிறந்த புகழினை
உய்ய வைத்துப் படர்ந்திட வொன்றல
னைவி னற்றரு மம்பல நாட்டினன். 4

ஓத வேலை யுலக மெவற்றினும்
வேத வேள்வி விளங்கின நூனெறி
நீத நீடின நீள்தவ மோங்கின
போத மல்கிப் புகழுந் தழைத்தவே. 5

வஞ்ச மெஞ்சின மாற்றல ரஞ்சினர்
பஞ்ச பாதக மியாவும் பறிந்தன
வஞ்சு வெம்பிணி முற்று மகன்றன
மிஞ்சு பார்மகள் சிந்தை வியந்தவே. 6

வேனில் வேளும் விரும்பும் வனப்பினன்
தேரின் வாய்ந்த செழுஞ்சொற் றெருட்சியான்
ஊனி லாவு முயிர்த்தொகை யாவையும்
வானி லாமெனச் சொற்றிடும் வண்மையான். 7

கற்று ணர்ந்த கருத்தன கலைவலார்
சொற்ற வாபணி சூடுந் துணைப்புயன்
பெற்ற மூரும் பிரான்கழற் றாமரை
பற்று நெஞ்சினன் பங்கயக் கையினன். 8

ஈந்து சேந்த செழுங்கை யிரண்டினன்
வாய்ந்த பல்கலை மாசற நுண்பொரு
ளாய்ந்து சேந்தரு ணெஞ்ச னடையலர்க்(கு)
ஆய்ந்து சேந்த கருங்கதிர் வாளினன். 9

காச்சி மிக்க கருத்தின ணம்பினர்
தாழ்ச்சி யற்றுத் தழைத்திட நாடொறு
மாட்சி பெற்றரு ளாய்வளை யாயகா
மாட்சி பொற்பதம் வாழ்த்திய மாண்பினன். 10

வண்ட லம்பு மறற்கு மைக்குழல்
தொண்டை யங்கனி வாயிளந் தோகையர்
கண்ட வாவுறல் பெட்பலக் காளையர்
பெண்ட நீர்மையைப் பெட்புறுந்
தோளினன். 11

காச்சி மிக்க கவின்பெறு முன்றிலான்
தேர்ச்சி யலவர் செழுங்கடை சென்றிலான்
மாச்சி மிக்கவர் செய்தவ வண்மையிற்
றாழ்ச்சி யின்றித் தழைத்திடும் வாழ்வினன். 12

கொண்ட லொத்த கொடையினன் தொல்புவி
அண்ட முற்றும் படைத்தறிந் தன்பினல்
முண்ட கத்து முழுமுத லாயினன்
பண்ட மைத்த பழிப்பி லுறுப்பினன். 13

மாதி டத்த குவளையும் வண்மைசென்(று)
ஓதி டத்த குவளையு மென்மலர்க்
காதி டத்த குவளையுங் காமுறுந்
தாதி டத்த குவளையுந் தாங்கினன். 14

தேவு மிக்க செழுமணி மாடமு
மாசில் கொற்றத் தனிமனை முன்றிலும்
நேச மிக்கு வளர்ந்தருள் நெஞ்சமும்
வாச மிக்கு வளருந் தனத்தினன். 15

மாத ருய்த்து வருசந் தனத்தினன்
சோதி மெய்க்கழ ஞேய்வந் தனத்தினன்
ஈதல் பற்றி யிலங்குந் தனத்தினன்
பூத முற்றும் புனைபந் தனத்தினன். 16

இன்ன வாறு புகழுட னியாவர்க்கும்
மன்னு நாட்டமு மாமணி போலவும்
உன்னு பூவு முறுமண மொப்பவும்
பொன்னுஞ் சோதியும் போன்மென
வாழுநாள். 17

மையில் சிந்தை யிளைஞரு மாசிலாச்
செய்ய மாநகர்ச் செல்வச் சிறூர்களும்
உய்ய வந்தொருங் குற்றிட வேகியே
தெய்வ வாவியுட் சென்று திளைப்பனல். 18

கந்த வாவி திளைத்துக் கரைமிசை
வந்து பூதி வனப்பினைத் தாங்கியே
முந்தை வெம்பவ முட்டறுத் தாடகும்
எந்தை பூசை யினிதி னியற்றுவான். 19

தக்க பூசை தனைமுடித் தாடர
வக்க மாலிகை யரன்கழற் கன்பர்தாள்
புக்கு வந்தனை செய்து புரையறு
மிக்க புண்ணிய நூல்கள் வினவுவான். 20

பல்கலைப்பொருள் தேர்ந்து பழுதிலாச்
செல்வ மாமனைச் சென்றரு டாதையை
நல்கு தாயை நறும்பனி நீரினால்
மெல்கு பாதம் விளக்குவன் மெய்மையால். 21

வாச மொய்த்த மலர்கொ டருச்சியா
நேச முற்று வணங்க நெடிதவர்
தேசு பெற்ற வுவகையிற் சென்றெடுத்
தாசி சொற்றி யருட்கட லாட்டுவார். 22

முல்லை மென்முகை யாமெனு மூரன்மற்(று)
எல்லை யில்ல வினியன யாவையும்
வல்ல வாறு வரனடி யார்கட்கும்
பல்ல வர்க்கும் பகுத்தினி துண்பனால். 23

வைக ரேறும் வரன்முறை யீதெனச்
செய்க நாளும் வளர்ந்தன செல்வமும்
உய்க நற்றரு மம்புக ழோங்கின
தெய்வ நீதி செகத்தினில் தழைத்தவே. 24

வேறு

எண்ணி ரண்டெனும் பருவமம் மகற்குவந்
தெய்தப்
புண்ணி யம்புரி தாதையும் தாயரும் புதல்வர்
நண்ணி யாய்ந்தறி கல்வியு மெழிலும் பன்னலனுங்
கண்ணி னாலுண்டு களிப்பெனுங் கடலிடைக்
கலந்தார். 25

மனம கிழ்ந்தவர் மாசிலா நாட்டமா தவத்தால்
இனைய மைந்தனைக் காணலாற் பெற்றபே
றெதிர்நதே.
புனைத ருந்திரற் குமரனைப் புவியெலாம் மகிழ
வனையு மங்கலங் காணிய நினைந்தனர் பனத்தே. 26

அவ்வ ளம்பெறு நகர்வயி னினிதமர்ந்
தருள்வோன்
தெய்வ வுண்மைசால் சிந்தையன் செவ்வியிற்
சைவ வாகமச் சலதியைக் குடித்தரு டவத்தோன்
பௌவ வாடையன்[1] புகழ்மல்ல பேந்திரனும்
பண்போன். 27

மெய்வ ருந்திய தவத்தினல் விரும்பியீன் றெடுத்த
மெய்க்க ருங்குழன் முருந்துறள் வாணகை
முயலில்
துய்ய தண்சுடர் நிறைகலை மதியெனத் துலங்குஞ்
செய்ய வானனத் துவரிதழ்த் திருவெனச்
சிறந்தாள். 28

பொற்பி னுக்கணி கலமெனப் புவிபுகழ் புனிதக்
கற்பி னுக்கருந் ததியெனக் கவின்மிகுங் கருணை
யற்பி னுக்கிணை யுளகொலோ வனையிலர்க்
கனையாம்
நற்புக ழப்பெறும் லெக்கெனச்[2] சிறந்தன
ணமம். 29

இன்ன தன்மைய பொன்னென விளங்கெழி
லியைந்தாள்
தன்னை நல்கிட வுவந்தனன் றனைப்பெறுந் தாதை
முன்னை நல்வினை பயத்தலான் முடிகலா துளவோ
அன்ன வாறிவன் றுதையு மிசைந்தன
ணதற்கே. 30

---

1 வாடையள என்றுளது 2 இலக்குமி

அதற்கி யைந்தவ னருமறை வேதியர்
தமைக்கூய்
மதர்த்த வேல்விழி வனிதைக்கு மாசிலோன்[1]
றவத்தி
னுதித்த மாணிளங் குமரற்கு முயர்மணப்
பொருத்தம்
விதித்தல் வேண்டுமென் றடிதொழு
துரைத்தனன் வீரன். 31

மாசி லர்தவ னுரைத்தலு மனநிறை பிணித்த
தேசு லாமறைத் தட்டினி லிருவர்க்குஞ் சிறந்த
வாசி லாதநற் கிரகமா மரும்பெரும் பொருளோ
வாச நாறுதண் தாமரை வாகுவின் வனைந்தார். 32

வைத்து நன்குறத் தூக்கலின் மாசிலா வாக
மெய்த்து மங்கல விதிசெயச் சிறந்தநாள்
விதித்து
முத்த வெண்குடை நிருபனுக் குயிரென மொழிய
மத்த யானையன் றற்கவை யுரைத்தனர்
மகிழ்ந்தே. 33

**காமாட்சி பிரபல முரைத்த படலம் முற்றுப்பெற்றது.**

ஆகப் படலம் 10-க்குத் திருவிருத்தம் 194.

---

1 மாசிலென என உளது.

## 11-வது நகரணிந்த படலம்

கேட்ட வேந்தலும் வரம்பிலா மகிழ்ச்சியுட்
கெழுமிப்
பூட்டு மன்பினல் மருங்கினர் பொலன்முகம்
நோக்கிப்
பாட்டு வண்டுசூழ் தெரியலங் குலிசவாட்
படையான்
நாட்டு நன்குநன் னகர்புதுக் குமினென
நவின்ருன். 1

வேறு

அவ்வுரை தலைக்கொடு வினைய மைந்தரு
மைவிழித் துவரிதழ் மடநல் லார்களுஞ்
செவ்வியிற் சிறந்தவன் சிறப்பைக் கண்ணினு
லொவ்வுறப் பார்த்துமென் றுவகை யெய்தினர். 2

வான்ருெடர்ந் துலவிய மகர தோரணஞ்
சான்றெனப் புவிக்குயர் தரும மாமென
ஏன்றவன் மணச்செய லிங்கு நாளையென்(று)
ஆன்றவர்க் குரைத்தென வமையக் கட்டினர். 3

சித்திர வினைச்செயல் சிறந்த தூணநீள்
பத்தியி னிரைத்துநீள் வளைகள் பாய்ச்சிவா
னத்தினு மெழில்பெறப் பந்தர் நாற்றிவெண்
முத்தினு னெடுஞ்சர முழுதுந் தூக்குவார். 4

வழுவிலா மணிப்பொதி வயிரத் தூணெலா
முழுகவெண் டுகுறை முற்றும் போர்ப்பராற்
பழுதிலா வகையொளிர் பசும்பொற் பூரணச்
செழுமணித் தசும்பினஞ் சிறக்க வைப்பரால் 5

புயருெடு கதிர்மணிப் பொலம்பொன் மாடங்கள்
நயமுறச் செறிதுகள் தவிர்த்து நாண்மதி
செயல்புரிந் தெழிலுறத் தீற்றி னலெனப்
பயிலும்வெண் சுதையினற் பயனுய்ப் பாரரோ. 6

கன்னிநன் னகரெலாங் கவினக் காருரும்
வென்னவா னரம்பையின் வருக்க நாட்டுவார்
பொன்னியற் பசியநீ ளகமும் பொற்புயத்
துன்னிவான் றைவரத் தொகுப்பர்
சுற்றெலாம். 7

சந்தன மகிலுட னாரந்தந் தண்பனீர்
மைந்துற விராவியெம் மருங்கு நாடியே
சிந்தன ராகியங் கெழுந்த சிற்றுகள்
நந்துற வடக்குவார் அணங்க ரைகளே. 8

காதுவேல் விழியினார் மணத்தின் காட்சியாற்
போதுவார் புனைமணிக் கழலைப் புல்கிய
பாதநன் மணிகளாற் பதைப்பு ருவகை
சீதநாண் பலர்க்குவை நடையிற் சிந்துவார். 9

கோதைவேற் குவிசிகை குழைக்குஞ் சரபமும்
ஏதமுற் றிதனிணை யிலமென் றேமுற
ஆதியா னெனவள ரம்பொன் மாளிகை
சோதிவான் றோரண முகப்பிற் சூட்டுவார். 10

சுற்றெலா மாடகத் தகட்டிற் றேய்ந்தன
மற்றைய திலனெலாம் பளிங்கின் வாய்ந்தன
மிற்றவ டிணைதொறும் விளங்குபா லிகையுங்
கற்றையங் கதிர்விளக் கினமுங் காண்பரால். 11

அஞ்சன மணிகளத் தமலற்[1] போற்றிய
கஞ்சநா யகன்குலக் காளைக் காய்வன
மிஞ்சிய வேணியால் விட்டதங் கைபோல்
மஞ்சிவர் நெடுங்கொடிக் குழுவ குப்பரால். 12

விண்டினம் பலசொறிந் திரங்கு மீமிசைக்
கண்டுயின் றெழுதரு காட்சி போன்மென
அண்டர்வான் றைவரும் அம்பொன் மாடமீ
மண்டகின் றும்புகை யதும முப்பரால். 13

---

1 = ?

அம்பரத் தறல்குடித் தழகு வாய்ந்துயர்
அம்பரத் தெழுமுகி லனைய வார்குழல்
உம்பரத் திளநரு வொழுகு பூந்தொடை
யும்பரக் கவின்பண முலவச் சேர்த்துவார். 14

வான்மிசை யிளமதி நடுவண் மாசறு
வான்மிசை முயலிடை கிடங்கு மாறென
மான்மிசை பொருவிழி மகளிர் காளையர்
மான்மிசை தரக்கருந் திலகம் வைப்பரால். 15

மடலவிழ்த் திளநரு வருந்தி வண்டினம்
படரிரை பிலிற்றுமப் பதும நாயகச்
சுடர்குடக் கடலிடைச் சுருக்கி வல்லைகீழ்க்
கடல்வயி னெழுகெனக் கரங்கள் கூப்புவார். 16

இன்னணம் நகர்புனைந்து இலங்கும் பேரெழில்
பொன்னகர் பொருதிரற் குலிசி[1] பூண்முலை
வன்னவா ணகையயி ராணிமன் றல்செய்
அன்னநாள் மயனினால் அமைந்த தொத்ததே 17

மன்னவர் புகழ்பெறு மகிபன் மன்றலின்
அன்னலங் காணுவான் வருதுநா ளையென்(று)
உன்னிவல் லையிற்கர மொடுக்கி யாதவன்
பொன்னின்மா நெடுந்தடம் பொருப்பிற்
புக்கனன். 18

கொண்டலைப் பழித்தகைக் குரிசில் மன்றலுக்(கு)
உண்டைகொண் மேற்றிசை யுவாவுக் கொண்சுடர்
மண்டிய முகபடாம் வளைத்த போன்மெனக்
கண்டிடக் குடதிசை சிவந்து காட்டிற்றே. 19

தம்முயிர்க் காதல னகலச் சார்கலா
விம்முறு கற்பினா ருளத்தின் மென்மைய
சும்மைய மெல்லிதழ் சுருக்கி முண்டகம்
பொம்மலின் றெனும்படி குவிந்த பொய்கையே. 20

---

1 – ?

செல்வநீண் கரியின் சிறப்பு நோக்குவான்
புல்கிரு ளறுவைய வடிக்கண் காவிய
அல்கலில் குயின்மொழி யமைந்த பேரெழில்
பில்குறு மாலையம் பேதை தோன்றினள். 21

நம்பினர்க் குதவுவான் மணத்தி னெலெழில்
பம்பிய பந்தருட் படாத்தி னீட்டிய
வம்புலாந் திரணவ மணிகள் போன்மெனு
உம்பர்மீத் தாரகை யொழுக்கம் பூத்ததே. 22

பாய்திரைப் புணரிசூழ் புவியிற் பல்லுயிர்த்
தாயனுள் மணவறைத் தலத்து வேதியர்
ஆயுநான் மறைவழி யமைத்து வைப்பதற்(கு)
ஏயும்வெண் குடமென விந்து தோன்றின. 23

விண்ணிடை நிமிர்சுடர் மதிய மேயதன்
தண்ணிற நிறைகதிர் தழைக்குந் தன்மையவ்
வண்ணறன் வதுவையின் பொருட்டவ்
வண்டம்வான்
வெண்ணிறச் சுதைகொடு விளங்கல் போன்றதே. 24

மாற்றல ருயிர்தொறும் வைர வாட்காத்(து)
ஏற்றவன் முதலிய வமரர் யாவரும்
ஆற்றிய வதுவையி னழகு நோக்குவான்
நோற்றதிற் படைத்ததோ விமைப்பி ளேக்கமே. 25

கொந்தவிழ் மறைமலர்க் கொழுநன் றேர்மிசை
வந்தில னெழிற்றிரு மகிண ஞழியான்
முந்தையின் மறைந்தவோ மூரி வெவ்வரா
உந்துற விழுங்கின வோவென் றுன்னுவார். 26

காரெனுங் காதலன் வதுவை காணுவான்
பார்மிசை யனைவரும் புகுதும் பான்மையின்
போர்மிகுஞ் சிறுவிதி மகத்துப் புன்பழிச்
சீர்மையை நாணியோ வென்றுஞ் செப்புவார். 27

பட்டிகைப் பணைமுலை யெயினப் பைந்தொடி
தொட்டிடு மகிணனைச் சிரித்துத் தொல்புரம்
அட்டவன் சபிக்குநாட் கொடிக்கு மன்னவா(று)
இட்டது முளகொலோ வெனவுங் கூறுவார். 28

மைந்தரு மகளிரு மினைய வண்ணமே
சிந்தையி னுணர்வுறுந் திறத்து வாரணம்
ஐந்திடர் கதிரவ னணுகி னானெனச்
சுந்தரக் கரம்புடைத் தறியச் சொல்லிற்றே. 29

கற்றவர்க் கருடருங் கருணை வாரிதி
பெற்றிடு வதுவையின் பெருக்க நோக்குவான்
ஒற்றையந் திகிரியா னுவந்தங் கோதநீர்
எற்றுதெண் டிரைக்கடன் முகட்டி னேறினான். 30

நகரணிந்த படலம் முற்றுப் பெற்றது.

ஆகப் படலம் 11-க்குத் திருவிருத்தம் 224.

# 12-வது கோலங்காணினர் வரவுப் படலம்

தேசிலகு காளைமண மானது தெளிக்கும்
பாசுரம தேகொடுயர் பாரக வரைப்பின்
மாசில்புகழ் தூதுவர்கள் மாருதிநி கர்க்கு
மாசுடையர் நேயமோ டடைந்தனர்க ளன்றே. 1

நீட்டியமு டங்கலுரை யைத்தெளிகி லாமுன்
நாட்டியபு கழ்க்குரிசி னன்மணம்வி ரும்பிப்
பாட்டியன்ம துத்தெரிய லார்களொடு பானல்
வாட்டியவி ழித்திருவ னூர்வருவ தானூர். 2

கொண்டலையு ழக்கியபு ழைக்கையகு லாவி
மண்டுதன்னி ழற்பகையி தாவெனம லைக்கு
மொண்டிறன்ம தக்கைமலை மீதுவகை யோடுந்
திண்டிறலு டைக்குமரர் சென்றனர னந்தம். 3

வெய்யவனுக் கைக்கும்ரத மாவையுநின் மேய
மையகதி யெற்கிணைவ ராதெனந கைக்குங்
கொய்யுளைவ யக்குரக தத்தின்மிசை கொண்டே
பொய்யின்மத னொப்பவர்கள் புக்கனர னந்தம். 4

காணின்விலை யோவளவி லதனக திர்த்த
பூணுமிரு கோடானபு காதுகண்வ ழுக்கி
நாணுறுநி றத்தமழ வேறுகண் டத்து
மாணெழில்கொள் பண்டிவரு வார்களும னந்தம். 5

காசினியின் மீதமுத லீறுகவி கைக்குப்
பேசுதலை யானவைய லாதனபி றங்கித்
தேசிலகு மீதுவகை சிந்தைமிசை கொண்டே
வாசவனெ னுவிரைவின் வந்தனர னந்தம். 6

தேக்கியுமிழ் கின்றனசி றப்பமறை நாலும்
வாக்கிடைபி றந்துலவ மாமணிமுன் னூல்கள்
பூக்கமழு மார்பிடைபொ ருந்தவெழின் மேவி
மீக்கமழு மேனிபல வேதியர டைந்தார். 7

நாற்றிசையும் வாழ்வினுயர் நால்வருண மீது
தோற்றுமவ ரும்புதிய சூடகவ ளைக்கைக்
கூற்றுறழு நீள்விழிய கோதையரு மொன்றி
மாற்றருக ளிப்பின்மண மாநகர டைந்தார். 8

கந்தடுக ளிற்றனைய காளையர்பு கர்முன்
தந்தமுறை யிற்றழுவி யுந்தலைப னித்துஞ்
சிந்தையின்ம கிழ்ந்துவத னத்தருள்சி றந்து
மந்தரமெ னுந்தனது வாழ்மனையி னுய்த்தான். 9

எண்டிசைவ னப்பினவர் யாவர்களு மெய்தக்
கொண்டுமத கன்றெழில்செய் கோலமணி மாடம்
பண்டுபுவி கொண்டிடுந றும்பவள வாயப்
புண்டரிக மேனியன்வ யிற்றிணைபொ லிந்த. 10

**கோலங்காணியர் வரவுப் படலம் முற்றுப்பெற்றது.**

ஆகப்படலம் 12-க்குத் திருவிருத்தம் 234.

# 13-வதுமணக்கோலங் கண்ட படலம்

மந்தரபு யத்தழகு மன்னவர்கள் மன்னன்
முந்துறவி ருப்பவர்மு கத்தையெதிர் நோக்கிச்
சுந்தரம கற்கணிது லங்கிடவி ளக்கி
யிந்தநக ரிற்பவனி யுய்த்திடுமி னென்ருன். 1

தூயமணி வீசுகடல் சூழ்புவியெ வைக்குந்
தாயனைய வவ்வுரைத ராதவன் முன்னர்
நாயகிகா மாட்சிபத நன்குறவ ணங்கி
நேயமொடு நீடெழில்வ னைந்திடநி னைந்தார். 2

செங்கமல மங்கைமகிழ் செல்வனையு வந்து
மங்களவி தம்பெருக மங்கையர்கள் வாழ்த்தச்
சங்கெறித டந்திரைய நம்பன்முடி தங்கு
கங்கையைநி கர்த்தபுன லாட்டினர்க ளிப்பால். 3

பொற்குவையு ருக்கியிழை செய்தவைபு ணர்த்தி
விற்குலவ நெய்ததின்வி ளிம்புதொறு நான்கு
மெற்கிடைத ராமணியி னத்தினிலி யற்று
நற்கலைகொய் தன்னவர்ந லம்பெறவ ணிந்தார். 4

கோடுயர்பொ னங்கிரியின் மீதொருகு ழந்தைப்
பீடுயரி ளங்கதிர்ப் பிறங்கருண னென்ன
நீடொளித ழைத்தகன கச்சரிகை செய்த
சேடதிக பாகுயர்சி ரத்திடைய ணிந்தார். 5

வள்ளலுணர் ஞானமுத லாயதமிழ் வர்க்க
முள்ளுறநி றைந்துமிசை யுற்றெழுகன் மானத்
தெள்ளுகதிர் நீடியுயர் பாகிடைசி றக்கக்
கள்ளுண்மல ரானிலவு காருடைய ணிந்தார். 6

கற்றையக திர்ச்சிறும திக்கடவுள் காணின்
ஒற்றையல யொற்றையொடி ரட்டையினொ ருங்கே
துற்றுசுட ரிற்பரிதி தொக்கெனவு வந்தே
நெற்றிமிசை புண்டரநி ழற்றிலக மிட்டார். 7

கோதையக னங்குழல்கு றிப்பினையு ணர்ந்த
தூதரவண் வந்தவைதொ குத்தெனவி லங்குஞ்
சீதகன கம்பெருகு சேயொளித ழைந்த
காதிணைய குண்டலமி சைத்தனர்க னிந்தே. 8

அண்டர்முத லியாருமில மைந்தபெரு மாயை
விண்டிலர்க ணீர்வெறுவ லென்றிதய மீது
கொண்டுரைசெய் தென்னநடு நாயககு லப்பூண்
கண்டிகைமு தற்பலக வின்பெறவ ணிந்தார். 9

பாகினினி தாமுரைய பாவைபுண ராமுன்
மோகமுடன் மாணெழில்கொள் மொய்ம்பிடை மணப்ப
தாகுமென லாயரக தத்திரளி னந்தண்
வாகுவல யந்திரண்ம ணிப்புயம ணிந்தார். 10

செக்கமல முற்றவனை சேயிழைகை பற்று
மிக்கவெழி லைத்தெரிது நாமெனவி ரும்பி
இக்கையினி லெக்கையென வெண்ணியிரு கையும்
புக்கெனமி னற்கதிர்க ரத்தணிபு னைந்தார். 11

வேழவிலி ஞனெழின்வி ரும்பும்விரல் வீரன்
பாழியகை நல்வினைப யப்பதனை நாடி
யூழியெனி னுமுணர வொண்ணுமிஃ தென்றே
யாழிவிர லுற்றெனவ ணிந்தனர்க ளம்ம. 12

பூமகண்ம ணந்தனபு யத்தனக னெஞ்சின்
மாமகன்வ ருந்திநம்ம னைக்குரிய ளான
நாமகள்பொ ருந்தினள்கொ லோவெனுந லத்த
கோமளம ணிக்கலவை பூசினர்கொ ணர்ந்தே. 13

கட்டுளப னுற்றகடன் மத்திகக னத்த
வட்டவரை யுய்த்தவைவ டத்திடை பிணித்த
திட்டமென வொப்பநடு வட்கதிர்செ றித்த
பட்டிகைமு தற்பலப ணித்திரள்பு னைந்தார். 14

கோலமலர் வாளியகொ டுஞ்சமரி னைஞெந்
தாலம்விழி யோவெனவ மைந்தமட நல்லார்
ஏலவிடு தூதியர்க டாடொழுதி சைப்ப
போலமணி யார்கழல்ப தத்திடைபு னைந்தார். 15

நீடுதிரி கூடமெனு நேமிவிசை விண்டோய்
கோடதிலி ரண்டருவி கொண்டொழுகன் மான
வாடுதுகில் கொய்தவைய ணிந்ததனோ டந்தண்
தோடடரு நாண்மலர்பு யத்திடைதொ குத்தார். 16

### வேறு

அனையவா றழகு வாய்ந்த
வரும்பெறற் குமர னம்பொற்
புனைமணிச் சிவிகை யேறிப்
புளகிதத் துணைமென் கொங்கை
நனையவார் கூந்தன் மாத
ருடலி னீத்த நாண
கனமணி யாரந் தாங்கும்
வீதிவாய்க் களிப்பச் சொன்னன். 17

**மணக்கோலங் கண்ட படலம் முற்றுப்பெற்றது.**

ஆகப்படலம் 13-க்குத் திருவிருத்தம் 251

## 14-வது பவனிப் படலம்

வண்டுலாந் தெரியன் மாலை
மழகளி றனைய கோமான்
அண்டர்வான் பதியா மென்ன
அணிகிளர் வீதி மேவக்
கண்டன ராகி னெஞ்சங்
களிப்பெனுங் கடலு லாழ்ந்து
தொண்டையங் கனிவாய் மாதர்
தோகையங் குழாத்திற் சூழ்ந்தார். 1

கொந்தளஞ் சரிந்து சோரக்
கொடியிடை நுடங்கக் கொண்ட
எந்தனி ரனைய தூய
மேகலை யவிழ்ந்து வீழச்
சுந்தர தரளப் பைம்பூண்
சிதறிடத் தொடிகள் சோர
மந்தர முலைபோ ராட
மதுநுக ரளியின் மொய்த்தார். 2

நாணினை முதல வாய
நால்வகைப் பொருளு மாரன்
கோனுடை வரிவிற் சேர்த்த
கொடுங்கணைத் திருடர் கொள்ளப்
பூணுறுங் கலைகள் வீழ்த்தும்
புனைமணித் தொடிகள் வீழ்த்து
மாணெழிற் குமரன் பின்னே
மயிற்குலம் வருவ போன்றார். 3

பட்குவை பழித்த சொல்லின்
பாவையர் பரவை முன்பின்

எட்கிட மலைவான் மாரன்
இருங்கழை யறுகா லெய்தும்
புட்கவி னெடுநாண் பூட்டிப்
பொருந்திறல் வலியை யன்று
கட்கனிந் தொழுகு பூந்தண்
கணைதொடுத் தரிதிற் கற்றான். 4

படைமதன் பகழி யானும்
பைங்கழைக் குமர னன்றன்
தொடுமணச் சிறப்பி னானுந்
தொல்லுருத் தெரித ரேற்றாக்
கடையயி னெடிய வாட்கட்
கனங்குழற் காம ரஞ்சொற்
பெடையிள மயிலார் தம்மிற்
பேதுற் றுடங்கி னால். 5

நீங்குமி னீங்கு மென்று
நிலைதடு மாறி நின்றார்
ஆங்கதன் புறத்துப் பொம்மல்
இளமுலை யழுத்தவ் வேடன்
பூங்கணை பொறுக்க லாற்றாப்
புரமிடு மனையார் தம்மைப்
பாங்குற முடுகி வேழ
மருப்பினாற் பாய்தல் போலும். 6

கள்ளுடை மலரின் மூசுங்
களிச்சிறைத் தும்பி பாடத்
தெள்ளரிச் சிலம்பு கூடத்
திரண்முலைத் துணைபோ ராடத்
தன்னிடை வாட நின்ற
தமைப்பிரிந் தவன்பா லோடு
முள்ளநாம் பிடித்து மென்றாங்
கோடுகின் றாரு மொத்தார். 7

மனங்கவர் வனப்பி ஞனை
வீதிவாய் வரக்கண் டேங்கி
அனங்கவேள் சரத்தா ஞெந்த
வணங்கனு ளொருத்தி யம்பொற்
கனல்கிளர் மனைக்கு ளாகி
உருவெளிக் குமரற் கண்டு
தனங்களாற் றழுவிக் காணு
நாணினுற் சாம்பு கின்ருள். 8

சுடர்த்தொடி யொருத்தி விம்மித்
துகளறப் பணைத்துப் பொன்வார்
அடர்த்தெழு முலையை நோக்கி
மேலையி னறஞ்செய் யார்க்குங்
கிடைக்கரி தினைய போகங்
கிளர்மணிப் புயத்தைச் சேர்ந்து
கடக்கவேள் சரத்தை யான
தவஞ்செயக் கருது மென்ருள். 9

கண்ணுடைக் கரும்பன் பூந்தண்
கணைகளாற் கவின்செய் மேனி
புண்ணுறப் பொருத ஞேக்கிப்
புரிகுழ லொருத்தி வேணீ
பெண்ணினிற் பிறந்தி லாய்கொல்
பிறைதவழ் சடிலப் பீடார்
அண்ணலைப் பொருதி யேனின்
ஆண்டொழி றெரியு மென்ருள். 10

பொருசிலை வேனி லான்றன்
பூங்கணை பொருது மாழ்குந்
திருவனு ளொருத்தி செம்பொற்
சிவிகையிற் சிறந்து தோன்று
முருகவே ளனையான் றன்னைத்
திசைதொறு முயன்று நோக்கி
உருவெலா மவனுய்த் தோன்றல்
என்கொலென் னுளத்தி லோர்ந்தாள். 11

வேலினைக் கயலை வென்று
　　விரிசுடர் வாளை வென்கண்(டு)
ஆலமேற் பொருவான் சீறு
　　மயிற்கணு ளொருத்தி யண்ணற்
கோலவிக் குரிசில் சாந்தக்
　　கொழுமணிப் புயத்தைக் கூட
மேலையெத் தவத்தி னளோ
　　மெல்லியல் காணு மென்றாள். 12

கூனிள மதிய மில்லைக்
　　குளிர்திரி பதகை யில்லை
மானின மில்லைச் சூல
　　மழுவில்லை வியாழ மில்லை
கானிறை கரந்தை சூடுங்
　　கடவுளன் றிவனை நின்கைப்
பூனனி தொடுத்து என்னிற்
　　புணர்ந்திடிற் புகழுண் டென்றாள். 13

கோற்றொடி யொருத்தி மன்றற்
　　குமரனை யெதிர்ந்து காம
மாற்றல ளாகிச் சங்க
　　மணிகலை பிறவுந் தோற்று
ஏற்றுதஞ் சேடி கையின்
　　ஏகிப்பி னிணங்கி யென்றன்
மாற்றரு முளத்தைத் தேடி
　　வல்லையிற் கொணர்தி யென்றாள். 14

சாந்தமும் பூணு மாரன்
　　தடஞ்சிலைச் சரமுந் தாங்கு
மாந்தளிர் மேனி யாளோர்
　　மடமயின் மருங்கு நின்ற
காந்தளி னனைய கையாள்
　　ஒருத்தியைக் குமரற் காண
ஏந்துக வென்னை யென்றாங்(கு)
　　இருகரங் கூப்பி னளே. 15

பொன்ளெடு மணியி ஞன்ற
புனேகளும் புயலார் கூந்தல்
துன்னிய மலருஞ் சாந்துந்
தொடிகளுந் துகிலுஞ் சேர
இன்னக ரதினுன் வீதி
எங்கணுஞ் செறிந்த திந்த
மன்னிய பொருளெ லாம்பூ
மடமகள் புனேந்த போலும். 16

வேறு

இன்னவன் மாதர்பல ரிறைத்தீண்டிப் புடைசூழ
வெழுந்து போந்து
கன்னமத மொழுகுகய முகவீர பாண்டிய
கணபதியின் கோயின்
முன்னரெழுந் தருளிவலம் புரிந்துதொழு
தெழுந்துமுழு
முதல்வ தேவா
பன்னரிய பரமவெமைப் பன்ஞளுங் காத்தியெனப்
பணிந்து போற்றி. 17

மாதவனே வலம்புரிந்து பணிந்தெழுந்து
மகிழ்ச்சி வேண்டி [வாழ்த்திமிகு
யாதியா மயோத்தியர் கட்கருள்செய்குல தெய்வமதா
யழகு வாய்ந்து
நீதமுறுங் காமாட்சி சிலம்பணிபங் கயச்சரண
நெடிது போற்றித்
தாதைமலர்த் தாள்பணிந்து முன்புநின்ரு
தழைக்க வந்தான். [னிவ்வுலகந் 18

நின்றவிளங் குரிசிறனே நெடிதுவந்து
நிழலார் செம்பொன் [தடக்கையினுல்
மன்றல்கமழ் மலர்மார்பி னுறவணேத்துப் 'பலகாலு
மகிழ்வாற் புல்லிப்

பொன்றளிரின் மிகுங்கதிரா லொருகோடி சூரியர்கள்
புகுந்த போலும்
மின்றிகழ்பொன் னாசனந்தன் மருங்கினிலுய்த்
திருந்தான் வீரன். [திருக்கவென 19

அன்னபொழு தவன்றுதை யருகிருந்தார் தமைநோக்கி
யழகாள் மிக்க
பொன்னினெழில் படைத்தாளைப் புனைவனசெய்
புகழ்சே ரிந்த [தொருநொடியிற்
மன்னவையிற் கொணர்திரெனக் கடிதேகி மணமானை
வரத்தா லீன்ற
வன்னமணித் தோளாற்கு மகிழ்பெருக வுரைத்தார்கள்
மதியான் மிக்கார். 20

ஆயவுரை தனைக்கேட்ட வவட்பயந்தா னருகுநின்ற
வவளைப் பெற்ற
தாயனையாட் கிசைப்பவவள் கடிதேகி யயோத்தியர்தந்
தவத்திற் றோன்றுந்
தூயவளைக் குலமயிலைப் பெண்ணினருங் கலத்தையிம்பர்
துதிப்பான் வந்து
மேயவளை யிலக்குமியை மிளிர்பசும்பொன்
விளக்கஞ் செய்தார். [முதற்பணியால் 21

கோகனக மனைக்குரிய கோமகளோ கொழுஞ்சினைக்கற்
பகத்தி னீழன்
மாகனக நகரிலுறை மேனகையோ சனகன்மட
மகளோ மிக்க
பாகனைய மொழியிரதிப் பைந்தொடியோ வெனவனப்புப்
பலவு மீட்டி
வாகனைய மணிச்சிவிகை மீதேற்றி நகரைவலம்
வரச்செய் துய்த்தார். 22

பவனிப் படலம் முற்றுப்பெற்றது.

ஆகப்படலம் 14-க்குத் திருவிருத்தம் 273.

# 15-வது மணம்புரி படலம்

கன்னியர்கட் கணியையவ ரணிக்கணியைக் கற்பரும்பூங்
காமர் பூங்கொம்
பன்னவளை யன்னநடை யாரணங்கை யரியதவத்
தருமை யாலே
இந்நிலமெ லாம்புகழ வினிதீன்ற தாதையுட
னினிய காதல்
துன்னுபெருங் கிளைஞர்முதற் பல்லோரு மணமகனில்
தொக்கா ரன்றே! 1

கண்டவர்கட் கடங்காத வனப்பினு விளமையினுற்
கருணை தன்னல்
மண்டுநவ மணிப்பணியால் மணமகனை மணமகளை
வனப்பி ணேக்கி
முண்டகக்கண் முகிழாத முறைமையினு
முழுதும் வானத் [லவணடைந்தோர்
தண்டரிவண் வந்துறைந்தா ராமெனலா
கரிது மாதோ. [மலதியம்பற் 2

பொன்பூத்த கிளர்தடந்தோட் புரவலரு மனமெனடை
புயலார் சூடந்தன்
மின்பூத்த விடையாரு மிவ்வண்ண மிருந்ததற்பின்
வேத நாவான்
அன்புற்று[1] சிந்தையினன் சந்திரசே கரனெனுமெய்
யந்த ணாளன்
மன்போற்றும் புகழாய்கேள் மணத்தினுக்கு நல்லோரை
மருவிற் றென்றான். 3

என்றவுரை தனைக்கேட்டவ் விந்திரற்கு மெய்தாத
வினிய போகந்
துன்றிவளம் பெறுமழகு மன்னவன்றன் மொழிப்படியே
சுருதி யாவு

---

1 அன்புற்ற எனல் பொருந்தும்

நன்றறிந்த மணிநூலார் தருப்பைகொடு நளிர்கனக
நயனத்தி ஞலே
அன்றமைந்த மணத்தவிசி னதனிடையிற் புக்கிருந்தார்
அறிவான் மிக்கார். 4

பைங்கழைவே ளிரதியெனப் பணைத்தருவாள் சுந்தரியும்
பதியு மென்னக்
கொங்கலரும் பொழினிடதக் கோமானுங் கோற்றொடியுங்
கூடிற் றென்னப்
பொங்கியபோ கமும்யோகம் புணர்வதெென வுடலுயிரும்
பொருந்திற் றென்ன
அங்கனக மணிக்கூட மணமகனு மணமகளும்
அணுகி ஞரால். 5

பசியவெண்டண் டுலம[1]மைத்து விதிமுறையின்
பரப்பி மீது [மண்டலமாய்ப்
விசையமணிக் குடமமைத்தாங் கதனருகி ஞேமகுண்டம்
விதியி ஞற்றிப்
புசியிதென நவசமித்தும் பொறிகளுமிட் டிழுதைபதிற்
புகட்டி மிக்க
வசையில்கனல் வளர்த்துமற்றை யாகமுமி யற்றிஞர்கள்
அந்த ணாளர். 6

ஆசின்மறை மந்திரத்தா லந்தணர்கள் வளர்த்தசுடர்
அழலின் கோமரன்
தேசிலகு மழகுமலர்ப் பங்கையங்கை யாற்கொடுத்த
செழும்பொ னெல்லாம்
நேசமுறப் பெருமறையோ ரகத்துவகை வளர்ந்ததென
நெடிய நாவான்
வாசமுறச் சொரிந்தபல வாகுதியுண் டகமகிழ்ந்து
வளர்ந்தா னன்றே. 7

---

1 பச்சரிசி

### வேறு

மணமகளை முற்றவவ லத்தினரு டாதை
பணைதருநி முற்குரிசில் பாவையென நாளும்
இணையிலெழில் பெற்றவிவ ளும்பொருவி னீயுந்
தினைமிசைசி றக்கவென நல்கமகள் செங்கை. 8

பல்லியமு ழக்கமொடு பார்ப்பனக ணத்தோர்
சொல்லுமறை யாசிமொழி தோகையர்கள் வாயால்
நல்லகுர வைத்தொனிக ணாலுதிசை மேவும்
ஒல்லொலிக டந்றொனியி னோடிகலு மாதோ. 9

வேதவிதி யிற்கனலி வேதியர்கண் மற்றோர்
ஆதிகிளை யுள்ளவர டுத்தவர்கள் காணக்
கோதையகு முற்குயில னாளையெழில் கொண்ட
மாதினைம ணிப்புயவ வள்ளல்கைபி டித்தான். 10

பற்றியவ ளங்கைபல பணைக்குலமு ழங்கக்
கற்றையசு டர்க்கண்வல மாகவரு காலைப்
பொற்றொடியு டற்கணிழல் பற்றியது போல
மற்றிணையி லானெடுபி னாகிவலம் வந்தாள். 11

ஆளியைநி கர்த்தவன லத்தகம ணிந்த
தாளிணையெ டுத்தனைய னாணவொரு தானே
மீளியரை கல்லின்மிசை வைத்தலும்வி ழித்தான்[1]
வாளொளிவ ளைக்கையவ ருந்ததியை மன்னோ. 12

மற்றையன செய்குவது செய்துமழை வள்கைக்
கொற்றவன்ம ணந்தனன்கு[2] லக்கொடியி னோடும்
பெற்றவர்மு தற்பெரிய வர்த்தொழுது பெட்பிற்
சொற்றமகிழ் வானமண வைரத்தவிசு தொக்கார். 13
தாதுறும லர்த்தவிசி னிற்றருவி னானும்
மாதுமென மான்மகனு மாதுமென வாழுங்
கோதையொடு காமசுர தக்கடல்கு டைந்தே
ஓதரிய பேருவகை யாலினிது றைந்தார். 14

---

1 விளித்தான் எனல் பொருந்தும்.  2 ணந்தனகு என்றுளது

**வேறு**

மற்றைய பகற்றின மகிழ்ந்து மாசிலாப்
பொற்றடந் தோளினுன் பொருவி லந்தணர்க்
கற்றமி லறுவை பூண்முதல வங்கையாற்
பெற்றிடக் கொடுத்தனன் பெய்யு நீருடன். 15

ஒல்லையி னம்முறை யுவகை மீதுறப்
பல்லவர் மகிழ்ந்திடப் பரிவி னீந்துமே
செல்லுநர் செல்கெனச் செலுத்திச் செம்மையால்
எல்லையின் மகிழ்வொடு யினிதி ருந்தனன். 16

மத்தமா களிற்றுன் வையம் வாழ்த்திய
உத்தமி யிளநல மினிதி னுண்டுமே
தத்தையின் மொழிய சந்ததியைப் பெற்றவன்
இத்தலம் புகழ்தர விருக்கு மேல்வையின். 17

தனைப்பெறுந் தாதையுந் தாயுந் தாழ்விலா
நினைப்பரும் பல்வள னெடிது துய்த்தபின்
வினைப்பகை களைந்துபோய் விளங்கி னுனரோ
நனைத்துணை ரிதழியா னளினத் தாளினே. 18

தாழ்ச்சியற் றமைதியாற் றுய்க்குந் தந்தைக்கும்
மாட்சிய செய்கட னமைத்தங் கன்பமை
காட்சியி னுலகெலாங் களிக்க வாழ்ந்தனன்
மாட்சியா லுயர்ந்தகா மாட்சி மன்னனே. 19

இத்திற மனையனு மிளைஞர் யாவரு
முத்தம மலருயாங் குலவும் வாசமும்
வைத்திடு மணியும்வான் கதிரு மன்னிய
ஒத்தரும் புவியெலா முவப்ப வாழுதாள். 20

**வேறு**

மன்னவர்கள் புகழ்ந்தருள்கா மாட்சிபுரி நற்றவத்தின்
மகிமை யாலே
விந்நிலமெ லாம்புகழ வினிதீன்ற பாலகர்க்கு
மிணையி லாத

பொன்னின்மணிக் கிளர்தடந்தோட் பெருமானற்
புதல்வர் யார்க்கும் [றவத்தின்வரு
முன்னைவிதி யாற்பொருவின் மணஞ்செயற்கு
முயன்ருன் மன்னே. [மனத்தினிடை 21

அன்னபொழு தவன்செயலை யறிந்துமல்லப்
மன்னல் பானிம் [பேந்திரனெனு
மன்னவனுஞ் சிவகாமு வரைப்புயத்தை மருவவென்றன்
வரத்தால் வந்த
கன்னல்மொழி யன்னநடை வள்ளியம்மான் தனையும்
கன்னி தன்னைத் [லெக்காங்
தன்னிகரில் பெருமான்பொன் வரைப்புயமுந்
தருவ லென்ருன். [தழுவநன்கு 22

எல்லிரதப் பசும்புரவி மிசைவருகுஞ் சினைத்தருவின்
இனங்கள் சூழப்
பல்வளனுஞ் சிறந்தசிவ ஞானநக ரிடத்தளகைப்
பதியி னென்னச்
செல்வமிகப் பெருகிவளர் சூப்பணராக கேந்திரன்றன்
திருவ ஞளை
மல்லன்மணஞ் செயக்கொடுப்பன் சுப்பிரமணிய
மலர்ந்தான் மன்னே. [வேட்கெனவாய் 23

தனத்தினு லீகையினுற் கேள்வியினு னிகரிலான்
தரும நீதி
அனைத்தும்வாழ் சினகரமா மிராமலிங்க மகிபதியின்
றருழுங் காமர்
பொனைத்தரையி னிகரிலார்க் குலமயிலை மிலக்கென்னும்
பொருவி லானை
மனத்தின்மகிழ் சிவகாமு மன்னனுக்கே கொடுப்பலென
வழங்கி ஞளுஸ். 24

தாயனைய நற்குணத்தான் தனதனென மிகுந்தசெல்வந்
தழைத்து வாழுந்
தூயனவன் லெக்ஷுவெனத் துலங்குதிரு நாமத்தான்
தொன்னாட் செய்த
நேயமுறு நற்றவத்தா லீன்றவெழில் மடமயிலை
நிகரி லாத
சேயனைய வழகரப்ப செம்மலுக்கு மணம்பேசிச்
சிறந்திட் டானல். 25

இனையரிவ்வா றியைந்ததற்பி னெழில்பெறுநன்
இணையி லாது [முகுர்த்தமதில்
புனைவனசெய் துலகமெலாம் புகழ்ந்திடமுன்
புணர்த்தி யிந்தக் [முறையின்மணம்
கனைகடல்சூ ழுலகமெலாங் காத்தருளுங் காமாட்சி
கருணை யாற்புன்
வினையறவென் னுயிர்க்குயிரா யிருமெனவாண்
மேவி னானல். [டிருத்தியுடன் 26

வேறு

அந்நிலை நான்மறை யந்தண ளர்க்கும்
மன்னிய பொருளிலா மற்றையோர் கட்கும்
முன்னைய முறைமண முடித்து வைத்தனன்
பொன்னொரு கோடிமேற் பொருந்த நல்கியே. 27

மணம்புரி படலம் முற்றும் பெற்றது.

ஆகப் படலம் 15-க்குத் திருவிருத்தம் 300.

# 16-வது தன்மார்த்த காம மோட்ச கவனிப்புப் படலம்.

மருமலி மாலையான் காமாட்சி
    மன்னவ(ன் ரு)னிவ் வாறு
தருநில வரைப்பின் வாழுஞ்
    சதமகன் றன்னைப் போலும்
பெருமைநீ டளகை மேய
    பிங்கலன் றன்னைப் போலுந்
திருவளர் புவன மீது
    சிறந்துவீற் றிருக்கு நாளில். 1

அண்ணறன் வரம்பில் செல்வம்
    ஆங்கவன் புகழே போல
எண்ணிட வடங்கா தாகி
    இசையுடன் தழைத்து நாளுங்
கண்ணகன் பரவை ஞாலங்
    கலியிரு ணீத்து நாளு
புண்ணியம் வளர்த்துக் குன்றாப்
    பொலிவுட னிறைத்த[1] தன்றே. 2

வேறு

பல்விதத் தெருட்சியான் ஞானப் பாரதி
நல்கிய வுணர்வினு னுளத்து நாடுவான்
செல்புனற் குமிழியிற் றிகழு மாக்கைய
வல்லிருட் காலென வருமிவ் வாழ்வரோ! 3

மாயிரும் புவிமிசை மறலி வாழ்கதிர்
ஞாயிறை நமதுவாழ் நாளை நாடொறு
மாய்வுறும் படியென வமைத்த லாலருள்
தோய்விலாத் தொழிலினைத் தொடங்க
    றாயதோ! 4

1. னிலைரந்த என்றுளது.

நல்வினை யுணர்கிலா வுள்ளம் நாடொறும்
அல்லல் வெவ்வினைக் களையடர்ந்த புன்னிலஞ்
சொல்மறை நுழைகிலாச் செவிகள் துன்னிய
வெல்விடப் பணியில் வன்மீக மென்பவே ! 5

செய்வன செய்யுங்கால் மறந்து தீயசெய்(து)
உய்வன உணர்கிலா உடலம் போற்றிடின்
மைவளர்த் திடுநிற மகிட வாகனன்
எய்துமப் போழ்தையி னென்கொல் செய்வதே. 6

ஏற்பவர்க் கியைந்தவா றீகி லாதகை
பாற்படு தருவி னீழ்விழுதின் பண்பெனில்
மாற்படு தருவினைக் காக்கு மற்றது
தோற்படு முடற்கிவை சுமைய வாதியா. 7

செம்மைய வல்வினை சிறப்பச் செய்திடின்
இம்மையிற் பல்வகைப் போக மெய்தியே
வெம்மைய மறலியை வெருட்டி வென்றுபின்
அம்மையிற் பிறக்கிலா வருளும் எய்துமே. 8

செயத்தகு நல்லறம் பிறவி தீர்தர
வியற்றிய வமிழ்துவீ டெய்து காலையிற்
பயிற்றிய துணையமன் பாச மிற்றுக
வயத்தடு சுடரின்வாள் வகுக்குங் காலையே. 9

தண்டுண ரிதழியந் தலைவன் றன்பத
புண்டரீ கத்தினுக் கேற்ப பொற்புறக்
கொண்டதோ ரேணியாந் தினமுங் கோதறக்
கண்டிடி லறமென வுயிர்க்குக் காவல்யா. 10

என்பன பலநினைத் தினிய நல்லறம்
வன்படு பிறவிநோய் மாற்று மென்னவே
அன்பொடு நல்வினை யொழுக்க மாற்றுவான்
தன்புலம் பொருந்தினன் தருமங் காவலான். 11

வேதியர்க் கிருநிதி வெறுப்ப நல்கியும்
ஆதுலர்க் கறுசுவை அமுத மூட்டியுங்
கோதிலா வொக்கறங் குருக்கண் மற்றைய
நீதிசால் பவர்க்குநன் னிதிய மீந்தனன். 12

ஆலய நியதிய ளமைத்து மன்னமா
சாலையுந் தண்புனற் சதுக்கந் தண்டளிர்ச்
சோலையு முற்றுறத் தொகுத்துஞ் சூழ்திசை
நாலுமே புகழ்தர விளங்கு நாள்வயின். 13

**வேறு**

இவ்வண்ண மனையான் பன்னு ளிருந்துழி[1] மழலை மஞ்சொல்
செவ்வண்ணத் தனையரின்றிச் சிந்தையிற் கவலை கூர்ந்து
மைவண்ணப் புயங்கம் பூண்ட பரமனை நினைந்து நெஞ்ச
நைவண்ண முடையனாகி வைகின னவையி லாதாஸ். 14

மன்னவ னிவ்வா றுங்கண் வைகிட மலையம் பூத்த
கன்னிகைக் கொருபா னல்குங் கடவுட னருளி னாலே
யன்னவ னுளத்தின் மேய வருங்கவ றீர்ந்த வண்ணந்
தன்னையா னறிந்த வாறு சாற்றுதும் புவியின் மன்னே! 15

**தன்மார்த்த காம மோட்சக் கவலிப்புப் படலம் முற்றுப் பெற்றது.**

ஆகப் படலம் 16-க்குத் திருவிருத்தம் 315.

---

1 விருந்துளி என்றுளது.

## 17-வது சங்குச்சுவாமி வரவுப்படலம்

கொண்டல்கள் படிந்துதுயில் கொண்டெழுக விண்டோய்
தண்டலையு றுங்கிளியு ணர்ந்தமறை தன்னை
அண்டர்தரு வின்சுகம ரிந்திடவு ணர்ந்தும்
ஏண்டிசைபு கழ்ந்தபசு வந்தனையெ னும்பேர். 1

அப்பதியி டத்திலறி வானனிசி றந்த
வொப்பரிய கங்கைவரு ணத்தனுணர் வாளன்
மைப்படிதி ரிபவாம மலர்க்கழல்ப ழிச்சும்
விற்பனம காவிரத மெய்த்தவவி சாலன். 2

தாதைதமழு வாளியனை சங்கரித னக்குக்
கோதினக ரோகயிலை வீடுகுடி வைகத்
தீதகலு மீசனிரு சீர்பதம னித்தம்
பேதமுறு மிச்சிறுபி றப்பெனநி னைப்பான் 3

தன்னொருபெ ருந்துணைமெஞ் ஞானமது தாரம்
பன்னரிய மெய்ம்மைபொறை பாலனறி வான
துன்னரிய நற்குருவு யர்ந்தவருள் தோழன்
அன்னையுயர் சாந்தமென வாசறம திப்பான். 4

நோக்குவது மாபதிமெய் யன்பர்தமை நோக்கிக்
காக்குவது மெய்ம்மையைய றக்கொடிய காமம்
போக்குவது வன்கொடுபு லப்பகையை யெல்லா
நீக்குவது யிர்க்குறுதி யாமெனநி னைப்பான். 5

வேறு

இத்தகை யுணர்வான் மிக்க விறையவ னியற்கை யான
வித்தக யனைத்து மென்றல் விளம்புதற் கடங்கா தன்ன
உத்தமன் சங்கு தேசிக ரனந்த னுருவான் மிக்க
சித்தச னெனுங்கா மாட்சி திருமனை புகுந்தான் மன்னோ. 6

### வேறு

வந்த மாதவர் பிரானையவ் வள்ளலு மெதிர்கண்(டு)
எந்தை மாதவப் பயன்கொலோ யான்புரி தவமோ
முந்தை யோர்புரி விரதமோ முன்னமிக் குடிசை
தந்த நற்றவ மோவென நினைந்தெழுந் தனனால். 7

பன்ன ரும்பகல் கண்டிலா வருந்திய பசுங்கன்(று)
அன்ன தாயினை வரவுகண் (டு) அஃதுவால் குழைத்து
முன்னின் ஓடியே முயங்குறும் பான்மைபோன் முனியான்
தன்ன ருட்கழன் முடியுறப் பணிந்தனன் தவத்தான். 8

வணங்கி மாதவ மணியினைக் கொண்டுத மனைவாய்க்
குணங்கொ ளாசனத் திருத்திநீர் கொடுபதம் விளக்கி
மணங்கு லாவுநன் மலர்களா லவன்பத மலர்கட்(கு)
இணங்குபூசனை வான்முறை திருத்தியாண் டிருந்தான். 9

### வேறு

சுடர்ப்படும் பளிங்கு தன்னுட்
கரந்துறை பொருளைத் தோன்றித்
திடப்படப் புறத்தி ஞர்க்குத்
தெளிவிக்கும் பான்மைத் தேபோற்
கடக்கரி யனையா னுள்ளக்
கவலைவான் முகம தென்னுந்
தடப்பெருங் கமலங் காட்ட
அறிந்தனன் தவத்தின் மிக்கான். 10

மன்னவர் மனவா வானம்
வரவுகண் டருளாப் பைங்கூழ்
என்னவு மகிணற் கா ணு(து)
இருந்தகற் புடையாள் போலும்
உன்னருள் வதன பங்கே
ருகமலர் சிறிது வாடிப்
பொனின்மா மேனி வேருய்
மெலிந்தமை புகறி யென்ருன். 11

மாதவக் கொழுந்து சொற்ற
 வாசக மன்னன் கேட்டுப்
பேதமற் றெழுந்து ஞானப்
 பிரானடி பணிந்து போற்றி
வேதவித் தகவா னந்த
 வெள்ளமே வினையே னன்ன(து)
ஓதுவ னடிகட் கென்ன
 வள்ளலாண் டுரைக்க லுற்றான். 12

### வேறு

முன்ன மென்குல முதல்வர் வழிவழி முறையே
யின்னி லத்தினி திருந்துபல் போகமு மெய்தித்
தன்னை யொத்தபல் தனையரை யுயிர்த்துமா தவத்தாற்
பொன்னின் வார்சடை யானிடம் புகுந்தனர் பலரால். 13

அடிய னேனுமக் குலத்தவ தரித்துநின் னருளான்
முடிவி லாதபல் வளனெலா முறைமுறை துய்த்துப்
படியின் மீதினிற் பற்பகல் கழித்தன னினிமேல்
நெடிய போகங்க ளெவற்றையும் விரும்பில நெஞ்சம். 14

நீரின் மேற்படு குமிழியு நெடிய வானிடத்துக்
காரின் மேற்றிகழ் மின்னலு மிடிபடு கரையாம்
பாரின் மேற்றிகழ் பல்கிளைப் பழுமரம் தானு
மோரின் மேற்படு மந்நிலை யேனுமில் லுடலம். 15

புலவு நாறுவெண் டசையினை யிரத்தமாம் புனலுய்த்(து)
அலைவி லாவகை சமைந்தமட் பாண்டமீ தமர்வேட்(டு)
உலவுங் கூற்றெனுங் கொடியவன் தடியெடுத் துடைத்தல்
விலக வல்லவா றுளகொலோ மேதினி வரைப்பின். 16

வலவ னுலெடுத் தாட்டிய பாவையிவ் வடிவங்
குலவு சூத்திர முள்ளுயி ராங்கது குறைந்தால்
நிலையெனு மிந்த நெட்டுடற் கிவைதனை நிலையென்(று)
அலையு நாயினேன் எத்திறம் அரன்பதத்(து) அடைவேன். 17

முந்தை நூற்படி யறம்பல வியற்றினு முக்கண்
எந்தை யாலய மியற்றினும் வணங்கியாண் டிருந்துஞ்
சிந்து வேமுதற் றீர்த்தங்கள் பலவற்றுட் டிளைத்தும்
மைந்த னில்லவர் வான்கதிக் கரைதனை மருவார். 18

குதலைத் தீஞ்சொலா ரமுதினு னெஞ்சகங் குழைக்கும்
மதலைத் தோண்மிசை மகிழ்ந்துநின் றூடிடு மறுமை
விதலைக் கேறிடா தானடித் தேறிட விடுக்கும்
புதல்வர்ப் பேறிலார்க் கென்கொலோ மனையறம் புரிதல். 19

எச்ச மற்றவ ரிலத்திடைச் சமைத்தலின் னமுதும்
பொச்ச மற்றவ ரயின்றிடார் பண்டையோர் புனிதன்
பச்சம் வைத்தது சுவையுடன் படைந்தபா லடிசில்
நச்சி யுண்டில னென்னையாண் டருள்புரி நம்பன். 20

முன்னை வெம்பவத் தடியனேன் முற்றுணர் விலனாய்
என்ன வல்வினை யியற்றின னோவன்றி யிந்த
மன்னு சன்மத்தி னியற்றிய தீவினை வலியோ
பொன்னனை யொத்தொளிர் தனையரிலா ருயகம் புலர்ந்தேன். 21

கொஞ்சு மென்மொழிக் குதலையுண் டுளங்களி கொள்ளவுஞ்
செஞ்சி லம்பொலிச் சிறுநடைச் செவ்விநோக் கிடவும்
மிஞ்சு தண்ணமு துண்டிடு மிச்சிலுண் டிடவும்
வஞ்ச னேன்கவ லிகுதென வுரைத்தனன் மாதோ. 22

இன்ன வாசக மிருசெவிக் கமுதெனக் கேட்டு
மன்னு மைம்பொறி யடக்கினோன் றிருமுக மலர்ந்து
பொன்னின் வார்சடைப் புனிதன தருளினற்புதல்வர்
உன்னி லுண்டுனக் கீதொன்று கேட்டியென் றுரைப்பான். 23

**வேறு**

முத்தலை கொழித்து நான்மருங் குடுத்த
மூரிநீ ருலகிடத் தியாரும்
உத்தம நெறிநின் றன்னெறி யொழுகும்
உத்தமர் குறிப்பினைத் தொழுகிப்

பித்துறு கதத்தைப் பிணிப்பன நீக்கிப்
பேதுறும் பொய்யினைக் கடிந்து
சத்துறு வெனமோ கத்தினை யகற்றிக்
கொடும்பழித் திறத்தினைத் தகைந்து. 24

நானெனுங் கொடிய வாணவக் களையை
நாடொரும் வேரறக் களைந்து
வானக முதல் வைம்பெரும் பூத
மறவரை வசப்படுத் தடக்கி
ஊனிடை பொதிந்த வுடற்சுமை யனித்தம்
உறுதுணை யன்றிகு துயிருக்(கு)
ஆனமெய்த் துணைபே ரறம்பொறை யன்றி
யாதுமொன் றிலையென வறிந்து. 25

நாடொறும் பரமன் பங்கயப் பாத
நம்பியாங் கவனடி யவரைத்
தேடியாங் கழைத்து வான்முறை பூசித்
தவர்க்குள பணிவிடை திருத்திக்
கூடிய கிளைஞர் தஞ்சென வடைந்தோர்
யாரையுங் கோதறப் புரந்து
நீடிய புகழை வளர்ப்பவ ரன்றோ
நீணிலத் துத்தம ராவார். 26

எத்தக வான பெரியரு மியற்ரு
தியற்றிடற் சிறியார் மேலாம்
உத்தம நெறிக ளனைத்தினுஞ் சிறந்தாய்
உண்மைநீ மனக்கவ லடையேல்
அத்தன தருளா லொருமகம் புரியி
லரும்பெறற் புதல்வருண் டழகு
மெய்த்தவத் துயர்கா மாட்சியோர் காதை
விளம்புவன் கேட்டியென் றிசைக்கும். 27

**சங்குசாமி வரவுப் படலம் முற்றுப்பெற்றது.**
ஆகப்படலம் 17-க்குத் திருவிருத்தம் 342.

## 18-வது இராகவன் பிறப்புரைத்த படலம்

இடம்படு பரவை புடையுடுத்[1] தகன்ற
இருநிலப் பரப்பினி லெவர்க்கும்
உடம்பிடை யுயிர்போ லறந்தவ முதல
ஒழுக்கமே துணையென வுளங்கொண்(டு)
அடமபடும் பொருநர் கிளைகள்கட் டறுத்தாண்(டு)
அமர்பெருமை யிற்புடைத் தகன்று
திடம்படைத் துலவா நறுமணங் கமழ்ந்த
தெரியலேருய் திரண்மணிப் புயத்தான். 1

அந்தர வரிவி லவன்றனக் கடங்கா
வடையலர்ச் செகுத்திடப் புவிமேல்
வந்தெழி லிடப வடிவமாய்ச் சுமப்ப
வானிடைப் புகுந்துமாற் றலரைச்
சிந்திடத் துணித்துச் சதமகற் காசு
செய்துவைத் தற்றைநாண் முதற்கொண்டு
இந்திர வாக னெனப்பெயர் படைத்த
இறையவன் குலத்தில்வந் துதித்தோன். 2

வண்டுலாங் குழலாண் மணிநெடுங் கொடித்தேர்
வானிடைச் செலுத்தவாண் டேகிப்
பண்டிக லசுரர் பதின்மரைச் செகுத்துப்
பாகசா தனற்கர சளித்தோன்
கொண்டல்கள் வளருங் கொடிநகர் மாட
வயோத்தியிக் குவலய மிசையே
அண்டர்வா ணகர மாமென வுரைப்பர்
அந்நகர் தனில்வாழ்ந் திடுவோன். 3

பார்மகள் பசுவிற் பல்வளஞ் சுரப்பப்
பண்டுருத் திகல்செய்தான் பகைத்த
ஓர்தவன் சினத்தா ரழலிடை யிறந்தார்
உறுபதம் பெற்றிடத் தவத்தாற்

---

1 யுடையுடுத் எனினும் அமையும்

கார்திகழ் மிடற்றான் முடிமிசைச் சிறந்த
கங்கையைப் புவிமிசைக் கொணர்ந்து
பேர்பெறு மவனிம் மன்னிணை யிலனென்று
உரைத்திடும் பெருமையிற் சிறந்தோன். 4

பற்றலர் சமரப் பெருங்கடல் கலக்கி
உயிரெனு மமுதத்தைப் பருகிக்
கற்றவர் துதியும் வாகையும் புனைந்த
கதிர்வடி வேலொடுங் கரத்தான்
மிற்றவழ்ந் தியார்க்கும் வணங்கிடா வயிர
எயின்முடி தாங்கிடுஞ் சிரத்தான்
கொற்றவர் வணங்கு மயனெனப் புகலுங்
கோமகன் தசரதன் என்போன். 5

அனையவன் தவள மதிக்குடை நிழற்கீழ்
அறுபதி னாயிரம் பருவம்
புனைமணித் திகிரி யுருட்டியார் கலிசூழ்
புவியெலாந் தனிபுரந் திடுநாட்
டினைநிக ரெழிலு நாண்முத நான்குந்
தழைத்திடுங் கௌசலை கைகை
மனைசுமத் திரையென் றுரைக்குமிம் மூன்று
மங்கையர் தங்களை மணந்தான். 6

அன்னலா ரிளமை யெழினலங் கூட்டுண்(டு)
அறம்பல புரிந்தருந் தவஞ்செய்(து)
உன்னரும் விரதஞ் சிவநிய மங்கள்
ஒன்றல வெண்ணில புரிந்துங்
கன்னங் குதலை மழலைவாய் மைந்தற்
பேறிலான் கவலையா லுள்நொந்(து)
என்னினிச் செய்து மெனமனம் வருந்தி
இருக்குநாள் தன்னிலங் கொருநாள். 7

அருந்ததி கணவ னிணைப்பதம் வணங்கித்
தன்குறை யவனிடத் துரைப்ப
வருந்திடே லரச வெனவவற் கருளி
வானுளோர்க் கருள்வரங் கருதிப்
பெருந்தவன் கலைக்கோ டுறுமுனி வரனால்
மகஞ்செயிற் பீடுறு முலகில்
திருந்தலர்க் கடக்குங் குமரர்வந் துதிப்பர்
தீங்குறு நின்மர பென்றான். 8

தங்குரு வுரைத்த தகைமைகேட் டரசன்
தன்னுளங் குளிர்ந்துமா தவத்தோன்
அங்குறை வனஞ்சென் றழைத்திவண் கொணர்ந்தாங்
கவனருட் டுணையினா லன்று
பொங்கிருங் கடல்சூ ழுலகிடத் தியாகம்
புரிந்தன பான்மையாற் குலச்சூன்
மங்குல்போ னிறத்து மதனெனப் புகலும்
வரிசிலை யிராமன்வந் துதித்தான். 9

பரதனென் றுரைக்கும் பார்த்திபன் றனையிம்
பைங்கழைத் தவரினற் பழிக்கு
முருவினன் வரிவி லிலக்குவன் றனையு
முத்தமன் சத்துருக் கனையுங்
குருவின் மொழியாற் பயந்துல கனைத்தும்
புகழ்ந்திடக் குமரர்க ளுடனே
தருவின னிவனென் றளவிலாச் செல்வந்
தழைத்திடத் தசரதன் வாழ்ந்தான். 10

ஆயவா றிவணீ யொருமக மியற்றின்
அவனிக ளியாவையும் புகழத்
தூயமென் மணிவாய்த் தனையர்வந் துதிப்பர்
துலங்கிடு நின்மர பனைத்து

மேயநின் கவலை யகலுமென் றுரைத்த
மெய்த்தவ னழகுமெயத் தவத்தால்
தாயென வுலகுக் குறித்தகா மாட்சி
தன்னிடம் புகலுவான் பின்னும். 11

அனையவா றனைய மகஞ்செயற் கரிதியாம்
அறிவின்மா னிடத்தின் மதனால்
நினையில்வா னவர்கள் முதலுகத் தனந்த
நெடும்பரி மகம்புரி பெரும்பேர்
இனையவாங் கலியிற் சோமமா மகமொன் (று)
இயற்றினர்க் செய்த்துமா தலினான்
மனநனி மகிழ்ந்து செய்திடி னினைத்த
வண்ணநீ பெறுவையென் றுரைத்தான். 12

**வேறு**

தன்னை நேரிலாத் தம்பிரா னின்னணஞ் சாற்ற
இன்ன வாறெனா வியம்பலா வுவகையோ டெழுந்து
பொன்னந் தாமரைத் தாளினை முறைமுறை போற்றிச்
சென்னிமேற் கொண்ட செங்கையான் செப்பன்மே யினனால். 13

பொய்கைமீக் கொண்ட புந்தியே னென்னினும் புனித
வைய நின்சர ணகல்கிலா வடிமையா னின்னால்
உய்வ தாயினே னரியதொன் றிலையிம்மைக் குரிய
மையல் தீர்ந்தனன் மறுமைக்கும் பெற்றனன் மகிழ்ச்சி. 14

பந்த மாந்தளைப் பற்றற வறுப்பவன் பதியாய்
இந்த மாநில வைப்பினி லிதற்கிணங் கிடநின்
சிந்தை யாற்றெளிந் துரைக்கெனச் செப்பல்கேட் டனைய
வெந்தை யாருரை செய்தன வுணர்த்துவ னினிமேல். 15

**இராகவன் பிறப்புரைத்த படலம் முற்றுப்பெற்றது.**

ஆகப் படலம் 18-க்குத் திருவிருத்தம் 357.

# 19-வது சிவலிங்கங் கண்ட படலம்

வார ஞசியே முதலவிப் புவியிடை மறைகள்
தேரொ ணச்சிவ தலமெலாந் சிந்தைசெய் தருளிப்
பாரின் மேம்படு பாண்டிநாட் டேழிரு பதிக்கு
மோரின் மேம்படு மொன்றுள கேட்டியென் றுரைப்பான். 1

செய்யின் மேற்றிகழ் மழவரால் சேணிடைச் சிறந்த
மையின் மேற்றிக ணிறத்தவா னகட்டினை வகிர்ந்து
துய்ய நீர்த்துளி சொரிதர வளம்பல சுரக்கும்
மெய்யி னற்றிகழ் நகர்கயிற் றூரென விளங்கும். 2

அனைய தொல்வளம் பதியிருந் தாழியொன் றுருட்டி
இனைய பூதல மியாவையு மியன்முறை காத்து
வினையி னீங்கிய மனத்தினோ டிருந்தனன் மேவார்
புனையு நீண்முடித் தழும்புசூழ் பொண்மணிக் கழலான். 3

திருவி னோங்கிய சிறப்பினன் சேரலர்க் கடந்த
பொருவிற் றுங்கிய தழுாபணி யுலம்பொரும் புயத்தான்
மருவி னோங்கிய மாலையான் மாறடர் விசயப்
பெருமை னோங்கிய புகழினு னவன்றிறல் பெரிதால். 4

புகழி னோங்குமப் புரவலர் புரவலன் தனக்குத்
துகளி னீங்கிய சுரர்பதிக் கயிலையிற் றுலங்கி
அகலுமிவ் வுலகி யாவையும் வியப்புற வமைந்து
இகழ்வில் வெண்ணிறத் திளஞ்சுர பிகளெண்ணி னனந்தம். 5

வேறு

பணைத்த வாறெழிற் குடம்புரை செருத்தலந்
தொருநிறை பலபகற் பிறைக்கோட்(டு)
இணைத்த தேனிரு லுடைந்துவிண் கும்பமீ(து)
இரைத்துறப் பெருகுமவ் வெழிலார்

கணைத்த மீதொரு முல்லைய நிலத்தவன்
காத்தினி தளிப்பவிங் கவர்வாய்
அணைத்துவான் பனிப்பசும் புன்மேய்ந் தழகுற
வணிகெழு மந்நகர் வருமால். 6

அன்ன வாறவை யொழுகு நாளொரு
நாளெம் மிறையவன் றிருவுளத்தால்
அன்ன கோநகர்க் கணித்தெனக் குணபால்
அடைந்தன கோனிரை யனைத்தும்
றென்னன் மாந்திய வுணவினு நன்கென
நினைத்துநாத் தழும்புறத் தெவிட்டிப்
பன்னுபைம் புன்மேய்ந் தொழுகுமவ் வேலையோர்
பனைத்தபாற் செருத்தலின் சுரபி. 7

தன்ன தானினக் கணத்தைவிட் டகன்றோர்
தாட்செரி கீசகத் தருவான்
மன்னு கின்றன மதியமுங் கதிரும்
வைகலு மறிந்திலா வகைத்தாய்ப்
பன்னு கின்றவோ ரரணிடை தண்ணம்
பசியபுற் கண்டகு தருந்த
உன்னி யாங்கத னுட்புகுந் தவனோர்
உயர்புகழ்ச் சிவனுருக் கண்ட. 8

கண்ட காலையக் கடவுடான் ஞானக்
கடலினைக் கருணையா லளிப்பக்
கொண்டவோ மற்றெ னனவோ வறியேன்
கோமறை முதல்முடி குளிர
மண்டு பாலினை மடிநெறித் தூற்றி
வளம்பட ர்தன்னின் மருங்கு
பண்டு போலவந் தணைப்துமேய்ந் தொருங்கு
பகற்பொழு தகன்றபி னடைந்த. 9

பற்றை வைகலு மற்றைநாட் போல
வந்துவந் தணிமதி வனைந்த
கற்றை வேணியங் கடவுள்மேல் பாலைக்
கறந்துபி னகல்வன காக்கும்
அற்ற மில்குணந் தவனிகு தறியான்
அணிகிளர் செருத்தலா ரமுதம்
வற்றி நாடொறும் வருவன செயலின்
மன்னவன் பொதுவனை வெகுண்டான். 10

ஐய நீயெனை வெகுளல்மற் றகுதேல்
அடியனே னன்னவை பொறுத்தீங்(ரு)
உய்வனோ வென்மாட் டொருகுறை யிலையான்
ஒன்றையு மறிந்திலன் வனத்துச்
செய்ய தண்பனிப் புல்லினுங் குறையில்
தீம்புன னுகரலுங் குறையில்
வெய்ய மாயையீ தென்கொலோ வறியேன்
வேர்ந்தர்வேந் தேயென வுரைத்தான். 11

நன்று நன்றுநின் னிடத்தொரு குறையும்
நணுகில நாடோறும் போல
இன்றுநீ பசுவின் நிரைபுரந் தீங்கெய்(து)
எனவிடுத் துப்பின் னெதிரே
நின்ற தூதரை நெடியகா னகத்து
நேடியங் குற்றவந் நிலைமை
சென்ற றிந்துவந் துரையுமின் பொமென்(று)
அனுப்பினன் சிலரையத் திறலோன். 12

மேய கானக வரைப்பினு ளனையார்
முறைமுறை பார்க்குமவ் வேலை
காய மேவிய சினையரண் பணையுட்
கடவுடன் னுருவமுங் கமலத்
தூய மாபுனற் சுனையுமா னமுதைக்
கடவுண்மேற் சொரிதலுந் தோன்ற
நேய மூறிய மனத்தராய் வந்து
நின்றிறை யவனடி வணங்கி. 13

அண்ணல் கேட்டியிவ் வணிநக ரணித்தாய்க்
குணதிசை யரியகா னகத்து
விண்ணின் மாட்டுயர் வியன்சிலைப் பணையான்
மிடையர ணிடத்துறல் வேதப்
பண்ணவன்றிரு வுருவமும் பதுமப்
பைம்புனற் றடமுமாங் குளவோர்
தண்ணந் தேனுவக் கடவுடன் முடிமேல்
தன்மடி நெறித்தது வென்றான். 14

என்ற வவ்வுரை யிருசெவிக் கமுதம்
எனும்படி யருந்தின னிதனைச்
சென்று காண்டுமென் றெழுந்துநீ ராங்கே
சென்மெனப் பின்தொடர்ந் தேகித்
துன்று கானிடைத் துருவிமா தவற்காய்
மறலியைச் சுடர்மணிக் காலால்
வென்ற தேவமா லறிகிலாப் பொருளை
வேந்தர்வேந் தனுமெதிர் கண்டான். 15

கண்ட போதுவா னிரவியைக் குணபாற்
கண்டதா மரையினைப் போலுங்
கொண்ட தண்கதிர்க் குபேரனை யெதிர்ந்த
குலவித ழாம்பலே போலும்
அண்ட மீதுமற் றவனைமுன் கண்ட
அவிர்மதிச் சிலையினைப் போலும்
மண்டு தன்முக மலர்ந்தக முருகலால்
மறைமுதற் பொருளென வறிந்தான். 16

அந்த மன்னவன் அகமிக வுருக
வருட்கணீர் முறைமுறை பெருக
வந்து பொன்முடி மறைகளுக் கறியா
வானவன் மனத்திரு ளகன்றோர்

சிந்தை மீதுகொண் டருள்பவ னகிலத்(து)
உயிர்க்குயி ராமெனச் சிறந்த
எந்தை பாலினு மறிவுருக் கமலத்(து)
இணைப்பதம் பணிந்தன னெழுந்தான். 17

பின்னு மன்னவன் பன்முறை களிப்பாற்
பெருக்கின னருட்கணீர் பிறங்கத்
துன்னு நீளுடல் புளகஞ் சுகத்தைச்
சூடின னாடினன் தொழுதான்.
தன்னை யோர்கிலா வுவகையாற் கமலத்
தடம்படிந் தவனருச் சனைக்கு
முன்னர் வேண்டிய தொகுத்தது புரிந்து
முறைமுறை துதிப்ப மேயினனால். 18

வேறு

மங்கை பங்கனே சரணநான் மறைமுதல் சரணம்
கங்கை சூடிய கண்ணுதற் பரம்பொருள் சரணம்
எங்கு மாகிய வினையிலா யிறையவ சரணம்
கொங்க லர்ந்தபூங் கொன்றையந் தாரவ சரணம். 19

மாலி னானுண ராவடி வானவ சரணஞ்
சூலி சங்கரி சுந்தரி நாயக சரணம்
பால வான்மதி மிலைந்தருள் பண்ணவ சரணம்
வேலி னூற்றரு மெய்ப்பொருள் சரணநின் சரணம். 20

ஒன்றி னேடிரண் டாசையை யொழித்துநின் பதமேற்
சென்ற வன்பினர்க் கல்லதிச் செகத்தருந் துயருள்
நின்று இம்மையிற் பெருமையு மம்மையி னெறியும்
நன்று காண்கிலற் கெளியவோ நாதநின் கருணை. 21

ஆன நான்மறை யுணர்த்திடற் கெளிமையு மல்லை
வான மாதியாய் நிறைந்தநீ வல்வினைப் பிறப்பாம்
ஈன மேறிலா வெனைப்புரந் தருளவோ விந்தக்
கான மீதுநீ முளைத்தனை கடவுளெம் பரம. 22

மன்ன னிவ்வணம் வழுத்தியம் மறைமுத லருளா
மன்ன நீடமை பிணித்தலால் வதிந்தன னருக்கன்
இன்ன மாங்கவன் பெருமையை யிறைமகன் தெரிய
உன்னி யேகொலோ வொல்லேயிற் குடகட
லொளித்தான். 23

குந்த மேழின னவ்வணங் குடகடற் குளிப்ப
இந்த மன்னவ ஞங்கொரு புறம்வதிந் திருப்பக்
கந்த மோங்குபைந் தருநிழற் கடவுள்வா னவர்கள்
வந்த வாறுகா மாட்சிநீ கேளென வகுப்பான். 24

கொங்க லர்ந்தபைங் குளிர்தரு வருள்மணிக் கோவை
பங்க மின்மணித் தூசுமுப் பழங்கள்பா லமுதஞ்
செங்கை யேந்திய திருமலர்த் தொகுதியஞ் சேதா
அங்க ணீன்றவைந் தாதிய பிறவுங்கொண்
டணைந்தார். 25

வந்தவ் வம்புய மலர்த்தடங் குடைந்தவ்வா னவனைச்
சிந்தை யாதரம் பெருகவான் றீய்புன லாட்டித்
தந்த யாவுமத் தனிமுதற் கருத்தியா தரவாய்க்
கொந்து லாவுபன் மலர்களா லருச்சனை குயிற்றி. 26

அங்கம் நெக்குநெக் குருகியவ் வருட்பெருங் கடலைச்
செங்கை கூப்பியத் திருப்புகழ் பலபல சிறப்பால்
தங்க ணுவுறப் பழிச்சிழ்தந் தனிநகர் புகுதத்
துங்க வேலிஞ னனைத்தையு முணர்ந்தனன் துலங்க. 27

நலந்தவா வகைதானு மருச்சனை செய்வா னயந்து
குலந்த வாத்திரைக் குணகடல் குளித்தெழுந் தனன்போல்
கலந்த வல்லிருட் கடலினை யாயிரங் கரத்தால்
உலந்த தாமென வுண்டுசெங் கதிரவ னுதித்தான். 28

கங்கு னீங்கவக் கடவுளைக் காவலன் கமலப்
பொங்கு தண்டடம் படிந்துவந் தருச்சனை புரிந்து
அங்க ணுயக வெளியவெற் கெளியவோ வமல
பங்க யப்பத மலரெனப் பன்முறை தொழுதான். 29

*சிவலிங்கங் கண்ட படலம் முற்றுப்பெற்றது.*

ஆகப் படலம் 19-க்குத் திருவிருத்தம் 386.

---

# 20-வது திருநகரங் கண்ட படலம்

தொழுத மன்னவ னுழையரைத் தொன்னகர்க் குருகி
முழுது மிவ்வனந் தொட்டகழ்ந் தெடுப்பன முறைசால்
பழுதி லாதன தொழிலினர்க் கூயிமைப் பனமுன்
எழுமி னீங்கெனச் செலுத்தியாண் டிருந்தன
னிறைவன். 1

அனைய ரம்மொழி தலைக்கொடந் நகரிடை யணுகி
வினையம் வல்லவத் தொழிலினர்க் கூயவண் மேவப்
புனைத ருங்கழற் புரவலர் புரவலன் பொருவில்
இனைய கானக மெறிகென வுரைத்தன னென்ப. 2

வானி னோங்கிய மதியிரு பிளவின் வனப்பிற்(கு)
ஊனின் வாய்த்ததோ ரெறிகுய மேனைய கொணர்ந்து
தேன வாம்பகு வாயினர் சேண்முகி னிறத்தார்
கான வான்பொரு கானகங் களைகுவான் றுணிந்தார். 3

ஆர்க்கு மோதையு மன்னவ ரடுகுய மரத்தில்
சேர்க்கு மோதையுந் திண்டருச் சிதைந்திரு நிலத்திற்
போர்க்கு மோதையும் போர்த்தலை துணித்தகன் புறத்தே
ஈர்க்கு மோதையு மெங்கணுஞ் செறிந்தன வன்றே. 4

தாது கொண்டபூந் தண்மலர்த் தேனிருற் றடங்கோ(டு)
ஈது கொண்டவன் பனைமரக் குலம்நிலத் திறுவ
வாது கொண்டமாற் றார்முனைக் களத்துவான் முகிலை
மோது கின்றமை மும்மதக் களிறிறு மனைய. 5

கள்ளுண் காமர்வண் டினமுடன் கானகங் கலந்த
புள்ளும் பலவிலங் கினங்களு மயற்புலம் புகுவ
வள்ளனீர் மையிற் புரப்பவன் வருந்தவவ் வருத்த
முள்ளி னீங்குமவ் வுணர்விலார்க் குவமைய வொக்கும். 6

மைநி றைந்தகான் வரைப்பெலா மிவ்வணங் களைந்து
மெய்நி றைந்தவர் மனத்தினின் வெளிசெய்து விமலன்
செய்ய தாணிழற் செறிந்தவர் பிறப்பெனச் செறிந்த
வெய்ய வேர்களுங் களைந்தன ரேவலின் வினைஞர். 7

இன்ன வாறுகா னெறிந்தபி னிறைவன்மந் திரரோ(டு)
உன்னு வானிதி னெழினக ரொனறுகாண் டிடுதற்(கு)
அன்ன வானவ னருளெனே வறிகில மென்று
முன்னு போதினவ் விறைவனந் தரத்திடை
மொழிவான். 8

இன்ன மாநக ரின்னண மமைத்துமற் றெமக்குத்
துன்ன மாலய மின்னணந் தொகுக்கெனச் சொல்ல
அன்ன வாறெலா மரசன்கேட் டகமுக மலர்ந்து
புன்மை தீர்குணத் தபதியர்க் கொணர்கெனப்
போந்தார். 9

ஆய்ந்த சிற்பநூ லறிஞரா லண்டர்வா னகத்தும்
வாய்ந்த வித்திற மில்லென வளநக ரமைத்துத்
தோய்ந்த வன்பினர்க் கெளிவருந் தொன்மறை முதற்கும்
ஏய்ந்த வாலய மெழில்பெற வியற்றின ரினிதின். 10

மற்று மண்டப மரைமலர்த் தண்புனல் வாவி
சற்றும் வார்புனற் கூவனந் தனவனஞ் சுரர்வான்
உற்ற தண்டலை நீண்மல ரோடைமற் றுளதும்
முற்று மாக்கினர் முழுதுணர் தபதியர் முறைபால். 11

அண்டர் வானினு மினையிலா வந்நக ரிடத்துப்
பண்டை நான்மறை யவர்முத ஞன்கெனப் பகரக்
கொண்ட பலப்பல வருணமுங் குடிபுகு[1] தரற்குத்
தொண்டர் தம்மையாங் குய்த்தன னருச்சனைத்
தொழிற்கே. 12

---

1 குடிபுகுத் என்றுளது

வனப்பின் மேம்படு வளநகர் கண்டவென்[1] மன்னன்
நினைப்பி னுலுமற் றுணர்வுறு நிமலனை வணங்கி
உனைப்பி னுன்முத லியாவரு மேத்தெடுத் துவப்பத்
தனைப்பின் வேறிலாக் கடவுணீ தருவர முளவால். 13

எந்தை நிற்குதின் னிடத்திறை யவட்குநல் லெழிலார்
கந்த நாண்மலர்ச் சுனைக்குமிக் கன்னிமா நகர்க்கு
முந்து நாமமெற் குணர்வுறு விருந்தவெவ் வுயிர்க்குந்
தந்தை சாற்றெனச் சாற்றுவா னிறைவனந் தரத்தே. 14

ஆதி யாயெனக் கியைந்த பெயர்கயி லாய
நாத ரீங்கிவட் கானந்த வல்லியா நாமம்
போது வாய்கோ சிறுங்கமிவ் வாவி மெய்ப் புகழ்சேர்
ஈது நாடொறுந் திகழ்பசு வந்தனை யெனவே. 15

வானிற் கூறினன் மறைமுதன் மன்னவன் முதலோர்
தேனிற் பாகெனச் செவியினுன் மாந்தினர் களித்து
வேனிற் காவலற் சினந்தநல் விழியினுல் வென்ற
கோனைப் பன்முறை துதித்தன ரிருந்தனர் குலவி. 16

பத்தி நீண்வலைக் குட்படு மன்னவன் பலநாட்
சித்த மாதரம் பெருகிட வருச்சனை செய்து
மத்த மாமலர் வனைந்தவ னருளினுல் வளமை
உய்த்த தந்நகர் புகுந்தவ னுரைந்தன னுறவோன். 17

வேறு

அன்றுமுதற் கயிலாச நாதரென
அவனிடத்தி லமர்ந்தா ளன்பர்
துன்றுவினைத் தொடரறுக்கு மானந்த
வல்லியெனத் துலங்கி மாறு து)
என்றுமணித் திரள்கொழிக்குந் திரைப்பாவை
சூழுலகந் தெறும்பை யாதி
நன்றியிலெவ் வுயிருமிகத் தழைக்கவருண்
மழைபொழிய நயந்தான் மன்னே. 18

[1] கண்டவேன் என்றுளது.

அங்கமெலா மொருதவத்தோன் கொடுஞ்சினத்தால்
விழிபடைத்த வரசன் மற்றோர்
பொங்கியிவண் புகுந்தரனைப் பூசிக்கும்
போழ்தொருநாட் புனிதற் போற்றி
இங்குளருட் பதம்போற்று மடியர்பவந்
துடைப்பவனீ யெனினும் யார்க்குந்
தங்குபவந் துடைப்பானோர் தீர்த்தமிவண்
அருளுகெனச் சாற்றி னரால். 19

ஆங்கவை கேட்டனன் கரத்திலடற்
சூலமெடுத் தமலனணித் தவாகப்
பாங்கியமன் றிசையினிலம் பகச்செலுத்தி
வாங்கினனப் பகுவாய் மீதே
ஓங்குபுனற் கங்கைமங்கை யுயிர்தோறும்
நிறைந்தசிவ னுருவை யின்னே
தங்குபவந் துடைத்தருளத் தரிசிப்பான்
வந்தவெனச் சார்ந்த வன்றே. 20

இன்னதடம் வானவர்கள் சிவதீர்த்தம்
எனப்பகர்வ ரிதற்கு நாப்பண்
முன்னரரன் முடிமீது மடிநெறித்துப்
பால்சொரிந்த மூரி யான்மற்(று)
அன்னமருங் கணிமருப்பா லகணிலங்கீண்
டிடுபுழையி னழகாய்த் தோன்றி
மன்னுபெருங் குமிழியினற் கோசிருங்க
வாவியென வகுத்த நாமம். 21

பெருமைமிகுங் கோசிருங்கத் தடமெனவா
யாலொருக்காற் பேசி னார்க்குத்
திருநிறையுஞ் செல்வமுண்டாம் நோக்கினற்
பாவமெல்லாந் திடுக்கிட்டேகும்
ஒருபகலத் தடம்படிந்தா லுலகமெலாம்
நேடியங்கங் குலவுஞ் சீத
மருமலியு நறுமழையே முதலனந்தம்
படிந்தபலன் வழங்கு மாதோ. 22

சொற்றபுகழ்ச் சிவதீர்த்தந் தோய்ந்தொருக்கால்
அந்தணர்க்குத் தோயத் தோடே
அற்றமிலா நிதிதிலமவ் வளவேனு
மன்பினு லருளி யாக்கட்
டெற்றுபுனற் சானுவியைச் சுமந்தானைப்
பணிந்தோர்கள் சிறந்த பேரிங்
குற்றறிய வொண்ணுதே லுரைப்பதெவன்
அத்தடத்தி னுயர்ச்சி மாதோ. 23

**திருநகரங்கண்ட படலம் முற்றுப் பெற்றது.**

ஆகப் படலம் 20-க்குத் திருவிருத்தம் 409.

## 21-வது மகத்தியல்புரைத்த படலம்

அன்னதல முளதுமக மியற்றிடினீ
　　நினைத்தவெலா மெளிதி லாகு
மென்னவவ னுரைப்பனகேட் டெழுந்திருந்து
　　பேருவகை யியல்பி னாலே
மன்னுமவன் கழல்பணிந்து மகம்புரியுந்
　　தன்மையைநீ வகுத்தி யென்ன
முன்னர்விருந் தெனஞான முழுதருந்து
　　மாதவத்தோன் மொழிவ தானன். 1

அன்பநீ கேட்டி சிவார்ச்சனைக்குரிய
　　வாதி சைவத்தி னந்தணராய்
முன்புநால் வேத முற்றிலு முணர்ந்த
　　மூதறி வுடைய தேசிகரா
இன்பமெய்ஞ் ஞானத் தருஞ்சுவை யமுதம்
　　இருஞ்செவி வாயினா லுண்டு
நன்புலந் தெளிந்த தகையராய்ப் பொறுமை
　　நன்னலந் தழைத்தசிந் தையராய். 2

தன்மைசால் வனப்பி லொருசிறி தேனு
　　நாடிடிற் குறைவிலா தவராய்ப்
பன்னிய கற்பி னருந்ததிக் கிணைய
　　பைந்தொடி யுடன்மனை யறத்தின்
மன்னிய வாழ்க்கை யுடையராய்த் தாழா
　　மரபினிற் பிறந்தமாண் பினராய்ப்
பொன்னெனத் தகைய குணத்தராய்க் குன்றாப்
　　புனிதவே தியர்களாய்ச் சிறந்தோர். 3

முக்கணா னிருக்குஞ் சினகரத் தெதிராய்
　　மொழிந்திடு நல்லன முகுர்த்தத்
தக்கணத் தரும்பொன் னலத்தினா லுழுது
　　அவ்விடை யவ்விதிக் கமைந்த

மிக்கன மகஞ்செய் சாலையிவ் வுலகும்
விண்ணவ ருலகமும் வியப்பத்
திக்கெலாங் கதிர்செய் மணியினுங் கனகத்
திறத்தினு மழகுறத் திருத்தி. 4

நற்றின மதனின் விதிமுறை யமைந்த
நன்மகச் சாலையி னடுவண்
தெற்றிகள் மணிவே திகையதாங் கியற்றி
எழில்பெறு மிந்திர திசையின்
உற்றநாற் சதுரத் தாகவ னீயம்
ஒன்றுகண் டுயர்ந்ததென றிசைக்கட்
குற்றமில் தக்க ணாக்கினி குண்டங்
கோணமோர் மூன்றினிற் குறித்து. 5

மேற்றிசைக் காருக பத்திய மியற்றி
விதிப்படி வட்டமாய் நடுவண்
சாற்றிய மணிவே திகைமிசை யதவின்
தனிநெடும் பலகையுய்த் ததன்மேல்
போற்றிய தருப்பை யாசனம் விரித்துப்
பொருவில்கற் புடையபொற் கொடியும்
ஏற்றமாந் தானு மிணையி லாவெழில்
இந்திரதிசை நோக்கியாண் டிருந்து. 6

இணையில்கற் புடையா ளிடையினுந் தன்னா
இடையினுந் தருப்பையங் கயிற்றால்
பிணைதரத் துவக்கித் தெய்வதம் பரவிப்
பீடுறுங் கீழ்த்திசை மருங்கில்
துணிதரு குண்ட மிசைப்பசுஞ் சாலித்
தோடுபெய் ததன்மிசைப் பலாசந்
தணிவிலச் சுவத்தந் தருப்பைநா யுருவி
தாழ்வில்வெள் ளெருக்குடன் வன்னி. 7

அத்தியோ டருகு முதிர்கருங் காலி
அனல்வளர்த் ததனிடைப் புகுத்திப்
பத்தியா யிருக்கு வேதமந் திரத்தாற்
பன்முறை செபித்ததிற் - பசுநெய்
சுத்தியாம் பசும்பொற் றுடுவையாற் சொரிந்து
சுடரவ னடுவுறுங் காறும்
இத்திறம் புரிந்தாண் டேனைய திசைக்கண்
இயற்றுகுண் டமதிரண் டினுக்கும். 8

நான்மறை தெளிந்தும் ஞானநூ லறிந்து
நற்றவ நியதியாங் கறிந்தும்
ஊனமொன் றில்லா வுருப்பின ராயொவ்
வொன்றினுக் கெண்மராண் டிருந்து
வானவர் புகழ முன்னைய விதியின்
மகவினை புரிந்திட வகுத்தல்
ஆனவா றொருநாள் கிரண்டுமூன் றொருநாள்
அம்மகம் புரிந்திட வேண்டும். 9

இத்திறம் புரிவோன் வேள்வியங் கர்த்தர்
என்பரீ ரெண்மரும் ருதுக்கள்
வைத்திடு மிவர்க்கு வைகலு முணவு
வகுப்பராங் கொவ்வொரு காலை
பத்திசேர் கர்த்த னவர்க்குயி ரனைய
பத்தினி யவரிரு வருக்கும்
உத்தமங் குணபா லாகவ னீயத்
துற்றிடுந் திசையொரு நான்கும். 10

வயிர்த்திடுங் கரிய பொன்னினுன் முழத்தின்
வாய்ந்தன மிக்கெழிற் சலாகை
நயத்துட னொருநாள் கணிபெற நாட்டி
நான்கினு நான்குவல் லிரும்பால்

உயர்த்திய கிண்ண மொருங்குற வமைத்தாங்(கு)
உற்றவா னெய்யையுள் ளூறுத்திப்
பயத்தன பசுநென் மாவையிட் டமுதாய்ப்
பருவமாய்க் கிண்டியிட் டெடுத்து. 11

கடவுண்மந் திரத்தா லவ்வனற் கடவுள்
களிப்பவெக் கியஞ்செய்து கண்ட
வடுவிலாச் சேட மிருவரு மொருகால்
வைகலு மயின்றுமற் றவர்க்குந்
திடமுறப் பகிர்தல் விதிமுறை யிவற்றைத்
துய்க்குமுன் சிறந்தவே தியர்க்காங்(கு)
அடிமுறை வணங்கி யாமு தருத்தி
இருர்பொனல் கலன்கடு சளித்து. 12

மற்றையோர்க் காறு சுவைத்தவா னடிசில்
வைகலும் வரைந்திடா தருத்தி
முற்றிய வாசக் கலவைதாம் பூலம்
முதலிய முகமன்க ளளித்துப்
பிற்றையவ் வாறு நுகர்ந்திட லாமிப்
பெற்றியால் வைகலீ ரைந்துங்
குற்றமின் மகஞ்செய் தந்தநாட் காலை
குறித்திடும் வேதிகைக் குணபால். 13

ஆதியாங் குண்டத் தடுத்திடுங் குடபால்
ஆயிடைத் தம்பநட் டதன்பால்
ஓதிய பசுவைத் தண்புன லாட்டி
யுயர்மண மாலையா பரணத்து
ஏதமில் வகைத்தாய் வனப்புறுத் தியர்த்து[1]
எழில்பெறும் வபையினை யெடுத்துப்
பேதமி லொருநான் கைந்தெனுங் கவர்கள்
பெற்றிடுஞ் சலாகையிற் பிணைத்து. 14

1 = ?

ஆகவ னியத் தழற்பெருங் கடவுட்(கு)
அருத்தியாங் கவற்றைநூன் முறையே
ஏகநா யகர்க்கு மாலயன் றனக்குமிந்
திரன்முதல வெண்மர் கட்கும்
பாகமாங் கியற்றிப் படைத்தவ ரிதய
பங்கய மலர்ந்திடப் பணிந்து
மாகமும் விரும்பும் புண்ணிய தீர்த்தம்
வரன்முறை திளைத்துள மகிழ்ந்து. 15

அந்தணர் தமக்கு மருந்தவர் தமக்கும்
அணிகலன் மணித்துகி னிதியம்
விந்தையான் செந்நெல் விளைதரு நிலங்கள்
வேண்டிய வேண்டியாங் களித்து
முந்திய வேள்வி முடித்திடன் முறைமை
முடித்திடற் கருகரல் லாராய்
வந்தவர் பொருணேர்ந் தவ்வினைக் குரிய
மறைவலார் தமைக்கொடு வகுத்தல். 16

இம்முறை வேள்வி யியற்றிடு முறைமை
இம்பரி னிதன்செய றெளிந்த
செம்மைசே ருள்ளத் திறலினுர்த் தேடிச்
செயிறுள துளக்கவ றீருங்
கைமுறை நெல்லிக் கனியினிற் காண்டி
என்றலுங் கேட்டுளங் கனிந்து
விம்முத முறுங்கா மாட்சியென் றுரைக்கும்
வேந்தனைப் பார்த்தினம் விளம்பும். 17

வேறு

கங்கை சூடி கந்தனிற் கவின்பெ றத்து லங்கிய
திங்க ளுமை மொன்றமைந் திலங்கு கின்ற சீர்மையால்
அங்கண் மாநிலத் தனந்தம் யாக மாகு மன்னறிடற்
பொங்கு சோம யாகமே புகழ்ச்சி மிக்க தாகுமே. 18

மங்கை பாக னங்கையிற் சிறந்த வேத மந்திரம்
பொங்கும் வாரிதிச் சிதைந்து போகி லாதெ டுத்தருள்
துங்க மீன நாமமே துலங்க வந்த தாதலால்
திங்க ளாறி ரண்டினிற் சிறந்த மீன மென்பவே. 19

அன்ன யாக மனையதிங்க ளிவாசை யந்த ணாளனும்
பொன்னை யொத்த சேஷயன்ற னல்மு டித்தி புகழுடன்
பன்ன லாக லாதசெல்வ நல்கி நன்கு பாலரை
உன்ன லாவ டங்கநல்கு முண்மை யுண்மையுண்
மையே. 20

என்ன மாத வத்தனங்கு ணர்த்த வின்ப மெய்திநான்
முன்ன நின்க ழற்பழிச்சு தொண்ட னை முறைமையால்
அன்ன யாக நடவுகாலை யாங்க ணெய்து வாயெனப்
பொன்னின் வார்க ழற்பதம்ப ணிந்த னன்பொ
ருந்தவே 21

அன்பு கந்த சிந்தையா னிசைத்த வன்ன வண்ணமே
என்பு கந்த ணிந்தமுக்க ணீச னன்ப னன்றெனப்
பொனப கர்ந்த மெய்தைவந் திருத்தி யென்று போயினன்
பின்ப வன்பு ரிந்தசெய்கை யாவு நன்கு பேசுவாம். 22

மகத்தியல் புரைத்த படலம் முற்றுப்பெற்றது.

ஆகப் படலம் 21-க்குத் திருவிருத்தம் 431.

# 22-வது மந்திராலோசனைப் படலம்

ஓதநீ ருவரிசூ ழுலகம் போர்த்திய
ஏதமில் புகழினு னிருக்கு மேல்வையிற்
போதபோ னகனருள் புரிந்த வண்ணமே
கோதிலா தடுத்தன[1] குலவு மீன்மதி. 1

அன்னதோர் பொழுதுல கனைத்தும் போற்றிய
மன்னவர் புகழ்ந்தகா மாச்சி மாமகம்
உன்னுவா ளொருபக லுயிரை யன்னதோர்
தன்னுறு துணைவரைத் தருகென் றேதினன். 2

ஓதலுந் தூதர்போ யுணர்த்து முன்னரே
மாதவத் துயர்ந்த காமாட்சி மைந்தருந்
தீதிலாப் புகழினு னிளவல் செய்தவத்(து)
ஓதிய மைந்தரு முவந்தங் கெய்தினர். 3

மற்றைய கிளைஞரு மதிவ லோர்களும்
அற்றமி லுயிரையே யனைய நண்பருங்
குற்றமில் மலரினைக் குலவி வண்டினம்
சுற்றிய தன்மையுற் றுவன்றிச் சூழ்ந்தனர். 4

அன்னவர் தமையெழி லழக கான்முளை
பன்னரு முகமன்கள் பயிற்றிப் பாங்கரில்
துன்னுதி ரெனவவர் மதியைச் சூழ்ந்துவான்
மன்னிய தாரகா கணத்தின் வைகினர். 5

மன்னவர் புகழ்தரு மனவ னுங்கெதிர்
துன்னிய தன்னுயிர்த் துணைவர் தங்களைப்
பொன்னெனத் தகையமெய்ப் புனித வாணரை
நன்னய முறைமையா னவிற்றன் மேயினன். 6

1 — ?

நங்குல முதல்வர்தஞ் செயலு நாமதில்
தங்கிய தகைமையுந் தரிய லார்புரம்
பொங்குற நகைத்தவற் கடிமை பூண்டுளான்
இங்குவந் திசைத்ததும் வரவுங் கண்டிரால். 7

மற்றினிச் செய்வதென் மதியி னுலுறத்
தெற்றெனத் தெளிந்துரை செய்மி னென்றலும்
பொற்றடம் புயத்தினுன் பொருவில் பல்கலை
கற்றவர் புகழ்சிவ காமு செப்புவான் 8

மங்குல்கண் டழுகுற மலரு நீலமும்
பொங்கிய மணங்கமழ் குமுதம் பூப்பினும்
பங்கய மலர்கடன் பாற்ப டாதெனிற்
சங்கெறி புனற்றடம் பொலிவு சாலுமோ. 9

வயிர்த்திடு பழுமரம் வலிய வான்சினை
உயிர்த்து[1] திசைகுலா யும்ப ரோங்கினும்
பயிற்றிய வோது பாலி யாவிடிற்
பெயர்த்தது குன்றிடாப் பெருமைத் தாகுமோ. 10

ஓதநீ ருலகினி லொழுக்கஞ் சான்றென
வேதநூன் முறைமையின் புரக்கும் வேந்தனுக் (கு)
ஏதமுற் றிடக்குடை நிழற்க ணெய்திய
தீதிலாக் குடியது சிறப்புண் டாகுமோ. 11

திங்களோர் பத்துறச் சுமந்த செய்யதாய்
பொங்கிய கொடுந்துயர் புக்க போழ்தினில்
தங்கிய அவள்பெறுந் தனையர் தந்துயர்
அங்கவ டுயரினு மதிக மாகுமோ. 12

இக்குல மெனும்பொன் மனைக்க ணேற்றிய
நெய்க்குலக் கொழுஞ்சுடர் விளக்க நீயருள்

1 = ?

மிக்குயிர்த் தந்தையுந் துணையும் வேந்துநீ
தக்கதோ கவலுறச் சகித்து[1] மோமனம். 13

இப்பெருந் துயர்க்கட லிடைவிட் டேறிநீ
செப்பரு மகிழ்ச்சியுட் டிளைக்குஞ் செல்வத்தை
மைப்புய லனையகை மனவ நோக்குறில்
தப்பினற் றவத்தினே மென்னச் சாற்றினன். 14

மற்றவ ரனையரு மனைய மன்னவன்
சொற்றவா றன்றறிவே ருன்றுஞ் சொற்றிலர்
உற்றவர் புகன்றகேட் டுளையர் தம்மைநீர்
குற்றமில் சோதிடர்க் கொணர்கென் றோதினன். 15

ஓதிய கேட்டவ ருரைக்கு முன்னரே
சோதிட நூல்வலோ ரொருங்கு துன்னியே
நீதியான் வினவிட நிகழ்த்தி னனரோ
ஆதிமா மகஞ்செயற் கமைந்த நற்றினம். 16

அவ்வகை தினங்குறித் தமைந்த வன்னவன்
எவ்வமில் மகத்தினுக் கெழுக வீரிரு
பௌவமார் புவியிடை பவன மாக்களுக்(கு)
இவ்வகை பாசுரத் தியம்பன் மேயினன். 17

**வேறு**

வாரிசூ ழுலகம் வாழு மறைவலா ருபய பாதச்
சீரியன் மலர்க்கு நாயேன் செப்பும்விண் ணப்ப மொன்று
தாரிய லிசையுங் **கோவந் தனை**[2]யில்யான் புரியும்
வேள்விக்(கு)
ஏரிசை நீவிர் யாரு மெழுந்திட வேண்டு மென்றே. 18

மற்றைமன் னவர்க ளையர் வளர்நதி குலத்துத் தொல்லோர்
உற்றதங் கிளைஞர் நட்டோ ருறுபகைப் புலன்க ளைந்துஞ்
செற்றவர் சிவானு பூதி தெரிந்தவ ரெவர்க்கு நேயம்
பற்றிய வணக்கங் காட்டிப் பாசுரத் தறியச்செய்தான். 19

---

1 சகிக்கு எனின் அமையும் 2 பசுவந்தனை ?

## வேறு

வஞ்சமி லுழையரை நோக்கி மன்னவன்
செஞ்சவே நிதிக்குவை செழிப்ப நல்கியே
விஞ்சிய மகத்தினுக் கியைய வேண்டுவ
எஞ்சிடா தீட்டியாங் கெய்து மென்றனன். 20

கன்னனை நிகர்சிவ காமு வெனுமம்
மன்னனை நோக்கியே வரம்பி லாநிதி
தன்னுடன் பசுந்தையந் தலத்தி னெய்தியே
அந்நிலை மகத்தினுக் கமைந்செய் கென்றான். 21

பன்முறை துதித்தவன் றனைப் பண்பினால்
நன்முறை பெற்றவ ணடைந்து நான்மறை
சொன்முறை கற்றவர் தொகுத்த வெல்லையின்
மும்முறை மகத்தினுக் கியைந்த முற்றுவான். 22

வாரணத் துரிவையான் வதியுங் கோயின்முன்
ஆரணத் துறையினா லமைந்த சாலையும்
ஏரணத் துறையினா ரிருப்பு மேழெனுங்
காரணப் போனகக் கனகச் சாலையும், 23

ஓமநல் வினைச்செயற் குதவும் பல்பொருட்
சேமசா லையுமண் சேர்ந்த மூவகைத்
தாமவா ருரைக்கன் சாலை தண்ணெனுங்
காமர்நீர்ப் பந்தருங் கடிதி யற்றினான். 24

சென்னிதிக் குவையுறச் சிறந்த சாலையும்
பொன்னிலத் தவர்மகம் புரிந்த ஞான்றினும்
இந்நிலத் திவன்மகத் தெழினன் காமெனப்
பன்னுமா றியற்றினன் பலவும் பண்பினால். 25

ஆயவ னிவனுற வழகு காண்முளை
தூயநற் றுணைவரை நோக்கித் தொல்லுயிர்த்
தாயனா னருணிதி தலைக்கொண் டெய்துவன்
நேயமா யிவனென நிகழ்த்திப் போயினான். 26

**மந்திராலோசனைப் படலம் முற்றுப்பெற்றது.**

ஆகப் படலம் 22-க்குத் திருவிருத்தம் 457.

# 23-வது இராசானுக்கிரகப் படலம்

இம்பரிற் பொலிவுறு மிளசை மாநகர்
அம்பரத் தவர்புக ழுழகு கான்முளை
நம்பியுற் றுரைத்திரென் வரவை கண்ணினீர்
வம்பவிழ் தாரினுற் கெனவ ழுத்தினுன். 1

வாயிலோ ருரைத்திட மன்ன னம்மிடை
மேயவன் றனைவர விடுத்திர் சென்றெனப்
போயினர் விடுத்தனர் பேந்து வேந்தனை
ஏயவா றன்பினு லிறைஞ்சி னனரோ ! 2

மன்னவன் பதமலர் வணங்கி முன்ன நீ
சொன்னவா றம்மகந் தொடங்கு வேனெனக்
குன்னருட் பெருநிதி யுதவிக் காத்தியென்
றன்னவ னுரைத்திட வகம கிழ்ந்தனன். 3

வேந்தர்கோ னளிர்புனல் விதியி னடியே
ஆய்ந்தவன் செபதவ மருளின் முற்றியே
வாய்ந்தநல் லோரையின் வளமை நீடுதெங்
கீந்தவொண் கனிதனை யெடுக்குங் காலையில். 4

வேறு

பாலெனத் திகழும் பாஞ்சசன் னியமும்
பரிதியா யிரமொரு பகல்விண்
மேலினி னெழுங்தாங் கிமைத்திடுந் திகிரி
வெற்றிசால் சார்ங்கநாந் தகந்தண்(டு)
ஏலுறக் கதித்த பன்னக வயிரி
யெருத்தமீ திடங்கர்வாய்ப் பட்டு
மாலுறக் கரட மதகயத் தெதிரே
வந்தவன் வந்தரு ளினனுல். 5

ஆண்டெழுந் தருளுங் காட்சிகண் டழகின்
அருந்தவத் துதித்தபா லகனும்
மூண்டெழுந் தடங்கா வுவகைய ஞகி
முறைமுறை வணங்கியாங் கெழுந்து
பூண்டபே ரன்பாற் பன்முறை துதித்துப்
பூமக டலைவவிப் பொழுது
காண்டிட முனநா னெத்தவம் புரிந்தேன்
கைமிசைப் பலித்ததென் கருத்து. 6

எனப்பல துதிசெய் தேத்திடு மமய
மேந்தல்கா மாட்சியிவ் வுலக
முனைப்புகழ்ந் திடுமா ரொருகுறை யில்லா
உயர்மகம் விதிமுறை யுஞற்றி
மனக்கினி தான புதல்வரை யுயிர்த்து
வரம்பிலா நிதியும்வாழ் நாளும்
நினைத்தன பெறுதி யென்றனன் கொடுத்தான்
தெங்கினெண் கனியது நிருபன். 7

கோமக னினைய கொடுத்தன னின்னங்
கொள்கநீ வேண்டிய வெனலுங்
காமனை யனையாய் நின்னருட் குன்ருக்
களஞ்சிய மென்றன்மாட் டிருக்க
மாமக மிகுதொன் றன்றியு மனந்தம்
வான்முறை புரிந்துமுற் றுவனுன்
நாமமே துணையென் றடிபணிந் தெழுந்து
நண்ணினன் றன்னணி நகரம். 8

**இராசானுக்கிரகப் படலம் முற்றுப் பெற்றது.**

ஆகப் படலம் 23-க்குத் திருவிருத்தம் 465.

# 24-வது மகநக ரடைந்த படலம்

அனையநாட் கழித்த மற்றைநாட் காலை
யழகுநற் றவத்தினி லுதித்த
தனையன்மெய் தழுது நிழலெனப் பரவு
தம்பியர் தங்களை மனத்தால்[1]
நினைவினிற் பெரிய கிளைஞரைக் கபிலை
நெடும்பகன் மறைகளாங் கிசைத்த
வினையினிற் பூசித் திருக்குமா நகர்க்கு
மேவுதி ரனைவரு மென்றுரா. 1

வேறு

அவ்வுரை கேட்குமு னகம கிழ்ந்துமே
கௌவையில் மனச்சிவ காமு வென்றுளான்
பௌவமீ தெனக்கிளை பரவிச் சுற்றிட
இவ்வுல கேத்திட வினிதெ ழுந்தான். 2

சோமனோ கனற்கணோன் சினத்திற் றுஞ்சிடாக்
காமனோ யிவனெனக் கருதுஞ் செவ்வியான்
மாமனம் புயன்சுப் பிரமணியர வேளெனுங்
கோமகன் பரிமிசைக் குலவி னைரோ. 3

மற்றவன் பின்பெரு மாளென் றோதிய
கொற்றவ னருள்சிவ காமு கோதிலா
வெற்றிவே லவன்பெரு மாளிவ் வேந்தர்கள்
உற்றனர் பிரிவிலா தொருங்கு கூடியே. 4

மாசிலா வுயிர்த்துணை மதிவ லோர்களும்
பேசரு மரபினிற் பெரிய ரியாவரும்
நேசம தாயவர் நெடிய வேள்விசெய்
ஈசன்மா நகர்குறித் தெழுதன் மேயினன். 5

---

1 மனத்தாம் என்றுளது.

சாந்தணி முலையினு ருதகந் தாங்கிய
சேந்தொளிர் பொற்குட மெதிரச் சென்றனன்
வேந்தர்கள் புகழ்ந்தகா மாட்சி வேள்விசெய்
பூந்தரா தலமிசைப் பொலியும் பொன்னகர். 6

கன்னலுங் கமுகமுங் கதலிக் கானமுஞ்
செந்நெலும் விரிதலைத் தெங்கு மாரமும்
பொன்னிதழ்க் கமலநீள் புனித வாவியு
மன்னிவாழ் வனவிரு மருங்கி னெங்குமே. 7

பூவெலாம் வண்டொலி பொருவி றண்டளிர்க்
காவெலாம் புள்ளொலி கறங்குங் கண்டன
கோவெலாங் கிள்ளையுங் குயிலுங் கூறுவ
பாவெலாம் வேதமும் பரம ஞானமும். 8

செய்யினிற் களைதொறும் தேன ளார்விழி
மைநிறத் தனையமா மகர மீதென
வொய்யெனக் கவறுவா னுற்ற புன்குரு
கெய்யும்விற் புருவமா மென்ன மீனமே. 9

சொல்லினுக் கடங்கில வினைய தொல்வளம்
ஒல்லையிற் காண்டொறு முவந்தங் கெய்தினு
னல்லரைத் தணிந்தென வழகு சான்மிடற்
றெல்லையில் பரம்பொரு ளிருக்கு மாநகர். 10

வேறு

இத்திற மனையனுங்க ணினிதிருந் தருளு மன்னுள்
எத்திசை மருங்கு வாழு மிருபிறப் பாள ரெல்லாந்
தத்தமி லுவகை பூத்துத் தருப்பைமற் றனவுந் தாங்கிப்
பைத்தலை யரவம் பூண்ட பரனுறை பசுந்தலைத யுற்றார். 11

அம்பரம் புகழிற் போர்த்த வயோத்தியர் முதல யாரும்
வம்பவி ழலங்கற் கோதை மாரொடு மைந்தர் தாமுங்
கம்பமில் புகழான் செய்யு மகமுணர் கருத்தால் வந்து
பய்பினர் கபிலை பூசை யியற்றிய பதியின் மாதோ. 12

வேறு

வந்தபின் கபிலைமா சிருங்க வாவியிற்
சிந்தையி லீசனைச் சேர்த்து மூழ்கியே
அந்தணர்க் கிருநிதி வழங்கி யைமுகச்
சுந்தரன் கோயிலிற் றேன்ற லெய்தினன். 13

எய்தியாங் கமர்ந்தரு ளிறையை யெம்மனோர்
செய்தவல் வினைத்தொடர் களையுஞ்செல் வத்தை
மையணி மிடற்றனை மறைக்கு மெட்டொணா
மெய்யனைத் தன்னிரு விழியிற் கண்டனன். 14

கண்டவன் பன்முறை வணங்கிக் காரண
அண்டர் நாயக வுனதடி வழுத்துறும்
தொண்டன்யா னுணர்வெனுந் தூயதி லேன்மனங்
கொண்டன முடித்தரு ளென்னக் கூறினன். 15

பற்றிலா ருளமெனும் பக்தர் மீமிசை
உற்றுலாம் பசுங்கொடி யுலகங் காட்டிய
கொற்றவை தன்னையுங் கும்பிட் டெய்தினன்
பொற்றிரள் போனகப் புனித சாலையில். 16

மாதவத் துயர்ந்தமா முனிவர் மாசிலா
வேதவித் தகர்சிவ விரத யோகியர்
காதலிற் புசித்திடக் கடவுட் போனக
மீதெனக் களிப்புட னினித ருத்தினன். 17

தங்கிளைச் சுற்றமுஞ் சார்ந்து ளோர்களும்
இங்கிதத் துடனுற விருந்து போனகம்
நுங்கிமற் றிரும்பகல் கழித்து நோக்கரு
மங்குலம் பொழுதிடை யயோத்தி மன்னவன். 18

சேவுகைத் தானையுந் தேவி தன்னையும்
ஆவினந் தமுதமைந் தாட்டி யாய்கதிர்
தூவிய மணிகலன் தொகுத்து மால்விடை
மேவிடப் புகுத்தினன் வீதி தோறுமே. 19

இன்னணம் பரமனை யிறைஞ்சி யேத்தியந்
நன்னகர் வலஞ்செய்து நாளும் தேவரும்
பன்னிய வேதமும் பணிந்து போற்றிட
மன்னிய சினாகரம் வதிய வுய்த்தனன். 20

உம்பரை யல்லர்யா துடைய ராயினும்
இம்பரி லியற்றின ரில்லை யிப்பகல்
நம்பினர்க் கருள்பவ னடத்தும் வேள்வியை
அம்பரத் தறிவனென் றருக்கன் முன்றினன். 21

மங்குலாங் ககன்றன மலர்ந்த பங்கயம்
சங்கவா ரிதிகதந் தணிந்த தம்பிரான்
இங்குவந் திலனென வெண்ணி யேந்தருன்
அங்கனைந் திவையன வகத்து ளெண்ணுவான். 22

வேறு

பற்றிலா தவர்க்கு வேண்டும் பதியின்று பவவஞ் ஞானத்
துற்றவெம் போல்வார் மாட்டு முறுகுறை யொன்று மின்று
கற்றையஞ் சடையார்க் கன்பன் கருத்தென்னே கருணை யால்முன்
சொற்றனன் வரவு காணேன் துணிவென்னே தோற்றிற் றில்லை 23

ஏன நினைந் தழுங்கி வானத் தெழிலியை வரவு நோக்குந்
துனிவுறு பைங்கூழ் போன்ற தோன்றல்பா லெதிர்ந்து வந்தேன்
இனியஞ்சே லஞ்சே லென்று வெழுமழை பொழியக் கண்ட
பனிவரு பைங்கூ ழென்ன வுவகையாற் பணிந்தான் மன்னே. 24

தன்பதம் பணிந்தான் றன்னைத் தடக்கைதொட் டெடுத்துத் தாங்கி
அன்பகேள் மகஞ்செய் தற்கீ தமயமென் றருளிச் செய்ய
நன்புலன் றுணிந்தா னன்னே னற்றவ நவிலுங் காலை
இன்பமிக் கிலகும் பூவி லியரவர் கொ லிணையா வாரே! 25

**மகநக ரடைந்த படலம் முற்றுப்பெற்றது.**

ஆகப் படலம் 24-க்குத் திருவிருத்தம் 490

# 25-வது யாகப் படலம்

---

வித்தக வறிவிற் செங்கை வேள்சிவ காமு தன்னை
இத்தலம் புகழ யாமீண் டியற்றுறு மகத்தின் பாங்கர்
மெய்த்தவ மறையோர் வேண்டும் பொருளினை விரும்பி னன்காய்
உய்த்தரு கிருத்தி யென்ன யுாமகிழ்ந் துவகை பூத்தரன். 1

மற்றினை யில்லான் சுப்ப ராசமா மணியை நோக்கிக்
குற்றமின் மறையோர் வேந்தர் கொழுந்தன வணிகர் முற்றுங்
கற்றவர் சதுர்த்தர் யாகங் கருதிவந் துறுவோர்க் கெல்லா
மற்றமி லிருக்கை காட்டி யருமைசெய் திருத்தி யென்ருன். 2

நம்பினர்க் கருளுந் தாயாம் நற்றவப் பெருமா ளீன்ற
தும்பியின் வதன நோக்கித் தொடுகட ஞன்குட் பட்ட
வம்புவி யவர்க்கு வேண்டு மறுசுவைத் துணவை யாக்கும்
உம்பரும் விரும்புஞ் சாலைக் குதவிசெய் திருத்தி யென்ருன். 3

மதிமுடிப் பெருமான் கண்ணுல் வடுப்படா மதனன் போல
விதிமுறை யருகே நின்ற மெய்ப்பெரு மாளை நோக்கிச்
சதுர்வித மறையி ஞர்க்குச் சதமக னுலகிற் செய்த
அதிகநல் லமுதம் போல வமைத்திடற் கியற்றி யென்ருன். 4

கொடைத்தொழி ஞளுங் குன்ருக் கொண்டல்போல்
வரையா தென்றும்
அடுத்தவர்க் கருளுஞ் செங்கை யழகரப் பனைநேர் நோக்கி
இடப்படு மகத்த சாலைக் கேதுவா லெய்த வேண்டுந்
தடப்படுஞ் சமிதை மற்றுந் தந்திவ ணிருத்தி
யென்ருன். 5

பின்னரு மனந்த மான பேரெழி லார்க்கு வேண்டும்
நன்னயம் பலவுஞ் சொற்று நற்றவ னிசைத்த வண்ணம்
அன்னமா மறைவ லோனை யாங்கவட் புகுந்து தேடி
முன்னைமா தவத்தாற் கண்டு முறைமையிற் பணிந்து
கொள்வான். 6

தோன்றிய சிறுவர் தங்கள் துயர்துடைப் பதற்குத் தம்மை
ஈன்றவற் குலகிற் கைமா றியற்றின ரின்று லென்மாட்(டு)
ஊன்றிய கவறீர்த் தேழை யுய்ந்திட வுன்மாட் டின்று
தேன்றிகழ் மொழியாய் கேட்குந் திருவர மருளல் வேண்டும். 7

என்றயோத் தியர்கோன் வேண்ட வெண்ணிய கருதும் நீவே(று)
ஒன்றுமாங் கஞ்சா தென்ன துரைத்தியென் றுரைப்ப தாழ்ந்து
நன்றறி புதல்வர் வேண்டி நானின்று தொடங்கும் வேள்வி
மன்றினுக் கிறைவ னாகி மகத்தினை முடித்தி யென்றான். 8

அன்னது கேட்டென் போல்வா ரளப்பதற் கரிதீண் டுற்று
மன்னின ரிருப்ப வென்பால் வழுத்தினை மகிழ்ந்தே னீயும்
உன்னிய படியே முற்று முயலுதி யென்னக் கேட்டுப்
பொன்னடி வணங்கித் தெய்வப் பூம்புன லாடற் கேய்ந்தான். 9

அருமறை யவர்தங் கையா லணிந்ததாண் டருப்பை யேந்தித்
தருமனுச் செவியா லேற்றுச் சரணபங் கயத்தைப் போற்றிப்
பொருவிலா சிகளைத் தாங்கிப் புங்கவ ரனுக்ஞை[1] பெற்றுத்
திருநிகர் கற்பி னாள்கைச் சிறுவிரல் கிறப்பாற் பற்றி. 10

தேனுவின் சிருங்கந் தன்னிற் செழுமறை முறையாற் புக்கிப்
பானுவின் குலத்துப் புக்கப் பார்த்திபன் மதலை யாகி
மானுடப் பிறப்பிற் றோன்று மன்னனும் வனிதை தானுங்
கூனல்விற் கோடி தோய்ந்த கொள்கையிற் குளித்தா ரன்றே. 11

கடக்களி றனையான் றானுங் கலபமா மயிலன் னாளுந்
தடப்பெருங் கமல வாவி தன்னிடைப் புகுந்து மூழ்கல்
அடற்கருங் குலிசப் புத்தே ளருமகம் புரிவாள் வேண்டி
மடக்கொடி யுடனே தெய்வ வாவியுட் டோய்தன் மானும். 12

1 அனுக்ஞை

வண்டணி குழலாள் செங்கை மன்னரே றனையான் பற்றிக்
கொண்டுகோ சிருங்கந் தோயக் குளிர்புனல் புரண்டு போதல்
தென்டிரைத் தடமாங் கன்னி தெரிவைதன் கற்பு நோக்கி
அண்டிட றகாதென் றஞ்சி யகலுத னிகர்க்கு மம்ம. 13

சிங்கவே றனையான் றானுந் தேவியுந் திருக்கை கோத்துச்
சங்கெறி கமல வாவித் தடம்புனல் குடையத் துள்ளி
மங்குல்வா னகத்துப் பாயும் வாளையிம் மகத்தின் பண்பை
அங்குவா னவர்க்குக் கூறி அழைத்திடப்
புகுந்தா லொத்த. 14

தெய்வக்கோ சிருங்கந் தன்னுட் சிறப்புட னிளையர் மூழ்க
நைவுற்றுப் புனலிற் கஞ்ச நாண்மலர் துவண்டு மூழ்கல்
மைவைத்த நோக்கி நாடன் வதனபங் கயத்தை யொப்ப
மெய்யுற்ற தவஞ்செய் வானவ் விரிபுனல்
குடைந்த போலும். 15

பூங்குழல் வளைக்கை பற்றிப் பொருவிலான் சிருங்க மாடப்
பாங்குநீர்க் குள்ளே யாடும் பரிதியின் விம்பம் பாரின்
ஓங்குநின் மகற்கு மேலென் றுலகுளோ ருரைப்பத்
தான்கேட்(டு)
ஈங்குவந் துணர்ந்து கொண்ட வின்பநா டகத்தைப்
போலும். 16

செழுமறை விதியாற் றேனு சிருங்கவா வியிலே யிவ்வா(று)
எழுதரு வனப்பி னானவ் வேந்திழை யுடனே மூழ்கி
அழிவுறுய் பாவ வேலை அகன்றுநீர்ச் சிறையி னீங்கிப்
பழுதறு கரையி லேறிப் படர்துகின் மருங்கு சேர்த்தி. 17

தெய்வவெண் ணீறு தாங்கிச் செபதவ நியமம் முற்றிப்
பையர வணிந்த முக்கட் பரம்பொருள் சரணம் போற்றி
மைவண விழியா னந்த வல்லியைப் பணிந்து நான்கு
மெய்வண்ண மறையோர் தங்கள் வியன்கழற்
சிரமேற் சூடி. 18

குடநிகர் செறுத்த லானுங் குழக்கன் றுங் குலவு பொன்னம்
படமுநீள் கிரண கோலம் பணிகளும் பசும்பொன் யாவும்
தடமிகும் புனலா லன்னார் தங்கரங் குளிரத் தாழாத்
திடமிகும் வாவி நீடுஞ் சிந்தையுங் குளிரச் செய்தான். 19

செய்நில மில்லா தார்க்குத் தீங்கிலாக் குலத்துச் சேர்க்க
ணெய்திடைக் கற்பி ஞர்தங் களனென நுகரும் போக
மெய்நிறை குலச்சூன் முற்றி விழுத்தரை விரும்பி நோக்கு
மைகதிர்க் கழனி தன்னை யன்புட னருளி ஞைல். 20

குணத்திஞல் வனப்பால் வாக்காற் குலவுநாள் முதல நான்கு
கணத்திஞ லிளமை யான்மற் றவர்க்கவர்க் கடுத்த லன்றி
இணைத்திலா வெங்கு மன்ன வெறிலிஞர் தம்மை யாங்கண்
மணத்திலா மறைவ லோர்க்கு மணஞ்செயுந் தகவி னீந்தான். 21

இன்னன பலவுஞ் செய்தெம் மிறைதிருக் கோயி லெய்தி
முன்னிய முடித்தி யென்று முதல்வனை முதல்வன் பங்கி
அன்னையைப் பணிந்து வேண்டு மருள்பெற்றவ்
வணித்த வாக
மன்னிய மகத்த சாலை மருங்கினில் வந்தான் வள்ளல். 22

வந்தவன் மனைக்கு வாய்த்த மடமயி லுடனே ஞான
சுந்தர மீருந்த சங்குச் சுவாமிபொற் றுணைத்தா டன்னைப்
புந்தியால் வணங்கி வேதப் புனிதரைத் தொழுது போந்து
நந்தலில் புகழான் வேள்வி நாதனைத் தொழுது நின்றான். 23

ஆயவ னெழுந்து போந்து ஆருயிர்க் கனையா ளங்கைச்
சேயபங் கயத்தைப் பற்றித் தேனுவின் சிருங்கந்
தோய்ந்து
மேயதிண் கரையி னேறி விதிமுறை கிரியை யாற்றிப்
பாய்விடைக் கொடியி ஞனைப் பணிந்தவ
னருளைப் பெற்று. 24

ஆனந்த வல்லி நாத னருட்பெருங் கோயின் முன்னர்
வானந்தோய் முறையாற் செய்த மகப்பெருஞ் சாலை நண்ணி
ஞானந்தன் வடிவாய்த் தோன்று நற்றவ னருளா லென்றும்
ஊனந்தம் மருங்கு சேரா தும்பர்கோன் றிசையை நோக்கி. 25

அம்பொன்வே திகைக்கு மீதா யருந்ததி யனையா ளோடும்
உம்பருங் காண வேத னெருங்கெழுந் தருளி யாங்குக்
கம்பமில் புகழி னன்கா மாட்சிசெங் கமலக் கையால்
இன்பமாந் தருப்பை தெங்கி னெழிற்கனி கொடுப்ப வேந்தி. 26

விதிமுறை வழுவா துய்த்த மெல்லிய வதவி னும்பர்த்
துதிபெறுந் தருப்பை சேர்த்திச் சுடர்த்தொடி யிடையின் மீதும்
அதிபதி யிடையின் மீது மணிந்தநாண் டருப்பை பூண்டு
மதியுடன் குணபால் நாற்கோண வகுத்திடுங் குண்டம் வைகி. 27

தெக்கண திசைமுக் கோணமேற் றிசையினிற் றிகிரி போலத்
தொக்கமா மகத்த குண்ட மிரண்டினுந் தொல்லை வேத
மிக்கவ ராகி வேள்வி விதிமுறை துணித்துக் காட்டத்
தக்கவீ ரெட்டாம் வேதத் தலைவரைப் பகுத்து வைத்தான். 28

அனையவே தியரை யாகவ னீயத்துக் கதிபன் வாரா
வினையம்வல் லீர்கா ணீவிர் விதிமுறை கடவா வண்ணம்
இனையமா குண்டந் தம்மாட் டியற்றிரென் றிசைத்துத் தானும்
மனையுட னிருந்து சோம மகஞ்செய்வா னொடங்கி னானல். 29

ஆகவ னீய குண்ட மதிற்பசுஞ் சாலித் தோடு
வாகுறப் பரப்பி யச்சு வத்தநா யுருவி வன்னி
சேகுறு பலாச மத்தி திகழ்கருங் காலி மற்ற
ஓமையாஞ் சமித்திட் டேழ்நா வுடையனை யொருங்கு
சேர்த்தான். 30

மந்திர விதியா லானெய் வாரியிட் டழலின் வேந்தன்
சுந்தர வெழுநா வாரத் துய்ப்பன தொகுத்துக் காட்டி
முந்துறுஞ் சுடரோன் வான முகட்டுறுங் காறு மிவ்வா(று)
இந்திர திசைக்கணி யாக மித்தக வியற்றி னுறைல். 31

கற்றையா லிங்கு மேழ்நாக் கனலினைக் கருத்தி னூடு
முற்றுமந் திரத்தான் முட்டி வளர்த்தலின் முன்னி யாங்கண்
உற்றவன் புகழி னோங்கி வளர்ந்தெழுந் துவகை யாற்றல்
அற்றமி னடனந் தேர்ந்த மகனென ஆடிட் டன்றே. 32

முந்தையின் விதியா றோங்கி மூண்டெழுந் தழலின் மீது
நந்தலி றிலமுந் செந்நெற் பொறிகளு நறுநெய் யாவுஞ்
சிந்தையி லினைய வுண்டு தெவிட்டினன் பெரிதோ செப்பின்
ஐந்துட னிரண்டு நீள்நா வவனிடத் திருக்கை யாலே. 33

அந்நெடு வேள்விக் குண்டத் தருங்கன லிடத்துத் தோன்றும்
பன்னெடுந் தூமம் வானிற் பறத்தலப் பண்பி னுனைத்
தன்னமா கிளையை வேதத் தலைவரை யினிது சார்ந்த
முன்னர்வல் வினைக ளாற்று தகன்றென மொழிய
லாமே. 34

நான்மருங் கணித்த வாக நணுகின ருடலந் தோறு
மேனிமிர் கனலி னுறு வெம்மையின் வெயர்நீர் சிந்தல்
ஊனமாங் கொடிய தாய வூழ்வினை யுருகி யன்னார்
தூநிற மேனி நின்று சொரிவன போன்ற தன்றே. 35

பெய்வன முழுது மூண்டு பேரழல் குண்ட நின்று
வொய்யென மருங்கு நாலு முலாவலங் குற்றோர் மாட்டு
எய்தும்வல் வினைக ளின்ன முளகொலோ விலவோ வென்று
வையுற றெளிய வேண்டி யாயுமா போன்ற வன்றே. 36

எண்ணிய குடத்த வானெய் யியன்மறை முறையால் வேத
நண்ணிய மனத்தார் மொண்டு துடுவையா னல்கூந் தோறும்
உண்ணுத லுழையோர் பாவ முண்டலிற் றகைபொ ருந்து
தண்ணிய புனலை யுண்ணுந் தகைமையை நிகர்க்கு மன்றே. 37

நல்வினைக் குரிய மேலா நம்பியு மனைய ளுக
வெல்வினைத் தொடக்கை வென்ற மேலவ னருளி னாலே
பல்வித மறைக ளாய்ந்த பனவரெண் ணிருவ ராண்டு
தொல்லையின் முறைவ ழாமை யுயர்மகஞ் செய்தா ரன்றே. 38

வேறு

இன்னண மேழு பசும்பரி யிரதத்
திறைநடுப் பகலுறுங் காறுஞ்
சொன்னமா மகஞ்செய் தந்தத்தின் முன்பு
தொகுத்தன குண்டநாற் றிசையு
மன்னிய கரும்பொன் கொண்டொரு முழத்தில்
வயிர்த்திடுஞ் சலாகைநான் கமைத்துப்
பன்னிய வதனிற் கிண்ணநான் கியற்றிப்
பாங்கரீ ரிரண்டினு நிறுத்தி. 39

ஆவினெய் நிறைத்துப் பசுநென் மாவதிலிட்(டு)
அமுதெனக் கிண்டிய தெடுத்துத்
தாவிய சுடரோற் குறுதிமந் திரத்தால்
தானுவந் தருந்திடக் கொடுத்து
மேவிய சேடம் வேள்வியந் தலைவன்
மிசைந்தன னிருந்தன மிச்சில்
ஓவிய நிகர்க்கு மெழிலினு ளொருபோ
துணவுகொண் டிருந்தன ளுவந்தே. 40

தெக்கணக் கிளிகுண் டத்தினும் வருண
திசையுறுங் குண்டத்துஞ் செபத்துப்
புக்கநா ளன்குரு துக்களுஞ் சொன்றி
புசித்தன ரொவ்வொரு போது

மிக்கநான் மறையோர் மன்னவர் வணிகர்
விளங்கிடுஞ் சதுர்த்தரிவ் வேள்வி
தொக்கசீர் நோக்கப் புகுந்தவர்க் கழகு
சுதன்புரி செயலினித் தொகுப்பாம். 41

வேறு

ஆங்கவர்க் கறுசுவைத் தமுத மூட்டிடப்
பாங்குறு மடைத்தொழில் பயின்ற வாணரை
ஓங்கிய வுவகையா லுறச்செய் தொண்ணிதி
வாங்கிய மணித்துகின் வழங்கி ஞனரோ. 42

ஆதிதொட் (டாங்கண் போந்)து வைகலு
மோதிய மகத்தினுக் குற்றயா வர்க்குந்
தீதிலா வறுசுவை சிறந்த போனக
மீதனுங் கடனென வியம்பி (மன்ன)ரும். 43

தன்னிளந் தாதையர் தனையர் தங்களின்
முன்னவன் பங்கய முகத்தை நோக்கியே
இன்னவ ரமுதியற் றிடற்கு வேண்டிய
வன்னவை குறைவிலா தளித்தி யென்றனன். 44

என்றலு மனையவ னிணையில் லாலரி
ஒன்றிய குவையினை யுவரி யுண்டுபெய்
மின்றரு முகிலினம் வெள்க வெள்கவே
வன்றிற லங்கையான் வழங்கன் மேயினன். 45

பானிறத் தரிக்குவை பண்டி பண்டியாய்த்
தானிறைத் ததற்கிது சாலு மென்னவே
தேனிடத் தமுதெனச் சிறக்கும் பல்லுணா
மேனிலத் தவர்களும் வியப்ப நல்கினன். 46

ஆன்றரு மிழுதுநேற் றதியு மம்பொனின்
வான்றரு மமுதென வந்த கீரமுந்
தோன்றிய திலமதிற் றுவன்று நேயமும்
ஊன்றிய புகழின னுவந்து நல்கினன். 47

கைப்பன துவர்ப்பன கார்ப்ப கூர்ப்பன
துப்புறு மிவ்வகைச் சுவைக்கு வேண்டும்
மைப்புய நிகர்த்தகை மணவ னல்கினன்
இப்புவி மகிழ்தர விலையெ னைமலே. 48

ஆடல்வே ளனையவ னயினிச் சாலைமாட்(டு)
ஈடறப் புகுத்திய திசைப்ப வல்லனே
பாடுறும் பல்வளஞ் சுமந்த பண்டியால்
நீடரை மகள்வெரி னெளிந்த தாமெனின். 49

அனையவ ரன்னகோண்[1] டமுத போனக
நினையுமவ் வளவையி னிடதர் கோமகன்
புனைதரு மமுதெனப் புரிந்து முற்றினர்
தனைநிகர் பல்லுணைச் சமைத்து நல்கினர். 50

அடுமடைப் பள்ளியி னன்றைக் கன்றடும்
படியுறு மரிக்குவை களைந்த பாணியாற்
கொடிநகர்ப் புறத்துறக் குலவு நந்தனந்[2]
தடியிடை நெற்பயிர் தழைத்த தெங்குமே. 51

துனியறு மடைத்தொழிற் சுருதி கண்டுளோர்
நினைவுறும் போனக நிருமித் தாங்கது
புனைதரும் புகழினற் குணர்த்தப் புண்ணியன்
இனையன முன்னவற் கியம்பி னைரோ. 52

ஆங்கவை யுணர்ந்த வனந்த னளர்தம்
பூங்கழ றெழுதவை புகலப் புங்கவர்
தீங்கறு போசனச் செயலை மேயினர்
பாங்கின்மற் றெவருமப் பண்பு பூண்டனர். 53

அவ்வவர் மரபினுக் கமைந்த வாடகச்
செவ்விய சாலையைச் சேர்ந்து செய்தன

---

1 ரன்னகொண் எனினும் அமையும். 2. நந்தனத் எனவு பொருந்தும்

எவ்வமில் போனக மினிது மாந்தியே
பௌவமா ருவகையிற் பன்னன் மேயினர். 54

எண்ணில வீவன்புக ழெல்லை யிம்பரிற்
புண்ணிய னிவனெனப் புகலு வார்சிலர்
கண்ணகன் புவிமிசைக் காட்டி னையன்
அண்ணலை நந்தவத் தருமையா லென்பார். 55

வானவர் மரிகடல் வயினின் றுங்கெழு
தூநிற வமுதமுண் டொழிவில[1] ராமென
மானவர் கூறுவர் வள்ள லூட்டிய
போனக மெனவது புனிதமன் றென்பார். 56

உன்னிடில் வல்சியங் குவையி னேகையில்
துன்னிய பல்லுணக் கருவி சூழ்திரை
மன்னிய நெடுங்கடல் வலயத் தாங்கிவன்
இன்னவை யீட்டியதென் கொண்டா மென்பார். 57

உத்தம நெறிவழா துலகின் மீப்புகழ்
வைத்தவர்க் கிச்செயல் வலிகொலோ வென்பார்
இத்திற லனையவ னிதய மாமெனச்
சுத்தனு மிளவல்மற் றெனவுஞ் சொல்லுவார். 58

நினைத்தன முடிக்குறு நியமம் பூண்டுளா
மனத்தினன் சுப்பமா மகிபன் றன்செயல்
அனைத்துநீர் நோக்குதி ருணன் மாமகன்
தனக்குமே லிவனெனச் சாற்று வார்சிலர். 59

பனைத்திரள் கடக்கரிப் பரத னுமென
அனைத்தினும் வல்லதோ ரழக ரப்பபூ
மனுக்கிணை யவனலால் வாரி சூழுல
கினிற்றர மொருவரு மிலையென் றேதுவார். 60

---

1 டொழில என்றுளது

பூங்கணைக் கிழவனை யனைய பொற்பினோடு
ஓங்கிய புகழ்ச்சிவ காமு வும்பரின்
பாங்குறு தேனுவா மென்னப் பாருளோர்
தாங்கனி வுறக்கொடுத் தனனென் றோதுவார். 61

மன்னவர் புகழ்பெரு மானென் றோதிய
பொன்னயிற் காத்தினான் வழங்கும் பொற்பினை
முன்னர்மா முகிலினோ மூரி வானின்மேல்
தன்னிகர் தருவினோ தான்கற் றானென்பார். 62

அன்னவ ரன்னவா றுவகை[1] யாற்றினாற்
பன்னுவ தரியவோ படைக்குங் காலையில்
தன்னிகர் நறுநெயா னனையுந் தண்டரை
இன்னமும் புலர்கிலா விருந்த தாமரோ. 63

இன்னணம் புகழ்ந்தவ ரிருக்குங் காலையில்
தன்னிக ரவனுமந் தணர்கட் சார்ந்தவர்
பொன்னடி வணங்கிநிற் பொருந்து றாதெனு
மன்னவை பொருத்தி ரென்றடி வணங்கினான். 64

வெள்ளடை பாகுமற் றெவையும் வேதியர்
உள்ளமீக் கிளர்தர வுவப்பி னல்கியே
வள்ளன்மற் றெவர்க்குமவ் வகைத்த வாகவே
ஒள்ளிதி னடங்கலா வுவகை செய்தனன். 65

அனையன நடந்தபி னழகு காதலன்
புனைதிற விளவல்க ளெவரும் போனகங்
கனிவுற வயின்றவை கழிந்த மற்றநாள்
நினைதரு மகஞ்செயு நியமம் பூண்பரால். 66

இந்நிலை யொன்றுநான் கிரண்டு வைகலு
நன்னிலை மகச்செய னடத்தி மற்றநாள்
என்னவா கவனியத் தடுத்த மேற்றிசை
மன்னிய வேதிகை மருங்கு கீட்டிசை. 67

---

1 முவகை என்றுளது.

தம்பமொன் றிரும்பினிற் சமைத்து நாட்டினுன்
வெம்பிய மகப்பசு விளங்க மஞ்சனம்
பம்பிய பரிமளப் புனலிற் பண்பினுல்
உம்பர்த மகத்தின தொழுங்கி ஞட்டினுன். 68

வாசமா மலர்த்தொடை வளைந்து சூட்டிநல்
தேசுலா மணிப்பணி சிறக்கப் பூட்டியாங்(கு)
ஆகிலா யூபத்தின் மாட்டி யாரண
மாசிலா விதிப்படி வபையை வாங்கினுன். 69

பல்கவர்ச் சலாகைமீப் பரப்பி யாங்கதை
பில்குவெஞ் சுடரினுக் கூட்டிப் பீடுற
நல்குறும் பகுறுணிப் படுத்து நம்பினேர்
வல்வினை யறுப்பவன் வணங்கி வாங்கினன். 70

ஆதிநா யகர்க்குமா லயற்கு மெண்டிசை
நீதியாற் புரந்திடு நிலைமை யாளர்க்கும்
ஓதிய முறைமையாற் படைத்தவ் வும்பர்தஞ்
சீதபங் கயப்பதஞ் சிரத்துச் சூட்டினுன். 71

**யாகப் படலம் முற்றுப்பெற்றது.**

ஆகப் படலம் 25-க்குத் திருவிருத்தம் 561.

## 26-வது தியாகப் படலம்

தன்னி கர்த்த வொருதலைப் புடவி
 தன்னி ரில்லையென யாவரும்
உன்ன வுத்தம மகத்தை முற்றியுயர்
 உம்பர் தங்கடிரு வருளினுன்
முன்ன ருற்றிடு வல்வினை களைந்துலகின்
 முதன்மை பெற்றுமிகு நாடொறும்
பொன்னெ னத்தனையர் தமையுயிர்ப் பவர
 மெய்தினு னழகு புதல்வனே. 1

இன்ன வண்ணமக முற்றி வேதியர்
 இசைத்த வாசிசிர மேந்தியே
தன்ன தாருயிரை யனையகற் பிலகு
 தையல் தன்னெடு மகிழ்ந்துசென்(று)
என்ன வானுயர் சிருங்க வாவிதனின்
 ஆடிநீள் கரையி னேறியே
முன்னர் நீதியின் வெண்ணீ ரணிந்துமக
 முற்று சாலையரு கெய்தினுன். 2

வந்து வேதிகை மருங்கி னிருந்தமறை
 வல்லதே சிகனை மயிலினேே(டு)
உந்து மான்மத நறும்பனீர் கொடெழில்
 உபய தாளினை விளக்கியே
கந்த நாண்மலர்க ளாலருச் சனைய
 கடன்முடித் தவர்க டமையழைத்(து)
[1]இந்த (தூய)மா மணிய வாசனத்
 திருமெனக் கொடுத்ததி லிருத்தியே. 3

பொன்னி னுடையணி யுத்த ரீயமிவை
 புனைய நல்கிநவ மணிகளான்
மின்னு பொன்குழை மதாணி கண்டிகை
 விளங்குபைங் கழல்கள் மென்ருெடி

1 இவ்வரியில் சீர் குறைந்துளது

பன்னு தண்டைகள் சிலம்பி னோடுபல
பணிக ணல்கிவழி பான்முலை
என்ன வான்விளைவு சென்ன லின்னன
வனந்த மன்பொடு வழங்கியே. 4

நாயி னேமும திணைப்ப தத்துற
நடத்தி வந்தபணி நன்கிலா
தாயி னுலுமறி வின்றி மைந்தர்பதி
னுயிரந் தவறி யற்றினுந்
தாய ரன்னர்புரி பிழைபொ றுப்பதென
நீவி ரெம்பிழை தனைப்பொறுத்(து)
ஒய்வி லாமலருள் செய்க வென்றவர்தம்
உபய தாண்மலர் வணங்கினுர். 5

பங்க யப்பதம் வணங்குமிவ் விருவர்
பழுதி லாவதன நோக்கியே
கங்கை வைத்தசடி லத்தின னருளி
னுலு மிக்கதோர் காமாட்சியா
மங்கை நற்கருணை யாலுமிப் புவியில்
மைந்தர் தங்களையு யிர்த்துமே
பொங்க முற்றளகை யினெனப் பவுசு
நாளுநீர் பொலிக வென்றனர். 6

வேள்வி நாதன்மணி வாயி னுசிமொழி
வேந்த னெய்திமிகு வேதியர்
தாள தாலுயர்ச ரோரு கச்சரண
முச்சி வைத்தவர்க டங்கள்பாற்
கேள்வி யான்மிக வடங்கி லாதபுக
ழாளி நல்கியிடு கிளர்நிதி
கோளி லாலுபுய லேழு மொன்றிமழை
கொட்டு பான்மையை நிகர்த்தவே. 7

ஆசி லாதவிழை யொன்று பேசின்விலை
ஆயிரத் தனபொன் னுடைவான்

தேசு லாவுமணி யொன்று கோடிவிலை
செம்பொ னார்நவ மணிப்பணி
பேசு மாறரிது யர்ந்தி லங்குவன
பீத கத்தினணி பூணநூல்
நேச மாயவர்கள் செங்கையும் பெருகு
நெஞ்சமுங் குளிர நீட்டினான். 8

கிம்பு ரிப்பணி வயிர்த்த கூரிரு
மருப்பினான் கதிகொள் கிள்ளைகள்
பம்பு நெற்குலை பழுத்தி லங்குவிளை
கழனிகன் னல்கொள் படப்பைகள்
உம்பர் புத்தமுத மனையமென் மொழியவ்
வுருவசிக் கிணைய பேரெழில்
அம்பை யொத்தவிழி யழிவில் கன்னியரை
அம்பினோ டவன்வ ழங்கினான். 9

பங்க யப்பதவி ரட்ச ணைக்குரிய
படர்வெ யிற்குநிழல் தருவன
பொங்கு வெங்கொடுவி டாய்த ணித்திடுபு
னற்கொ ளற்குரிய கண்டுயில்
தங்க நீடியெழில் தங்கு மஞ்சமிசை
தங்கு பூவணைக டலையணை
செங்கை யாரமறை யந்த ணாளர்பெறு
சிந்தை யாரவும்வ ழங்கினான். 10

மற்ற வர்க்குமிவ் வகைத்தெ னாதுநிதி
வாரி மாரியின்வ ழங்கியே
நற்ற வர்க்கணிய வாடை கோவண
நவிற்று புல்லதள் கமண்டலங்
கற்ற வர்க்கிஃது போது மென்றவர்
களிக்க வேபல கனகமுடன்
உற்ற வர்க்கவர்வி ருப்ப மனைத்துமவன்
உதவினா னறிவி னும்பரான். 11

வேறு

இந்நிலை யனையவ னெவர்க்கு மன்பினால்
நன்னிதி யறுவைபூ ணல்கி நாயக
மன்னிய தெய்வமா மணியி தாமெனப்
பொன்னுல கவரெலாம் புகழ வைகினான். 12

கூனமதி மிலைந்தவன் குலவு மொண்கழல்
தானமதி யொடுந்தொழுந் தகைய னாகியே
மானவன் வதிந்தனன் மறைவ லாரொடும்
ஞானநா யகன்றிரு நாளின் காறுமே. 13

கண்ணுதற் பரமனைக் கமல நாதனும்
ஒண்ணுதற் கரியபே ரின்ப வாரியை
ஒண்ணுதற் கொருபுற முவந்து நல்கிய
அண்ணலைத் தொழுதவ னருள்பெற் றானரோ. 14

பண்ணவ னருளினைக் கிடைத்த பண்பினால்
நண்ணிய மறைவலார் தமக்கு நானிலத்
தெண்ணிய யாவர்க்கு மெவைக்கு மின்புற
உண்ணிறை மகிழ்ச்சியா லுவகை செய்தனன். 15

**தியாகப் படலம் முற்றுப் பெற்றது.**

ஆகப் படலம் 26-க்குத் திருவிருத்தம் 576

# 27-வது மீட்சிப் படலம்

அன்னவர் தமையெலா மவர்கள் வாழ்ந்திடு
நன்னகர்ச் செலுத்திய ஞான போனகன்
தன்னிரு தாமரைச் சரணந் தாழ்ந்தவன்
பன்னிய வாசியின் பலன்பெற் றனரோ. 1

முன்னவர் பின்னவர் முயன்ற நண்பினர்
மன்னிய தங்கிளை வருக்கஞ் சூழவே
தன்னிகர் பசுந்தையாந் தலத்தை நீங்கியே
நன்னக ரெய்தினு னவையில் கீர்த்தியான். 2

மிகவெழில் சிறந்தன வீர பாண்டிமா
நகர்வயி னனையவ னணுகுங் காலையில்
திகழிளங் குமரருந் திரண்ட பூண்முலை
முகமதி மாதரு மருங்கு மொய்த்தனர். 3

உம்பரின் வாசவ னுவமை பெற்றிலான்'
இம்பரில் வாசவ னிவற்கென் பார்சிலர்
நம்பிபா லிருந்திட நமைப்பண் டாக்கிய
சம்புவுக் கென்செயத் தகுமென் பார்சிலர். 4

பொன்னக ரனையவிப் புனித மாநகர்
மன்னனை நிகர்க்குமிம் மகிபன் மாசிலா
வின்னவன் நன்மருங் கிருந்து வாழ்தலால்
தன்னிகர் புலவர்நாந் தகுமென் பார்சிலர். 5

விடையுயர்த் தவனருள் விரும்பி வேள்வியங்
கடன்முடித் தெய்தினன் கருகி லீங்கிவன்
புடையுடுத் தருள்கடற் புவிக்க ணும்பரான்
அடிமிசைப் பணிகுத லழகென பார்சிலர். 6

அண்ணல்மா மகச்செயல் முற்றி யைமுகப்
பண்ணவ னருள்வரம் படைத்திங் கெய்தினன்
வண்ணமா மகாருறும் வனப்பு நோக்குறுங்
கண்ணமக் கருள்வன களிப்பென் பார்சிலர். 7

னத்தினிற் குபேரனுங் கொடையிற் ருருவாம்
எனப்புவி மகிழ்சிவ காமு வென்றுளான்
மனத்தினுன் மறையவர்க் களித்த வான்பொரு
ளினுக்கிணை யாகுமோ விமய மென்பரால். 8

கொண்டலை நிகர்த்தகைக் குரிசில் கோதிலா
மண்டலீ கரன்சுப்ப ராச மாமணி
யண்டரும் வியப்புற வழங்கு மம்பொனுக்(கு)
உண்டுமோ கணக்கிட வொருவ ரென்பரால். 9

மந்தர மனையதோள் வள்ளல் மாசிலாச்
சுந்தர னெனுஞ்சிவ காமு தொன்னிதி
யந்தனே யள்ளியாங் கடைந்து ளோர்க்கெலாந்
தந்தன னங்கர்கோன் ருனென் பார்சிலர். 10

சரதமுற் றிடுமழக ரப்பதாட் டகன்
பாதனுக் கிணையெனப் பகரும் பான்மையான்
கரதலத் தினிற்பொழி கனக மாரியாற்
சுரர்பதிக் கிணைமக நகரெனச் சொல்வார். 11

ஞானபோ தகங்குண சார நற்றவம்
தானமா தருமமுந் தழைக்குஞ் சிந்தையான்
வேனில் வேளெனும் பெருமாள் விருப்புடன்
வானுரு மரனென[1] வழங்கின னென்பார். 12

இச்செய லியாவரு மியம்பி யீண்டியே
பொச்சமி லன்பினுற் பரவிப் போந்திட
வச்சிரத் தவன்மனை பொருவும் வாழ்மனை
முச்சகம் புகழ்பெறு முதல்வ னெய்தினன். 13

**மீட்சிப் படலம் முற்றுப்பெற்றது.**

ஆகப் படலம் 27-க்குத் திருவிருத்தம் 589

---

1 = ?

# 28-வது புத்திரோற்பத்திப் படலம்

வைகல்சில சென்றதற்பின் வான்மதிச் சென்னியினன் வரத்தி னாலே
உய்கநெடுங் கடல்சூழ்ந்த வுலகமெலாஞ் சுருதிதழைத் தோங்க நாளு
மெய்கமழுந் தவந்தருமஞ் சிவஞானந் தலையெடுப்ப விண்ணோர் வாழ்த்த
மைதிகழுங் குழலிலக்கு மணிவயிற்றிற் கருப்பமிக வயங்கிற் றன்றே. 1

கணங்குலவும் விழுதினவா லிலைமிசைச்சங் [குசக்கரத்தான்
கருணை யாலே
இணங்கியிருந் தனனென்ன யிலக்குமணி யுதரவடத் திலைமே லாக
மணங்கமழுங் கருப்பமது வாய்த்தனவென் றுலகமெலா மகிழ்ச்சி கூர்ந்த
வணங்கனையா ரழகுமரு மகள்வனப்பை நோக்கியதி சயித்துச் சொல்வார். 2

வேறு

மங்கை நற்றவ வண்மைய தோவலா
தங்க சற்கிணை யான்றவத் தாக்கமோ
சங்க வாரி யடுத்தவித் தாரணி
எங்கும் போற்றுமெழிற் றவமோ வென்பார். 3

கோதை யின்கருக் கொண்டிடு மாலிலை
மீதி னேங்கிக் கனத்தில் வேல்விழி
யோது செவ்வரி யுற்றில வாதலால்
ஈது பெண்ணன் றிறைவனென் றோது வார். 4

இனைய வண்ண மிசைந்திடத் திங்களுந
நினையி லீரைந்து சென்றிட நீள்புவி
வினையி னீங்கியுய்ந் தோங்கி விளங்கிட
மனையின் பாட்சி தவத்துறை மல்கவே. 5

ஞான நீட நலந்தழைத் தோங்கமா
தானம் யாருந் தளிர்த்திட மன்னுயிர்க்
கூன நீங்கி யுவப்புற வும்பரு
மேனை யோரு மிதயங் களிக்கவே. 6

எல்லை வான்பதி யேமுதல் யாவரும்
அல்ல றீர்க்குநட் பாட்சியுச் சம்மெனு
நல்ல தானம் பொருந்த நவையிலாச்
செல்வன் வந்தன னீடு சிறக்கவே. 7

மைந்தன் வந்து பிறந்திட மாசிலான்
சிந்தை சாலவு வந்து திரண்மணி
உந்து தண்புன லுற்றவ னாடியே
வந்து பூசுரர் பாதம் வணங்கினான். 8

வணங்கி மாழை மணிபுரை செந்நெனா
லிணங்கு வேதியற் கின்புற நல்கியே
குணங்க ளாலுயர் கோமகன் கான்முளை
தணங்கு லாமுகத் தாமரை நோக்கினான். 9

வந்த வந்தவர் சிந்தை மகிழ்ந்திட
எந்த வெந்த விரும்பொருள் வேண்டினுந்
தந்து தந்து களித்தனன் றாழ்விலாக்
கந்த மாமலர்க் கற்பகம் போலவே. 10

இன்ன வண்ணந் திருநக ரெங்கணு
மன்னு கின்ற மகிழ்ச்சியம் மன்னவன்
தன்ன தானனத் தாமரை நோக்கியே
பொன்னெ னத்தகும் பூசுர ரோதுவார். 11

ஏற்ற மிக்கவா ஞளின னிம்பரும்
போற்று வானும் புகழும் புரவலன்
ஆற்றல் மிக்கவ னுய்ந்திடும் பல்கலைத்
தோற்ற மிக்குறுந் தீரனிச் செம்மலே. 12

இனையன் றோன்று மிலக்கண மின்னமுங்
கனைக டற்புவி போற்றக் கலியிருள்
வினையு நீங்க விளங்கிட நற்றவந்
தனைய ரோரிரண் டாமெனத் தக்கதால். 13

என்று கூறி[1] யெழுதிய சாதகம்
நன்றி தாமென நல்கிட நல்கினன்
கன்று மானுங் கழனியும் பூண்களும்
ஒன்று பன்னிதி யாவுமவ் வுத்தமன். 14

தோன்று மன்னன் வனப்பினுஞ் சோதிடர்
ஆன்ற சாதகத் தாற்றினு மாடரா
நான்ற பூணனை தம்பு மிவனென
வேன்ற பேர்சிவ காமுவென் றிட்டான். 15

மற்றவ் வாறு மயில்புரை சாயலாள்
உற்ற சூன்முதிர்ந் தும்ப ருவந்திடப்
பெற்ற வோரையிற் பெற்றனள் மைந்தரைக்
கற்ற தாதைகண் கண்டு களிக்கவே 16

அனைய மைந்தர்க் கழகென்று மண்ணல்பாற்
கனித ருஞ்சிவ காமுவென் னும்பெயர்
புனைய மூவரும் பூருவ வான்மதி
தனைநி கர்த்து வளர்ந்தனர் சாலவே. 17

மற்றை யைந்து மகிபர்க்கு மைந்தர்கள்
பெற்ற மூரெம் பிரான தருளினாற்
சொற்ற நன்முகூர்த் தங்களிற் றோன்றினர்
நற்ற வப்பய நாளுந் தழைக்கவே. 18

1 கூரி என்றுளது

**வேறு**

கற்றவர் புகழ்கா மாட்சியென் றுரைக்குங்
கற்பகக் கடற்புவி முளைத்துக்
கொற்றவன் குமரரெட் டேந்திரன் கருணை
குலவுநன் னீரினூற் றழைத்து
நற்றமி ழுணர்சிவ கூரமுவே முதல
பாலராம் நன்கிளை பெற்றுச்
சுற்றிய திசைநான் கிரண்டினும் புகழின்
றாய்மணத் தொடுவளர்ந் ததுவே. 19

**வேறு**

முன்னையினுஞ் சிறப்புளனிங் கிவனென்ன வயோத்தியர்கள் முதல மற்றைந்
துன்னினர்க ளியாவர்கட்குந் தொலையாத கருணைவெள்ளஞ் சுரந்து நாளு
மின்னல்மேற் பலபொருளும் பல்வளனுஞ் சிறப்பவிசை யெங்கு நீடப்
பொன்னகரா னெனவாழ்ந்தான் காமாட்சி மன்னனெனும் புகழி னானே! 20

**புத்திரோற்பத்திப் படலம் முற்றுப் பெற்றது.**

ஆகப் படலம் 28-க்குத் திருவிருத்தம் 609.

சோமயாகப் பெருங்காவியம் முற்றும்.

# செய்யுள் முதற்குறிப்பு அகரமுதலி


| அ | பக்கம் |
|---|---|
| அங்கநெக்குநெக் | 81 |
| அங்கமெலாமொரு | 86 |
| அஞ்சனநிறக் | 6 |
| அஞ்சன மணிகளத் | 43 |
| அஞ்சிறைக்களிவண் | 24 |
| அடியேனுமக் | 69 |
| அடுமடைப்பள்ளி | 113 |
| அண்டர்முதலி | 50 |
| அண்டர்வானினு | 84 |
| அண்டர்வான் | 14 |
| அண்ணல்கேட்டி | 79 |
| அண்ணல் மாமகச் | 121 |
| அண்ணறன் வரம்பில் | 64 |
| அதற்கியைந்த | 41 |
| அத்தனிப்பொருளை | 6 |
| அத்திதந்த | 12 |
| அத்தியோடருகு | 90 |
| அந்தணர்தமக்கு | 92 |
| அந்த மன்னவர் | 29 |
| அந்த மன்னவன் | 79 |
| அந்தரத்தமர | 3 |
| அந்தரவரிவி | 72 |
| அந்நிலைநான்மறை | 63 |
| அந்நெடுவேள்வி | 110 |
| அப்பதியிடத்தி | 67 |
| அம்பரத்தறல் | 44 |
| அம்பரம்புகழிற் | 102 |
| அம்பொன் வேதிகை | 109 |
| அருந்ததிகணவ | 74 |
| அருமறையவர் | 106 |
| அலம்பிளப்ப | 9 |
| அவ்வகைதினங் | 96 |
| அவ்வவர்மரபினுக் | 113 |
| அவ்வளம்பதி | 29 |
| அவ்வளம்பெறு | 40 |

| | பக்கம் |
|---|---|
| அவ்வுரைகேட்டுமு | 101 |
| அவ்வுரை தலைக்கொடு | 42 |
| அழகுறுதருமத் | 5 |
| அறம்பொருண் | 24 |
| அனங்கனலங்கம் | 7 |
| அனையதொல்வளம் | 76 |
| அனையநாட் | 101 |
| அனைய மிக்க | 32 |
| அனைய மைந்தர்க் | 125 |
| அனையரம்மொழி | 83 |
| அனையவரன்ன | 113 |
| அனையவன்றவள | 73 |
| அனையவாறவர்க் | 33 |
| அனையவாறழகு | 51 |
| அனையவாறனைய | 75 |
| அனைய வேதியரை | 109 |
| அனையனநடந்தபி | 115 |
| அன்பநீ கேட்டி | 88 |
| அன்புகந்தசிந்தை | 93 |
| அன்றுமுதற்கயிலாச | 85 |
| அன்னசோலையு | 17 |
| அன்ன தலமுளது | 88 |
| அன்னது கேட்டென் | 106 |
| அன்னதோர்பொழுது | 94 |
| அன்னபொழுதவன்செயலை | 62 |
| அன்னபொழுதவன்றுதை | 57 |
| அன்னமன்னவர் | 28 |
| அன்னயாக | 93 |
| அன்னலாரிளமை | 73 |
| அன்னவரன்ன | 115 |
| அன்னவர்தமையெலா | 121 |
| அன்னவர்தமையெழி | 94 |
| அன்னவாறவை | 77 |
| அன்னவாறிளங் | 35 |

| ஆ | பக்கம் |
|---|---|
| ஆகவனீய குண்ட | 110 |
| ஆகவனீயத் | 92 |
| ஆங்கவர்க்கறுசுவை | 112 |
| ஆங்கவை கேட்டனன் | 86 |
| ஆங்கவை யுணர்ந்த | 113 |
| ஆசிலாதவிழை | 118 |
| ஆசிலாதனசெங் | 20 |
| ஆசின்மறை | 59 |
| ஆடல்வேளனைய | 113 |
| ஆண்டெழுந்தருளுங் | 100 |
| ஆதிதொட்டாங்கண் | 112 |
| ஆதிநாயகர்க்கு | 116 |
| ஆதியந்தமா | 2 |
| ஆதியாங்குண்டத் | 91 |
| ஆதியாயெனக் | 85 |
| ஆயமைந்தர்கள் | 30 |
| ஆயவனிவணுற | 98 |
| ஆயவனெழுந்து | 108 |
| ஆயவாறிவணீ | 74 |
| ஆயவுரைதனைக் | 57 |
| ஆய்ந்த சிற்பநூ | 84 |
| ஆர்க்குமோதை | 83 |
| ஆர்ந்தநெற்குவை | 12 |
| ஆலயநியதிய | 66 |
| ஆவினெய்நிறைத்து | 111 |
| ஆளியைநிகர்த்த | 60 |
| ஆனநான்மறை | 80 |
| ஆனந்தவல்லி | 109 |
| ஆன்றருமிழுது | 112 |

| இ | பக்கம் |
|---|---|
| இக்குலமெனும் | 95 |
| இச்செயலியாவரு | 122 |
| இடம்படுபரவை | 72 |
| இணையில்கற்புடை | 89 |
| இத்தகையுணர்வான் | 67 |
| இத்திறமனையனுங்க | 102 |
| இத்திறமனையனு | 61 |
| இத்திறம்புரிவோன் | 90 |
| இந்தமன்னரு | 31 |
| இந்நிலையனையவ | 120 |
| இந்நிலையொன்று | 115 |
| இப்பெருந்துயர்க்கட | 96 |
| இம்பரிற்பொலிவுறு | 99 |
| இம்முறைவேள்வி | 92 |
| இவ்வண்ணமனையான் | 66 |
| இளமையிற்கலென் | 34 |
| இனையதீம்புன | 8 |
| இனையநோர் | 19 |
| இனையநன்னதி | 9 |
| இனையரிவ்வாறியைந்த | 63 |
| இனையவண்ண | 124 |
| இனையனன்னவா | 35 |
| இனையன்றேன்று | 125 |
| இன்னண நகர்புனைந் | 44 |
| இன்னணமேழு | 111 |
| இன்னணம் பரமனை | 104 |
| இன்னணம் புகழ்ந்த | 115 |
| இன்னணம் வளமை | 18 |
| இன்னதடம் | 86 |
| இன்னதன்மையசெய் | 10 |
| இன்னதன்மையபொன் | 40 |
| இன்னமாநக | 84 |
| இன்னவண்ணந் | 124 |
| இன்னவண்ணமக | 117 |
| இன்னவன் மாதர் | 56 |
| இன்னவாசக | 70 |
| இன்னவாறவன் | 33 |
| இன்னவாறுகா | 84 |
| இன்னவாறுபுக | 38 |
| இன்னன பலவுஞ் | 108 |

| ஈ | பக்கம் |
|---|---|
| ஈந்து சேந்த | 37 |
| ஈன்ற பாலகற் | 33 |

| உ | பக்கம் |
|---|---|
| உத்தமநெறி | 114 |
| உம்பரின் வாசவ | 121 |
| உம்பரையல்லர் | 104 |
| உன்னிடில் வல்சி | 114 |
| உன்னுபேரற | 29 |

**எ**

| | |
|---|---|
| எச்சமற்றவ | 70 |
| எண்டிசை வரைப்பி | 23 |
| எண்டிசை வனப்பினவர் | 48 |
| எண்ணிய குடத்த | 111 |
| எண்ணிரண்டெனும் | 39 |
| எண்ணிலவிவன்புக | 114 |
| எண்ணுமிக்கதை | 4 |
| எத்தகவான | 71 |
| எந்தை நிற்குநின் | 85 |
| எம்மிற்கெம்மிற் | 12 |
| எய்தியாங்கமர் | 103 |
| எல்லிரதப்பசும் | 62 |
| எல்லெலாம்வந் | 32 |
| எல்லைவாண்பதி | 124 |
| எள்ளுமேன | 11 |
| எற்றுதெண்டிரை | 24 |
| எனநினைந்தழுங்கி | 104 |
| எனப்பலதுதிசெய் | 100 |
| என்பன பலநினைத் | 65 |
| என்றயோத்தியர் | 106 |
| என்ற வவ்வுரை | 79 |
| என்றவுரைதனை | 58 |
| என்றலு மனையவ | 112 |
| என்றுகூறி | 125 |
| என்னமாத வத்த | 93 |

**ஏ**

| | பக்கம் |
|---|---|
| ஏடலர்ந்தினவண்டு | 20 |
| ஏதமிலனந்த | 21 |
| ஏற்பவர்க்கியைந்த | 65 |
| ஏற்றமிக்கவா | 125 |

**ஐ**

| | |
|---|---|
| ஐயநீயெனை | 78 |

**ஒ**

| | |
|---|---|
| ஒல்லையினம்முறை | 61 |
| ஒற்றைய சகடத் | 21 |
| ஒன்றிரேடிரண் | 80 |

**ஓ**

| | |
|---|---|
| ஓதநீருலகினி | 95 |
| ஓதநீருவரி | 94 |
| ஓதலுந்தூதர் | 94 |
| ஓதவேலையுலக | 36 |
| ஓதியகேட்டவ | 96 |
| ஓமநல்வினைச் | 97 |
| ஓலமிக்கன | 16 |
| ஓலமெய்க்கட | 30 |

**க**

| | |
|---|---|
| கங்குனீங்க | 82 |
| கங்கைசூடி | 92 |
| கஞ்சமானனங் | 10 |
| கடக்களிறனையான் | 106 |
| கடவுண் மந்திரத்தா | 91 |
| கட்டுளபனுற்ற | 51 |
| கணங்குலவும் | 123 |
| கண்டகாலையக் | 77 |
| கண்டபோதுவா | 79 |
| கண்டவர்கட் | 58 |

| | பக்கம் |
|---|---|
| கண்டவன் பன்முறை | 103 |
| கண்ணகன் வானத் | 25 |
| கண்ணுடைக் | 54 |
| கண்ணுதற்பரமனை | 120 |
| கண்மலர்க்கட் | 36 |
| கதிர்மணிப்பணி | 2 |
| கந்தடுகளிற்றனை | 48 |
| கந்தவாவி | 38 |
| கரியவன்கொடிய | 22 |
| கள்ளமேதிக்கடா | 9 |
| கள்ளருந்திக் | 10 |
| கள்ளுடைமலரின் | 53 |
| கள்ளுண்காமர் | 83 |
| கற்றகேள்வி | 4 |
| கற்றவர்க்கருடருங் | 46 |
| கற்றவர்புகழ் | 126 |
| கற்றுணர்ந்த | 37 |
| கற்றையகதிர் | 50 |
| கற்றையாலிங்கு | 110 |
| கனங்குழையயில் | 1 |
| கன்னலுங்கமுகமுங் | 102 |
| கன்னல்முப்பதிற | 34 |
| கன்னனை நிகர் | 97 |
| கன்னிநன்னக | 43 |
| கன்னிபோகமக் | 30 |
| கன்னியர்கட்கணி | 58 |

**கா**

| | |
|---|---|
| காசினியின்மீது | 47 |
| காச்சிமிக்க கருத்தினை | 37 |
| காச்சிமிக்க கவின் | 37 |
| காணின் விலையோ | 47 |
| காண்டமீது | 11 |
| காதுவேல்விழி | 43 |
| காரிற்றேன்றுங் | 31 |
| காரெனுங்காதலன் | 45 |
| காரையுண்ட | 11 |

| | பக்கம் |
|---|---|
| கார்கொண்மேனி | 9 |
| கார்நிறத்த | 27 |
| காலெலா மலர்ந்த | 13 |
| காலையாதவற்கு | 13 |
| கானத்தின்றரு | 14 |

**கி**

| | |
|---|---|
| கிம்புரிப்பணி | 119 |

**கு**

| | |
|---|---|
| குடநிகர்செறுத்த | 108 |
| குணத்தினல் | 108 |
| குதலைத் தீஞ்சொலா | 70 |
| குதலைத் தீஞ்சொற் | 11 |
| குத்திரத்துக் | 17 |
| குந்தமேழின | 81 |
| குலவும் வெண்மணி | 34 |
| குன்றரிந்தவை | 33 |

**கூ**

| | |
|---|---|
| கூரருத கொடுங் | 25 |
| கூனமதிமிலைந்தவன் | 120 |
| கூனினமதிய | 55 |

**கே**

| | |
|---|---|
| கேட்ட வேந்தலும் | 42 |
| கேட்டினச்சைல | 14 |

**கை**

| | |
|---|---|
| கைப்பனதுவர்ப்பன | 113 |

**கொ**

| | |
|---|---|
| கொங்கலர்ந்தபைங் | 81 |
| கொஞ்சிப் பேசுங் | 27 |
| கொஞ்சுமென்மொழி | 70 |
| கொடைத்தொழி | 105 |
| கொட்டுவாங்கிக் | 9 |
| கொண்டலினிடத் | 14 |
| கொண்டலைநிகர்த்தகை | 122 |

| | பக்கம் |
|---|---|
| கொண்டலைப் பழித்த | 44 |
| கொண்டலையுழக்கிய | 47 |
| கொண்டலொத்த | 38 |
| கொண்டல்கள் படிந்து | 67 |
| கொந்தலர்ந்தன | 18 |
| கொந்தளஞ்சரிந்து | 52 |
| கொந்தவிழ்மறை | 45 |
| கொழுஞ் செலுந் | 9 |
| **கோ** | |
| கோகனகமனை | 57 |
| கோங்கலர்ந்தன | 17 |
| கோடுயர் | 49 |
| கோதிலாப்பெருந் | 3 |
| கோதைய கனங்குழல் | 50 |
| கோதையின்கருக் | 123 |
| கோதைவேற்குலி | 43 |
| கோமகனிணைய | 100 |
| கோலமலர்வாளி | 51 |
| கோற்றொடி | 55 |
| **ச** | |
| சதுமறைபெருக | 1 |
| சந்தனமகிலுட | 43 |
| சந்திரகிரியிற் | 23 |
| சரதமுற்றிடு | 122 |
| சாந்தணிமுலை | 102 |
| சாந்தமும்பூணு | 55 |
| **சி** | |
| சிங்கவேறனையான் | 107 |
| சித்திரவினைச்செயல் | 42 |
| **சீ** | |
| சீதநீரகத்துட் | 27 |
| சீர்சிறந்ததிரு | 1 |

| | பக்கம் |
|---|---|
| **சு** | |
| சுடர்த்தொடி | 54 |
| சுடர்ப்படும் | 68 |
| சுற்றெலாமாட | 43 |
| சுனைகடோறுந் | 27 |
| **சூ** | |
| சூதமுற்று | 17 |
| **செ** | |
| செக்கமலமுற்ற | 50 |
| செங்கமலமங்கை | 49 |
| செம்மையவல்வினை | 65 |
| செயத்தகுநல்லறம் | 65 |
| செய்களினுந் | 22 |
| செய்நிலமில்லா | 108 |
| செய்யினிற் | 102 |
| செய்யினுய்த்த | 10 |
| செய்யின்மேற்றிகழ் | 76 |
| செய்யெலாம்பணி | 10 |
| செய்வனசெய்யுங் | 65 |
| செல்வநீண்கரி | 45 |
| செழுமறைவிதி | 107 |
| சென்னிதிக்குவை | 98 |
| **சே** | |
| சேவுகைத்தானை | 103 |
| **சை** | |
| சையத்தாயிடை | 2 |
| சைவலங்குழலாய் | 6 |
| **சொ** | |
| சொல்லினுக் | 102 |
| சொல்லெலா | 22 |

| | பக்கம் |
|---|---|
| சொற்கவிப்புல | 16 |
| சொற்றபுகழ்ச்சி | 87 |
| **சோ** | |
| சோமனேகனற் | 101 |
| **ஞா** | |
| ஞானநீட | 124 |
| ஞானபோதகங் | 122 |
| **த** | |
| தக்கபூசைதனே | 39 |
| தங்கிளேச்சுற்றமு | 103 |
| தங்குருவுரைத்த | 74 |
| தடியினின்றிளஞ் | 17 |
| தண்டமிழ்த்துறை | 25 |
| தண்டுணரிதழி | 65 |
| தண்ணருக்கடி | 7 |
| தண்புனற்றுறை | 32 |
| தண்மையுந் | 23 |
| தந்தைமூப்பிற் | 32 |
| தம்பமொன்றிரு | 116 |
| தம்முயிர்க்காதல | 44 |
| தனத்திஞலீகை | 62 |
| தனத்தினிற்குபேர | 122 |
| தனிப்பரம்பொருள | 8 |
| தனேப்பெறுந்தாதை | 61 |
| தன்பதம்பணிந்தான் | 104 |
| த்ன்னதானினக் | 77 |
| தன்னிகர்த்த | 117 |
| தன்னிளந்தாதை | 112 |
| தன்னேநேரிலாத் | 75 |
| தன்ஞெருபெருந் | 67 |
| **தா** | |
| தாதுகொண்டபூந் | 83 |
| தாதுகொண்டமலர் | 4 |

| | பக்கம் |
|---|---|
| தாதுறுமலர்த் | 60 |
| தாதைமாழவாளி | 67 |
| தாயனேயநற்குண | 63 |
| தாய்நிகர்த்த | 31 |
| தாழ்ச்சியற்ற | 61 |
| **தி** | |
| திங்களோர்பத்து | 95 |
| திருவினேங்கிய | 76 |
| **து** | |
| துங்கஞந்திரு | 34 |
| துனியறுமடை | 113 |
| துன்றிருங்கரிய | 15 |
| **தூ** | |
| தூங்கல்வெண் | 7 |
| தூயமணிவீசு | 49 |
| தூயவிந்நகர் | 22 |
| **தெ** | |
| தெக்கணதிசை | 109 |
| தெக்கணுக்கினி | 111 |
| தெங்குபுன்னே | 17 |
| தெய்வக்கோ | 107 |
| தெய்வவெண்ணீறு | 107 |
| தெள்ளுமுத்தமிழ் | 29 |
| **தே** | |
| தேக்கியுமிழ்கின்ற | 47 |
| தேசிலகுகானே | 47 |
| தேசுமிக்கசெழு | 38 |
| தேனுவின்சிருங்க | 106 |

| | பக்கம் |
|---|---|
| **தொ** | |
| தொழுதமன்னவ | 83 |
| **தோ** | |
| தோன்றியசிறுவ | 106 |
| தோன்றுமன்னன் | 125 |
| **ந** | |
| நங்குலமுதல் | 95 |
| நஞ்சுபில்கிய | 3 |
| நம்பினர்க்கருளு | 105 |
| நம்பினர்க்குதவு | 45 |
| நலந்தவாவகை | 81 |
| நல்லவாயிரத் | 33 |
| நல்வினைக்குரிய | 111 |
| நல்வினையுணர்கிலா | 65 |
| நற்றவப்பயனு | 30 |
| நற்றினமதனின் | 89 |
| நன்மைசால் | 88 |
| நன்றிதங்கு | 8 |
| நன்றுநன்று | 78 |
| **நா** | |
| நாடொறும்பரமன் | 71 |
| நாணமேமுதல | 20 |
| நாணினைமுதல | 52 |
| நாயினேமும் | 118 |
| நாற்றிசையும் | 48 |
| நானெனுங்கொடிய | 71 |
| நான்மருங்கணி | 110 |
| நான்மறைதெரிந்து | 90 |
| **நி** | |
| நினைந்தனமுடிக்கு | 114 |
| நின்றசேடம் | 12 |
| நின்றவிளங் | 56 |
| **நீ** | |
| நீங்குமினீங்கு | 53 |
| நீடுதிரிகூட | 51 |
| நீட்டியமுடங்கலு | 47 |
| நீரின்மேற்படு | 69 |
| **நே** | |
| நேமிமுற்றுஞ் | 29 |
| **நோ** | |
| நோக்குவது | 67 |
| **ப** | |
| பங்கயத்தன | 11 |
| பங்கயப்பதம் | 118 |
| பங்கயப்பதவி | 119 |
| பசியவெண்டண்டுல | 59 |
| பஞ்சவன்கன | 3 |
| படைமதன்பகழி | 53 |
| பட்குவைபழித்த | 52 |
| பட்டிகைப்பணை | 46 |
| பணைத்தவாரெழி | 76 |
| பண்ணவனருளினை | 120 |
| பதத்திடுஞெகிழ்ந்து | 21 |
| பத்திநீண்வலை | 85 |
| பந்தமாந்தழைப் | 75 |
| பரதனென்றுரைக்கு | 74 |
| பல்கலைப்பொரு | 39 |
| பல்கவர்ச்சலாகை | 116 |
| பல்லியமுழக்க | 60 |
| பல்விதத்தெருட்சி | 64 |
| பழுதறுகுணத் | 18 |
| பற்றலர் சமரப் | 73 |
| பற்றிய வளங்கை | 60 |
| பற்றிலாதவர்க்கு | 104 |
| பற்றிலாருள | 103 |
| பணைத்திரள்கடக் | 114 |
| பன்முறைதுதித்த | 97 |
| பன்னரும் | 68 |
| பன்னிறமணி | 18 |

| | பக்கம் |
|---|---|
| **பா** | |
| பாகினினிதா | 50 |
| பாய்கதிர்க்கிரண | 21 |
| பாய்திரைப்புணரி | 45 |
| பாரின்வாய்ந்திடு | 28 |
| பார்மகள் பசுவிற் | 72 |
| பாலெனத்திகழும் | 99 |
| பானிறத்தரிக்கு | 112 |
| **பி** | |
| பின்னருமனந்த | 105 |
| பின்னுமன்னவ | 34 |
| பின்னுமன்னவன் | 80 |
| பின்னுமானிலஞ் | 30 |
| **பு** | |
| புகழினேங்குட | 72 |
| புயரெருடுகதிர் | 46 |
| புலவுநாறுவெண் | 62 |
| புன்புலால் கமழு | 19 |
| புன்னிலத்திற் | 15 |
| **பூ** | |
| பூங்கணைக் கிழவனை | 115 |
| பூங்குழல் | 107 |
| பூமகண்மணந்த | 50 |
| பூவெலாம் வண்டொலி | 102 |
| **பெ** | |
| பெய்வனமுழுது | 110 |
| பெருமைமிகுங் | 86 |
| **பை** | |
| பைங்கழைவே | 59 |
| பைத்தலைத்துளை | 23 |
| பையவாளரவம் | 25 |
| **பொ** | |
| பொங்கர்வாயுந் | 11 |
| பொங்குதண் | 2 |
| பொய்கைமீக் | 75 |
| பொய்கைவாயினம் | 29 |
| பொய்யிலாமறை | 12 |
| பொருசிலைவேனி | 54 |
| பொருதிசை | 7 |
| பொருள்மணித் | 29 |
| பொற்குவையுருக்கி | 49 |
| பொற்பினுக்கணி | 40 |
| பொன்குயிற்றி | 27 |
| பொன்பூத்தகிளர் | 58 |
| பொன்மகள் | 15 |
| பொன்னகரனைய | 121 |
| பொன்னிறச்சிலை | 5 |
| பொன்னினுடைய | 117 |
| பொன்னெடுமணி | 56 |
| **ம** | |
| மங்குலாங்ககன்றன | 104 |
| மங்குல்கண்டழகு | 95 |
| மங்கைநற்றவ | 123 |
| மங்கைபங்கனே | 80 |
| மங்கைபாக | 93 |
| மடலவிழ்த்திள | 44 |
| மணமகளைமுற்ற | 60 |
| மதிமுகங்கண். | 16 |
| மதிமுடிப் பெருமாள் | 105 |
| மத்தமாகளிற்ருள் | 61 |
| மந்தரபுயத்தழகு | 49 |
| மந்தரமனையதோள் | 122 |
| மந்திர விதியா | 110 |
| மருமலிமாலையான் | 64 |
| மற்புயத்துக் | 12 |
| மற்றடம்புய | 31 |
| மற்றவரனையரு | 96 |
| மற்றவர்க்குமிவ் | 119 |
| மற்றவன்பின் | 101 |
| மற்றவ்வாறு | 125 |

| | பக்கம் |
|---|---|
| மற்றிணையில்லான் | 105 |
| மற்றினிச்செய்வ | 95 |
| மற்றுமண்டப | 84 |
| மற்றைமன்னவர்க | 96 |
| மற்றையகிளைஞரு | 94 |
| மற்றைய பகற்றின் | 61 |
| மற்றையனசெய் | 60 |
| மற்றையோர்க்காறு | 91 |
| மற்றையைந்து | 125 |
| மற்றைவைகலு | 78 |
| மனக்கவின்செயி | 36 |
| மனங்கவர் வனப்பி | 54 |
| மனத்திறலறிய | 19 |
| மனமகிழ்ந்தவர் | 40 |
| மன்னரியாரும் | 26 |
| மன்னர்மூவரின் | 30 |
| மன்னவர்கள்புகழ் | 61 |
| மன்னவர்புகழ்தரு | 94 |
| மன்னவர்புகழ்பெரு | 115 |
| மன்னவர்புகழ்பெறு | 44 |
| மன்னவர் மனவா | 68 |
| மன்னவர்பதமலர் | 99 |
| மன்னனிவ்வண்ணம் | 81 |
| மன்னனிவ்வா | 66 |
| **மா** | |
| மாசிலாதவ | 41 |
| மாசிலாவுயிர்த்துணை | 101 |
| மாதருய்த்து | 38 |
| மாதவக்கொழுந்து | 69 |
| மாதவத்துயர்ந்த | 103 |
| மாதவனைவலம் | 56 |
| மாதிடத்த குவளை | 38 |
| மாயிரும்புவி | 64 |
| மாலினுணரா | 80 |
| மாற்றலருயிர் | 45 |
| மான்பிடித்த | 3 |

| | பக்கம் |
|---|---|
| **மி** | |
| மிகவெழில் சிறந்தன | 121 |
| **மு** | |
| முகிலின்மீது | 28 |
| முக்கணுளிருக்குஞ் | 88 |
| முசலிமாநிறத்த | 5 |
| முட்டிலாதன | 32 |
| முத்தலைகொழித்து | 70 |
| முந்தைநூற்படி | 70 |
| முந்தையின் விதியா | 110 |
| முல்லைமென்முகை | 39 |
| முற்றுணர்ந்தோர் | 11 |
| முன்னமென்குல | 69 |
| முன்னவர்பின்னவர் | 121 |
| முன்னையினுஞ் | 126 |
| முன்னைவெம்பவத் | 76 |
| **மெ** | |
| மெய்வருந்திய | 40 |
| **மே** | |
| மேய்கானக | 78 |
| மேற்றிசைக்காருக | 89 |
| **மை** | |
| மைந்தரு மகளிரு | 46 |
| மைநிறைந்தகான் | 84 |
| மைந்தன்வந்து | 124 |
| மையில்கேள்வி | 4 |
| மையில் சிந்தை | 38 |
| மையெனநிறத்த | 5 |
| **வ** | |
| வச்சிரத்தன | 16 |
| வஞ்சமிலுழையரை | 97 |
| வஞ்சமெஞ்சின | 37 |
| வடிவாள்கொடுங் | 19 |

| | பக்கம் |
|---|---|
| வடுவின் மா நில | 28 |
| வட்டவாண்முக | 16 |
| வணங்கிமாதவ | 68 |
| வணங்கிமாழை | 124 |
| வண்டணிகுழலாள் | 107 |
| வண்டலம்புமறற்கு | 37 |
| வண்டுலாங்குழலாண் | 72 |
| வண்டுலாந்தெரியல் | 52 |
| வந்தபின்கபிலை | 103 |
| வந்தவன் மனைக்கு | 108 |
| வந்துவேதிகை | 117 |
| வந்தவந்தவர் | 124 |
| வந்தமாதவர் | 68 |
| வந்தவ்வம்புய | 81 |
| வயிர்த்திடுங்கரிய | 90 |
| வயிர்த்திருபழுமரம் | 95 |
| வலவனுலெடுத் | 69 |
| வல்லபல்கலை | 36 |
| வழுவிலாமணி | 42 |
| வளர்ந்தவந்த | 30 |
| வல்லுணர்ஞான | 49 |
| வள்ளவாய்வன | 10 |
| வனப்பின்மிக்க | 31 |
| வனப்பின்மேம்படு | 85 |
| **வா** | |
| வாசமலர்த்தொடை | 116 |
| வாசமொய்த்த | 39 |
| வாயிலோருரைத்திட | 99 |
| வாரணத்துரிவை | 97 |
| வாரணுசியே | 76 |
| வாரிசூழுலகம | 96 |
| வானவர் மரிகடல் | 114 |
| வானவாம்பணைத்த | 13 |
| வானிற்கூறினன் | 85 |
| வானிஞேங்கிய | 83 |
| வான்மிசையிளமதி | 44 |
| வான்ரெடர்ந்து | 42 |
| **வி** | |
| விடையுயர்த்தவ | 121 |
| விண்டினம் பல | 43 |
| விண்ணிடைநிமிர் | 45 |
| விண்ணும்மண்ணும் | 32 |
| விதிமுறைநான்கு | 19 |
| விதிமுறை வழுவா | 109 |
| வித்தக வறிவிற் | 105 |
| வித்துவித்தின | 10 |
| விலங்கல்வில்லன | 16 |
| **வீ** | |
| வீசொளிவயிரத் | 20 |
| **வெ** | |
| வெண்டளவருப்பு | 13 |
| வெண்ணிறத்தவெண் | 3 |
| வெய்யவனுக் | 47 |
| வெள்ளடைபாகு | 115 |
| **வே** | |
| வேதவிதியிற் | 60 |
| வேதவேள்வி | 31 |
| வேதியர்க்கிருநிதி | 66 |
| வேந்தர்கோ | 99 |
| வேலினைக்கயலை | 55 |
| வேழவிலிஞ | 50 |
| வேள்விநாதன்மணி | 118 |
| வேனில்வேளனைய | 28 |
| வேனில்வேளும் | 37 |
| **வை** | |
| வைகல்சிலசென்ற | 123 |
| வைகரேறும் | 39 |
| வைத்துநன்குறத் | 41 |
| வையமென்னு | 36 |

# பிழை திருத்தம்

—:0:—

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 13 | 18 | வானவாம | வானவாம் |
| 16 | 6 | சொற்கவியபுல | சொற்கவிப்புல |
| 30 | 12 | யுற்றனள் | யுற்றனன் |
| 38 | 9 | தேவு | தேசு |
| 54 | 17 | கரும்பன் | கரும்பன |
| 62 | 17 | கேந்திரன் | சேந்திரன் |
| 62 | 23 | மகிபதியின் | மகிபதியீன் |
| 63 | 3 | நாமத்தான் | நாமத்தாள் |
| 77 | 5 | அன்ன | இன்ன |
| 76 | 3 | பொண்மணி | பொன்மணி |
| 77 | 27 | தணைப்து | தணைந்து |
| 84 | 23 | மிணைபிலா | மிணையிலா |
| 89 | 4 | திறத்நினு | திறத்தினு |
| 99 | 20 | னெழுங்தாங் | னெழுந்தாங் |
| 101 | 4 | தழுது | தழுவு |
| 104 | 17 | ஏனநினைந் | எனநினைந் |
| 105 | 5 | பூத்தரன் | பூத்தான் |
| 106 | 27 | புரிவாள் | புரிவான் |
| 107 | 23 | அழிவுறுய் | அழிவுறும் |
| 111 | 1 | எண்ணிய | எண்ணில |
| 111 | 26 | தெக்கணுக்கிளி | தெக்கணுக்கினி |

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நமது முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்து உதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை, எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

**T. R. இராமசாமி,** I.A.S.,
மாவட்ட ஆட்சியர் & இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
9—3—85.